உ

தத்துவராய சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# சசிவன்ன போதம்

[illegible]

[illegible]

[illegible]

ஆசிரியர் - ஸ்ரீமத் - கோ. வடிவேலு செட்டியார்

அவர்களா லியற்றப்பட்ட

வசனம் - பதவுரை - விசேஷ உரையுடன்

கூடியது.

அணா பன்னிரண்டு.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

தத்துவராய சுவாமிகள்

திருவாய்மலாந்தருளிய

# சசிவன்ன போதம்

ஆசிரியர் - ஸ்ரீமத் - கோ. வடிவேலு செட்டியார்
அவர்களா லியற்றப்பட்ட

**வசனம் - பதவுரை - விசேஷ உரையுடன்
கூடியது.**

---

அபிராமம் - ஸ்ரீமத் - உ. அ. செய்யது முகம்மது சாயப்
*அவர்களது பொருளுதவியால்*

ஸ்ரீமத் - கோ - வடிவேலு செட்டியாரவர்களாலும்
ஸ்ரீமத் - ம. ஷண்முக முதலியாரவர்களாலும்
*அச்சியற்றப்பட்டது.*

*காபிரைட்*] 1923. [*விலை அணா* 12.

PRINTED AT THE
NOBLE PRESS, TRIPLICANE
MADRAS S. E.

## தத்துவராய சுவாமிகள்

# சரித்திரம்.

வடக்கே திருவேங்கட மலையையும், தெற்கே குமரியாற்றையும், கிழக்கே கடலையும், மேற்கே கடலையும் எல்லையாகவுடைய தமிழ் நாட்டின்கணுள்ள தொண்டைநாடு, மகதநாடு, சோழநாடு, பாண்டிநாடு, மலைநாடு, துளுவநாடு என்பவற்று ளொன்றாகிய மகதநாடு அல்லது நடுநாட்டிலே வீரைமா நகரிலே இற்றைக் கேறக்குறைய 620 வருஷத்திற்கு முன்னர்த் தமிழ் மக்கள் செய்த தவப்பயனாக வைதிக சைவப்பிராமண வருணத்திலே புண்ணிய மூர்த்திகளிருவர் அம்மான் மருகனென்னும் முறையையுடையவர்களாகத் திருவவதாரஞ் செய்தார்கள். அவர்கள் நல்லாசிரியரையடுத்து வடமொழி தென்மொழிகளுட் கற்க வேண்டியவற்றை யையந்திரிபறக் கற்று அறிவொழுக்க முடையவர்களாய் வளர்பிறைபோல வளர்ந்து வருங்காலத்தில், அவர்களுள் ஒருவர் தத்துவவிசாரமும் மற்றொருவர் சொரூப விசாரமுஞ் செய்து வந்தமையின், அவ்விருவரும் முறையே தத்துவராய ரென்றும் சொரூபானந்தரென்றும் காரணப் பெயர் பெற்று விளங்குவாராயினர்.

**தத்து**வராயரும் சொருபாநந்தரும், நீக்கமற்ற நண்புடைய
வராய்க் கல்வி கேள்வி யறிவொழுக்கங்களால் மேம்பட்டுப் பிரம
சரிய நிலையினின்றுந் தவறாது விளங்கி வருங்காலத்தில் ஒருநாள்
அவ்விருவரும் நாம சற்குரு மூர்த்தியையடைந்து, தத்துவோப
தேசம்பெற்று, உயர்வற வுயர்நல முடைய முத்தியினையடைதல்
வேண்டும்; இதுவே மனிதப்பிறப்பின் பயனாகுமென்று தம்முட்
பேசி யொரு முடிவிற்குவந்து நீயால் வருந்துவோன் தண்ணீ
ரைத் தேடுமாறு போன்று சற்குரு நாதனைப் பிறவிப்
பிணியை யொழிக்குமாறு தேடுவோராயினர்; இவர்கள் புண்
ணிய க்ஷேத்திரங்களிலும், புண்ணிய நதி தீரங்களிலும்
இன்னும் பல விடங்களிலும் பலநாள் தேடிப் பார்த்
தும் சிவசொரூபமாந் தேசிகமூர்த்தி தமக்கெதிர்ப் படாமை
யால் மிகவும் வருத்தமுற்று, நம்முள் யாவர்க்கு முன்னர்ச் சற்குரு
நாத னனுக்கிரகங் கிடைக்கின்றதோ அவர்கு மற்றவர் சீடரா
தல் வேண்டுமென் றுறுதிசெய்து கொண்டார்கள். பிறகு சொரூ
பாநந்தர் தெற்கிலும் தத்துவராயர் வடக்கிலுமாகப் பிரிந்து
போனார்கள். தெற்கே சென்ற சொரூபாநந்தர் திருப்பைஞ்ஞீலி
யென்னும் சிவக்ஷேத்திரத்தையும், திருவெள்ளறை யென்னும்
விஷ்ணு க்ஷேத்திரத்தையும் தன்பக்கத்தே யுடையதாயிருக்கின்ற
கோவத்தமென்னு மூரையடைந்தபோது அவர்க்கு வேர்த்தல்
கண்ணீர் ததும்பல் முதலிய நற்குறிகளுண்டாயின; உண்டா
கவே, அவர் இந்தப்பதி நமது குருநாத னெழுந்தருளி யிருக்குந்

திருப்பதியாகும் என்று சிந்தித்து ஊரினுட் சென்று, அங்குள்ளாரை நோக்கி இங்கே மகாத்மாக்க ளெழுந்தருளி யிருக்கின்றாரகளோ வென்று வினவினர். அதற்கவர்கள் இவ்வூர்ப் புறத்திலே நாணற் புதரொன் றிருக்கின்றது; அப்புதரிலே ஒரு பெரியவரிருக்கின்றார்; அவர் பெயர் சிவப்பிரகாச சுவாமிகள்; அவர் எப்போதாவது மாலைக் காலத்திலே அப்புதரினின்றும் வெளியே வருவாரென்று கூறினார்கள். அது கேட்ட சொரூபானந்தர் அப்புதரிருக்குமிடஞ் சென்று அவரது வருகையை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தார் அவ்வாறவர் காத்துக்கொண் டிருக்குங்கால் ஒருநாள் மாலையிலே சிவப்பிரகாச சுவாமிகள் வெளியே வந்தார், அதுகண்டு சொரூபானந்தர் "சைதந்யம் ஸாஸ்வதஞ் சாந்தம் வியோமாதீதம் நிரஞ்சநம், நாதபிந்து கலாதீதம் தஸ்மைஸ்ரீ குரவேநம" என்று கூறித் துதித்து அவரது திருவடியில் விழுந்து நமஸ்காரஞ் செய்து, அடியேனைப் பிறவிப் பெருங்கடலினின்றுங் கரையேற்ற வேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

அவர் இவன் அதிதீவிரதர பக்குவனென்று குணங்குறிகளால் அவரைச் செவ்விதாக வறிந்து, சொரூபானந்தருக்கு "நினைவரிய வொரு பிரஹ்மம் நீயே" என்று தத்துவோபதேசத்தை ஐயந்திரிபிலலாவாறு செய்தனர். அதனால் அவர் சகஜ நிஷ்டை பெற்றவராகி யவ்விடத்திலேயே யிருந்தார். இஃதிங்ஙனமாக, வடக்கே சென்ற தத்துவராயர் குருநாதன் கிடைக்கப் பெறாமையால் மழையில்லாப் பயிர்போல மனம் வாடித் தெற்கே வந்து

கோவத்தத்தில் சொரூபாநந்தரைக் கண்டு பரவச முற்ற நடந்த வரலாற்றினைச் செவ்விதாக வறிந்து அவரிடத்து, ஒரு மொழியி னுண்மைப் பொருளை யுள்ளவாறறிந்து, நிர்விகற்ப நிஷ்டை கூடி நிரதிசயாநந்த வடிவமாக விளங்கி யிருந்தார்.

இவ்வாறிருக்குங் காலத்தில் சொரூபாநந்தர் தமிழிற் கவிபா டுந் திறமை கருவிலே யமையப் பெற்ற தத்துவராயரை நோக்கி அன்பனே! நீ உலோகோபகாரமாகச் சில நூல்களியற்ற வேண்டு மென்று குறிப்பாகப் பலமுறை தெரிவித்து வந்தனர். சொரூ பாநந்தர் வற்புறுத்திக் கூறுமையாலும், நிஷ்டையின் மிகுதியா லும் நூலியற்ற வேண்டு மென்னு மெண்ணம் தத்துவராயர்க் குண்டாகா திருந்தது. அது தோன்றும்படி சொரூபாநந்தர் ஒரு நாள் அமாவாசையில் எண்ணெயிட்டுக் கொள்ள, ஏவலாளரை நோக்கி எண்ணெய் கொண்டு வருமாறு கூறினார். அது கேட்ட தத்துவராயர் இன்று அமாவாசை யெனக் கூறவேண்டி அம் என் றார். அப்போது சொரூபாநந்தர் விதிநிஷேத சூனியனை வெணக்கா, நீ விதி கற்பிக்க வந்தாய், எதிரே நில்லாதே, ஓடிப் போ என்று (வேண்டுமென்று) கடுகடுத்துக் கூறினார். அதற்குத் தத்துவராயர் மிகவும் பயந்து நடுக்கமுற்று, இனி ஞானிச்சரீரத் தோடிருத்தல் தகுதியுடையதாகாது; கடலில் விழுந்திறப்பதே தகுதியென்று குரு சந்நிதானத்தை நோக்கிக் கொண்டே பின் னடி வைத்து நடந்து பிரிவாற்றாமை காரணமாகக் கண்களில் நீர் தாரை தாரையாக வொழுக, பரமாசாரியராகிய சிவப்பிரகாச

சுவாமிகள் மீதும் ஆசிரியராகிய சொரூபானந்தர்மீதும் சிவப்பிர காச வெண்பா, தத்துவாமிர்த மென்னும் நூல்களையும், திருத்தா லாட்டு முதல் அமிர்தசார மீறாயுள்ள அடங்கல் முறையினையும் பாடிப் போம்போது தொடர்ந்து சென்ற அடியார்கள் அவற்றை அப்போ தப்போ தெழுதிக் கொண்டு போய்ச் சொரூ பானந்தர் முன்னர் வைத்தார்கள். அவர் அந்நூல்களின்மீது விருப்ப மில்லாதவர் போல மயிருள்ளவன் வாரிமுடிப்பது போல வாயுள்ள வன் பாடியனுப்புகின்றா னென்று கூறிக் கொண்டிருந்தார். இஃதிங்ஙனமாக, தத்துவராயர் குரு தரிசனங் கிட்டாது போனமை பற்றி மிகவும் வருத்த முற்றுப் பாடுதுறையில் திரு வடிமாலையைப் பாடிக் கொண்டு கடலில் விழுந்திறக்கச் சமீபித் துச் சென்றதை அடியார்களுட் சிலர் விரைந்தோடி வந்து சொரூ பானந்தர்க்குத் தெரிவித்தார்கள். அதற்கவர் "அந்தக் குருவிற்கு வீங்கியை வரச் சொல்லுங்கள்" என்று கட்டளையிட, அவ்வடியார் கள் விரைந்தோடிப் போய்த் தத்துவராயர்க் கதனைத் தெரிவித் தார்கள்; அதனாலவர் அங்கமெல்லாம் பூரித்து என்னையும் சுவாமி வரக் கட்டளையிட்டதோ? என்பிழையையும் பொறுத்தருளிற்றோ? என்று தழுதழுத்துக் கூறிப் பின்னர், "ஆடுங்கழலா மடியி லொ ளித்தக்கால், தேடுவ தில்லையென் றாடாய்கழல், திருவடி யல்ல தென் றாடாய்கழல்" என் றிறுதியாகவுடைய பாடுதுறையைப் பாடிக்கொண்டே வந்து சொரூபானந்தரை யடைந்து "பிழை பொறுத்தருள்க" என்று பலமுறை வணங்கி, அவரிருவெனக்

கூற, பரவசப்பட்டிருந்து பணிவிடைகளைச் செய்து கொண்டிருந்தார். இவ்வாறிருக்கும்போது சொரூபாநந்தர் தத்துவராயா பாடிய நூல்களைச் செவ்விதாக வாராய்ந்து பார்த்துப் பெருமகிழ்ச்சி யடைந்து அதை வெளியே காட்டாது தத்துவராயரை நோக்கி அன்பனே! இந்நூல்கள் உனக்கே உபயோகமாம்; பொதுவாக யாவர்க்கு முபயோகமாகா என்று கூறினர். கூறின வச்சமயத்தில் மடைத் தொழிலாளர் சொரூபாநந்தரை யமுது கொள்ள வழைத்தார்கள். அவர் அமுதுகொண்டு வருவதற்குள் தததுவராயர் குருமூர்த்தியின் குறிப்பைச் சிந்தித்துணர்ந்து மோகவதைப் பரணியில் ஒரு பிரகரணமாக வமைத்துச் சசிவன்ன போதத்தைப் பாடிமுடித்து, குருமூர்த்தி வந்ததும் அவர் திருவடியில் அந்நூலை வைத்து வணங்கினர். அதனைச் சொரூபாநந்த சுவாமிகள் பார்த்து வியந்து பெருமகிழ் வடைந்தனர்.

பிறகு தத்துவராய சுவாமிகள், ஈசுவரகீதை, பிரமகீதை முதலிய நூல்களைப்பாடி முடித்து நிர்விகற்ப சமாதி புரிந்திருந்தார். இவரிவ்வா றிருக்குங் காலத்தில் யாத்திரை செய்துவந்த சில ஆராத்தியர்களும் சில வித்துவான்களும் சொரூபாநந்தரது சந்நிதானத்திருந்த தத்துவராயர் முன்னர் வந்து போர்முகத் தாயிரங் களிற்றியானையைத் தனக் கூறுபாடின்றிக் கொன்ற வீரனைத் தலைவனாகக் கொண்டு பாடப்படும் பரணியென்னும் பிரபந்தத்தை வீரமென்பதைச் சொப்பனத்தும் பெற்றிலாத உம்முடைய குருவைத் தலைவனாகக் கொண்டு அஞ்ஞவதைப்பரணி

மோகவதைப்பரணி என்னும் பிரபந்தங்களை நீரபாடிய தெவவா றமையும் என்று வினவ, அதற்கவர் நமது தேசிகோத்தமர் தம்மை யடுத்த அளவிறந்த சிஷியர்களது அகங்காரமாகிய யானை களை யுபதேசமாகிய போர்முகத்திலே மிக வெளிதாகக் கொன்று விடுகின்றமை பற்றி அப்பிரபந்தங்களைப் பாடினேமென்று கூறினர். அதற்கவர்கள் நீர்கூறும் அகங்காரமாகிய யானை நேத்திரேந்திரியத்தா லறியப்படுவதன்றாகலின், அது பொருந் தாது ; பொருந்துவதாகக் கொள்ளினும், ஒரு சிஷ்யனது அகங் காரமாகிய யானையைக் கொல்லுவதற்கு அநேக நாள் வேண்டுமே; உமது குரு ஏககாலத்தில ஆயிரஞ் சிஷ்யர்களது அகங்காரமாகிய யானைகளைக் கொல்லுவ தெவ்வாறமையு மென்று வினவ, அதற் குத் தத்துவராய சுவாமிகள், அதனை யவாகட்கனுபவமா காட்ட வேண்டுமென்று கருதி விடைகூறாது மனதை யுள் விழிப்பார்வையாக்கிச் சமாதி கூடி யிருந்தார். ஆட்சேபஞ்செய தவர், சொரூபாநந்தரது சந்நிதான விசேஷத்தால் இராப்பகல் அறியாது மூன்றுநாள் பரியந்தம் நிருவிகற்ப ஸ்திதியினைப் பெற் றிருப்பாராயினர்; நான்காம்நாளில் தத்துவராயர் சமாதிகலைந்து வெளிமுகமாயபோது அவர்களும் வெளிமுகமாய், சொரூ பாநந்தரையும் தததுவராயரையும் பலமுறை வணங்கித் துதித்து நாங்கள் அஞ்ஞானத்தின் மிகுதிப்பாட்டால் ஆட்சேபித்தோம்; தங்களது சந்நிதான விசேஷம பதினாயிரஞ் சிஷ்யர்களது அஞ் ஞானத்தையு மேககாலத்திலொழிக்கு மாற்றலுடையதென்று கூறினர்கள்; வித்வான்கள் தத்துவராயரது பிரபந்தங்கட்குப்

போமுறுக் கவிகள் புகல, யாவரும அவ்விரு மூர்த்திகட்குஞ்
சிஷ்யர்களாகிச் சென்றார்கள். பிறகு சொரூபாநந்தர் உலகோப
காரமாகத் தமிழிலுள்ள வேதாந்த சாஸ்திரங்கள் பலவற்றையும்
நன்காராய்ந்து வேண்டிய செய்யுட்களை யதிகார வடைவாக
வெடுத் தமைத்துத் தமது குருமூர்த்தியின் பெயர் விளங்கச
சிவப்பிரகாசப் பெருந்திரட்டென்றொரு நூலைத்திரட்டி யருளி
ஞா. சிவப்பிரகாசப் பொருந்திரட்டென்று சொல்லப்படு மந்தத்
திரட்டைத் தத்துவராயர் சங்கிரகமாகத் திரட்டி, இடையிடையே
தாம வகுத்த வகுப்பிற் கேற்ற வண்ணம் 424 செய்யுட்களைச
சேர்த்துக் குறுந்திரட் டென்றொரு நூலைத் திரட்டியருளினர்.
பின்னர்த்தத்துவராயர் சொரூபாநந்தரை(கண்)இமைபோற் பிரியா
திருந்து வருங்காலத்தி லொருநாள், சொரூபாநந்தர் தத்துவ
ராயரை விட்டுப் பிரிந்து போவாராயினர். அதுகண்டு, தத்துவரா
யா அவரைப் பின் தொடர்ந்து போகையில், சொரூபாநந்தா
காடென்றும் மலை யென்றுங் கருதாது பலவிடங்கட்குச் சென்று
திரிந்து பின்னர்க் கடற்கரையை யடுத்துப்போய்க் கடலின்மீது
தமது யோகமகிமையாற் போவாராஞர்; பிரியாது கூடவே
சென்ற தத்துவராயர் தாம் செல்லுவதற்குக் கடலிடங் கொடுக்கா
மையாகப் பெருங்கவலையுற்று, தேசிகோத்தமரை நினைந்து
நினைந்து இளங்கன்றைப் பிரிந்த பசுவைப் போலக் கதறிக் கதறி
யழுது தேடிச் சோர்வுற்றபோது, சொரூபாநந்தர் அவர்க்குத்
தரிசனந் தந்து சிலநா ளவருடனிருந்து திருநெல்வேலிக்கு வட
க்கு ஆற்றங்கரை யோரததுள்ள சேந்தமங்கலத்தில் பரிபூரண
தசையை யடைந்தார். தத்துவராயர் சிதம்பரத்திற்கும் விருதா
சலத்திற்கு மிடையேயுள்ள எறும்பூரில் மகா மௌன தசையை
யடைந்தார்.

ஓம்.

குச ாக

பராபரிரிமசி ன ம

# சிவஞான போத வசனம்.

(தத்துவராய சுவாமிகள் திருவாய்மலர்ந் தருளிய அடங்கல் முறை-மோகவதைப் பரணியிலுள்ள பேயிரங்கலில்) பேய்கள் தேவியை நோக்கி,

“அரூப மாகிய மெய்ம் முழுமுதல்
ரூப மாகி வரும்படி யெங்ஙனே”
—என்று வினவியதற்குத்

தேவி

அருவ மாயினு மன்பர்க் குருவமாய்
வருவ னென்பது மாமறை கூறுமே
“பத்தி யாம்வலை யிற்படும் பார்மிசைப்
புத்தி யாலறி வொண்ணுப் புராணனே”
—என்று திருவாய்மலர்ந்தருளினள்.

### பேய்கள்

"தேவி யிப்படி கூறத் திருவாநல்
பாவி பேய்கட் கென்று பகைக்கவே"

### தேவி

### * சசிவன்ன போதத்தைக் கூறுவாளாயினள்.

### நூற்பயன் கூறல்.

1. அலகை யச்ச மறவக வான்களு
முலகின் முத்தி பெறும்பரி சோதுவாம்.

பேய்களே! இம்மண் ணுலகத்தில் பாவிகளும்

---

* சசிவன்ன போத மென்பதன் பொருள் சசிவன்னனது சரித்திரத்தைக் கூறும் நூலென்பதாம்; இது "கிள்ளி குடி (கிள்ளியினது குடியிருக்கு மூர்)" என்பதுபோல, ஆறும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை நிலைத் தொடர் மொழியாம். சசிவன்ன (சசிவர்ண)ன் என்பதன் பொருள் சசி (சந்திரன்) போலும் வெண்ணிற முடையவன் (வெண்குஷ்டரோகி) என்பதாம்; போதமென்பதன் பொருள் இங்குக் கூறுதல் அல்லது அறிவித்த லென்பதாம். சசிவன்னனென்பது அவனது சரித்திரத்தை யுணர்த்துதலின், பொருளாகு பெயராம்.

பிறவிகளுஞ் சம அசசமொழிய, யாமு முதற்பெறும் மார்க்கத்தைக் கூறுகின்றோம், நீவிர் கவனமாய்க் கேட்பீராக 1.

## ஞானி திருநோக்கின் மகிமையைக் கூறல்.

2. புண்ணாந்த பாவமே லாம்பரி பூரண
முணாந்த ஞானி விழிபட வோடுமே

ஏவாசனைத் தொன்று தொட்டுத் தொடர்ந்து வந்த பாவமனைத்தும், அவைகளமீது, தம்மைப் பரிபூரண பரசிவ வடிவமாக வுணர்ந்த ஞானிகளது நோக்கம் (கருணையோடு) பட்டமாத்திரத்தில (சூரிய வொளி பட்டமாத்திரத்தில் இருள் கெடுவது போலக் கெட்டொழிவனவாம். 2.

வராகோபநிஷத்து நான்காவததியாயத்தில் "எவனது புத்தி அநுபவத்தை முடிவாக வுடையதாய் (பிரஹ்ம) தத்துவத்தில் பிரவிஷ்டித்திருக்கின்றதோ அவனது பார்வையிற் பட்டவர் யாவரும் சர்வ பாவங்களிலிருந்தும் விடுபடுகின்றனர்" என்று கூறுவது இங்குணர்தற்பாலதாம்.

## ஞானி திருநோக்கத்தால் நற்பேறு பெற்ற ஒருவனது சரித்திரங் கூறல்

வேறு

3 எதிலாரு ஞானி புகழென்னை கூற
லுயர்வீ டிவன்சொல் வழிசெய்
தொழிலாளர் சேர்கை யதுகேளு முன்னை
யிதிகாச மொன்று சொலவே

*சலமிலனாகிய பிறந்த ஞானியின் புகழை யளவிட்டுக் கூறல் என்னாலும் முடியாது. சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமையதாகிய மோட்சத்தை இந்த ஞானியினது உபதேசத்தின் வழியே சென்றொழுகினோர் அடைதல் கூடும். அதுபற்றி ஒருபழைய இதிகாச மிருக்கின்றது. அவ்விதிகாசத்தைக் கூறுகின்றேம். கேட்பாயாக.* 3

*ஞானியின் புகழை அளவிட்டுக் கூற முடியாதென்பது "ஞானதா [illegible] ருடைய ஞானோத்கர்ஷத்தின் வைபவத்தை, [illegible] தாரை [illegible] கொண்டாறு" என்று திருக்கநாள் கூறுதலாலு நன்கு விளங்குமாம்.*

## இவ்விதிகாசம் திருமாலுக்குச் சிவன் செப்பியதெனக் கூறல்.

4. தந்தாப மற்ற பரனேவல் செய்த
வவனுற்ற பேறு தனைமுன்
செந்தா மரைக்கண் முதல்வற்கெம் மண்ண
றிருவாய் மலர்ந்த திதுவே.

தன்னை(உடம்பை)ப்பற்றி வருந் துன்பம் பிற வுயிர்களைப் பற்றி வருந் துன்பம், தெய்வத்தைப் பற்றி வருந் துன்பம் என்னும் மூவகைத் துன்பமு மில்லாத பரமனது குற்றேவலைச் செய்த அந்தச் சிஷ்யனடைந்த மோட்ச சரித்திரமாகிய இவ்விதிகாசம் முற்காலத்தில் செந்தாமரைக் கண்ணனுக்கு எமது சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளியதாம். 4.

செந்தாமரைக் கண்ணன்-விஷ்ணு. இவ்விதிகாசம் கந்த புராணம்-சூதசங்கிதை-முத்திகாண்டம்-ஞானி பணிவிடைப் பேறுசொற்ற அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

## இவ்விதிகாசம் இஃதெனக் கூறல்

5. உவமிப்பின் ஞானி விழிபட்டு முன்னை
வினைவிட்டு முத்தி புலகிற்
றவமற்று வெய்ய வினையே புரிந்த
சசிவன்ன னெய்து கதையே.

*இவ்விதிகாசம் தவநெறியிற் செலவொழிந்து கொடுவினைகளையே செய்துவந்த சசிவன்னனென்பவன் தமக்கொப்பில்லாத மாதவத்தி பராயணனென்னும் ஞானியினது கிருபாநோக்கம் பட்டமையால், பழவினையினின்றும் நீங்கி மோட்சமடைந்த கதையாகும்.* 5.

*தவநெறி-இந்திரிய விர்த்திகளையும், மனோ விர்த்திகளையும் தடுக்கும் வழி.*

## சசிவன்னனது தீயொழுக்கத்தைக் கூறல்.

வேறு.

6. ஏமம் புகுவா ருளபா தகரா
மியாவர்க்குளு மிக்கவ னாதமிவ
னாமம் புகல்வார் குலமும் மெரிவாய்
நரகம்புகு மாறு நடந்தனனே.

*இறைக்காவ லடைதற் குரியவராயுள்ள பாதகர்*

யாவருநாளும் பேமபாடுடையவனை இச்சசிவன்னன் தன் பகைவரைக் கூறுவாரது சந்ததியாரும் எரிவாய் நரகத்திற் படையுமாறு தீவினைகளைச் செய்து வந்தனன். 6.

சிறைக்காவல்-காவற்கூடம், அல்லது சிறைச்சாலை. எரிவாய நரகம்-மாபூதியென்னும் நரகம், அது அக்கினியைக் கக்கிக் கொண்டிருப்பதாம்.

சசிவன்னன் சிவனடியாரையும், சிவத்தையும, வேதத்தையும, விபூதியையும, தருமத்தையும எப்போதும நிந்தனை செய்து வருவான. அவன் களவு செய்யாத நாளே யில்லையாம். தன்னை யடுத்தவரைக் கெடுக்காது அவன் விடுவதில்லையாம. ஸ்திரீகளையும் உறவினரையும், வாலிபரையும், கருவையும, பசுவையும், வேதியரையும் அழிக்க அவன் ஒவ்வொருநாளும் முயற்சிசெய்து வருவான். பிறர் வீட்டில நெருப்பு வைப்பது அவனுக்கு மிகு விநோதமான விளையாட்டாம். அவன் பிறரை விஷமருந்து கொடுத்துக் கொன்றும், பாதகப்பொடி (சொக்குப்பொடி) தூவி மயக்கியும், அவர்களிடத்துள்ள பொருள்களைப் பகரித்துக் கொள்வான், யாராவதொருவர்க்கு அடிமைப் பத்திர மெழுதிக்கொடுத்து, அவரிடத்து பொருள் பெற்று வேலாளாகச்சென்று வஞ்சனை

பலவுஞ்செய்து, அவரைப் புறக்தே நிந்தித்துப் பழித்தும், அவர்மீது கோள்சொல்லியும் வருவான்; ஒருவனிடத்துச் சிநேகிதன் போலச் சென்று பேசி, விருந்துண்டு, பின் அவன் வீட்டில் களவுசெய்து, அப்பால் அவனுக்குச் சத்துரு வாகவிருந்து, அவனைக் குறைத்துப் பேசி, அவன்மீது தான் கொண்ட கோபத்தை, அவன் தனிவழியில் வரும்போது சென்று, அவனை யடித்துத் தீர்த்துக்கொள்வான், பொய்ப் பத்திர மெழுதிக் காட்டி, பலரது நிலங்களையும் பொருள் களையு மபகரித்துக் கொள்வான், பிராமண சந்நியாசி வேடங்கொண்டு பலர் செல்லும் வழியிலிருந்து வருகின் றவரிடத்து ஞானியைப்போலப் பேசிப் பொருள் பெறு வான்; ஒரு பறைச்சியைத் தனக்குரிய மனையாளாக்கிக் கொண்டான்; தன்னை யொத்த பாவிகளோடு சிநேகஞ் செய்து வந்தான்; ஆடு மாடு முதலியவற்றின் மாம்சத் தையும், மீனையும், கள்ளையும், சாலையு முண்டு வந்தான்.

அவன் எப்போதும் தனது தந்தை தாயாது நற்புத்தி யைக் கேட்டதேயில்லை; கல்வியில் விருப்பம் சிறிது மில்லாத வனு யிருந்தான்; சந்தியாவந்தன முதலியவற்றைச் செய்வதை யடியோ டொழித்து விட்டான். ஜபஞ் செய்கின்றவரையும் தபஞ்செய்கின்றவரையும் அவன் பழிக்காததாளில்லை. அவன் கற்பழித்த பெண்களுக் களவில்லை; திருநீறுவது தரித்துக்

கொள்ளுதல் கூடாதென்று கூறப்பவைச் சீறி விழுந்து வருத்துவான் தன் வீட்டுச் சொத்துக்களை யெல்லாம் பரத்தையர்க்குக் கொடுத்துப் பாழாக்கி விட்டான் தனது தந்தை தாயார் வந்தக்கால் சிறிதுங் கவனிப்பதே யில்லை, அவர்களை மிகவும் வருத்தி வருவான் அவன் திருட்டுத் தொழிலையும் அது காரணமாகப் பிறரைக் கொல்லுந் தொழிலையும் மிகு முகம்பமாகக் கொண்டு, பரத்தையர் வீடுகளிலே வசித்து வந்து, முடிவில் தான் விரும்பிக் கொண்ட ஒரு பறைச்சி வீட்டிலேயே வசித்து வந்தான், இப்பாதகங்களை யன்றி இன்னும் பல பாதகங்களையுஞ் செய்துவந்தான் அந்தப் பாதகங்களுக்கு அளவில்லையாம்

**சசிவன்னனது பாவ கருமத்தின் வலியால அவனது முன்னோர் நரகத்தை யடைந்தா ரென்ல**

7 மலமேவிய த்விணையின் வலியான
மகிழ்ம்பா பகத்தி லிருந்தவிவன்
குலமேவிய தென்புல வாணர்களுங்
கோடிதாநர கங்குடி யேறினரே

**சசிவன்னன்** அறியாமையினால் பெருக்கத்தகால **செய்த** (மேற்கூறிய) மகா பாதகங்களது வலி ம

யால், (களிப்பைப் புண்டாக்கும்) சுவர்க்கலோகத்திலிருந்த இவனது வம்சத்திற் பிறந்த பிதிர்க்கள் யாவரும் அவ்வுலகத்தினின்றும் நீங்கி, மிக்க கொடியதாகிய நரகத்தை யடைந்தார்கள். 7

ஒருவன் பாவ கருமத்தை மிகுதியாகச் செய்வானாயின், சுவர்க்கத்திருக்க அவனது முன்னோர் யாவரும் நரகத்தை யடைவாரென்பது இங்குக் கவனித்தற்பாலதாம்.

**சசிவன்னன் மறுமையி லடைதற்குரிய**
**வினையின் பயனை யிம்மையிலேயே**
**யடைந்தானெனக் கூறல்**

8 மிகமேவிய புண்ணிய பாவமெனும்
வினையின்பயன் மேலொரு காலமுறு
திகமேவரு மென்பதனு வுளனோ
யெல்லாமிவ னைச்சேற வெய்தினவே

ஒருவன் மிகுதியாகச் செய்த நல்வினை தீவினைகளின் பயன் அவனுக்கு மறுமையி லுண்டாகாம லிம்மையிலேயே யுண்டாகு மென்று அறநூல் கூறுவதால், (சசிவன்னன் அளவு கடந்து செய்த

தீவினையின் ஞா வருதற் குரியனவாய்) உள்ள நோய்களைத்தும் இச்சசிவன்னனை வருத்துமாறு வந்து சூழ்ந்து கொண்டன. 8.

நல்வினையின் பயன் சுகமாம்; தீவினையின் பயனாந் துக்கமாம். சசிவன்னன் தீவினைகளை யளவு கடந்து செய்தமையால், அவனை அத் தீவினையின் பயனனைத்தும் இம்மையிலேயே வந்து சூழ்ந்து கொண்டு வருத்தின வென்பதாம். இம்மை-இப்பிறப்பு; மறுமை-வருபிறப்பு.

நெருப்பு மிகின் நீரும், நீர் மிகின் நெருப்பும் அடங்குமாறு போல, அகருமம் மிகின் தருமமும், தருமம் மிகின் அதருமமும் அடங்குவனவா யிருத்தலின், தீவினைகளை அளவு கடந்து செய்த சசிவன்னனுக்கு அவன் சன்மாந்தரத்திற் செய்த நல்வினை சிறிதாகவேனு முற்பட்டு நில்லாதாயிற்று; ஆகவே, அவன் தான் செய்த பாவ கருமத்தின் மிகுதியால், தஷ்ட முதலிய நோய்களால் வருத்த முறுவா னாயினன்; அவனைப் பேயும் பிடித்துக்கொண்டது; பிரஹ்மஹத்தியும் பற்றிக் கொண்டது; இவற்றால், அவன் அளவிறந்த வேதனைக் காளாகி பல்லலுற்று வதைவானாயினன்.

**சசிவன்னனது தந்தை அவனது துன்பத்தைக் கண்டு சகியாது வருந்தினுனென்க கூறல**

9. தன்புத்திர னேயம் விடாமையினுற
றவறுற்ற விவறபெறு தந்தையுளந்
துன்புற்றினி யென்னேகோலோ புதல்வன்
றுயா தீரவகை யென்று சுழன்றனனே

*சசிவன்னனது பிதாவாய் உதகம போகியாய் விளங்கியிருந்த பாகயகந்தேனனுமோரா அநகண சிரேட்டன கிரமநவழியு தனது புத்திரனுகிய சசிவன்னன பெருநோயாளுமம், பிசாசாலுமம, பிரமமறைதகியாலுமம படும் அவஸ்தைகளைக் கண்டு, தன் புத்திரன்மீது வைத்துள்ள அன்புமிகைமையால, தன சித்தத்தின்கண பெருந துன்பமடைந்து, இனி இவனது துன்பம நீங்கும் மார்க்கம யாதோவென்று கலககமுற்றிருந்தான* 9.

**பாகயக்ஞன செயலைக் கூறல்.**

10. ஒன்றுலும் வினைததுயர் துயடபசலா
லொழிவிகது முபாய முனக்கிலதே
யென்றுலு மறிந்தவ னன்புவிடா
திவனைக்கோ டுழன்றன னெங்கணுமே

*பாகயகஞன் இவ்வாறு கலக்க முற்று வாந்து*

வந்த சசிவன்னன் கண்டு தந்தையே! யான் செய்த தீவினையின் பயனாகிய துன்பத்தை யானே அனுபவித்தலேயன்றி அங்ஙனம் அல்லாமல் அதனை மணி-மந்திரம் மருந்தம் என்பனவற்றால் போதொணுறு மொழி பசும் பூப்புப் பூபாலமேகவீரகத்துக் கிடைக்க மாட்டா தென்று கூறினான். அவன் அங்ஙனம் கூறியும், அவன் பட்ட துன்பங்களைப் பார்த்து வந்தும் பாதகங்களை புத்திர வாஞ்சை நீங்காமையால், தீர்த்த யாத்திரை செய்தால் ஆங்குள்ள பெரியோரது அனுக்கிரகத்தால் இவனது நோய் நீங்கி விடுமென்று கருதி, சசிவன்னனை முதுகின் மேல் சுமந்து கொண்டு பெரியோர்கள் வசிக்கும் ஸ்தலங்கள் பலவற்றிலுஞ் சென்று, தீர்த்த யாத்திரை செய்து சுற்றி வந்தனன் 10

பாதகன் தீர்த்த யாத்திரை செய்தால் அங்குள்ள பெரியோர்களது கிருபா நோக்கத்தால் தன் மைந்தனது நோய் நீங்கிவிடுமென்று கருதி, அவனை முதுகின் மேல் வைத்துக்கொண்டு தீர்த்தயாத்திரை செய்தா னென்பதாம்

### பாகயக்ஞன் சசிவன்னனது துன்பம் நீங்குதற்குரிய காரணத்தை யுணர்ந்தா னெனல்.

11. ஒருமாதவன் மற்றிவன் வேதனைகண்
டொழிவற்றுள வொன்றை யுளத்துணரும்
பரமாகிய ஞானிகள் கண்ணுறலே
பரமௌடத மென்று பகர்ந்தனனே.

பாகயக்ஞன் தன் புத்திரனது துன்பம் நீங்குமாறு தீர்த்த யாத்திரை செய்து வரும்போது, தேவபததனென்னு மொரு முனிவரைக் கண்டு வணங்கித் துதித்து, தனது புத்திரனது துன்பமனைத்தையுங்கூறி, எனது புத்திரனது துன்பம் நீங்குதற்குரிய வுபாயத்தைத் தேவரீர் கூறியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அவர் பாகயக்ஞன் கூறியதைக் கேட்டு, சசிவன்னனடைந்துள்ள கொடுந் துன்பத்தை நோக்கி மனமிரங்கி, காலம் தேசம் வஸ்து என்னும் மூன்றனிடத்தும் (கடத்தில் மண்போல) நீக்கமற நிறைந் தேகவடிவமாக விளங்கும் பரம்பொருளைத் தத்துவ விசாரத்தால் ஐயந்திரிபில்லாது தாமாக வறிந்துள்ள பரமாத்வைத ஞானிகளது கிருபா நோக்கமே

இவனது கொடிய ரோகங்களை நீக்குவதற்குப் பரம ஔஷதமா மென்று திருவாய் மலர்ந்தருளிய பின், 11.

12. தானந்த மிலாத தனைத்தருவான்
சத்தீச்சுர மென்னு மிடந்தனில்வாழ்
மானந்தி பராயண னென்பவனின்
மைந்தர்க்குறு நோய்க்கு மருந்தெனவே

சத்தீச்சுர மென்னும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் அதி தீவிர பக்தர்களுக்கு நாசரகிதமாயுள்ள பரம்பொருளை அவர்கட்கு நிஜசொரூப மென்று (ஆத்மா வென்று) உபதேசஞ் செய்தற் பொருட்டெழுந்தருளியிருக்கின்ற மாநந்தி பராயண னென்னும் பரமாத்மாவின் கிருபா நோக்கமே உனது புத்திர னடைந்துள்ள கொடு நோயை நீக்குவதற்குப் பரம ஔஷதமா மென்று திருவாய் மலர்ந்தனர் 12

சத்தீச்சுர மென்னும் திவ்விய க்ஷேத்திரம், விருத்தாசலத்திற்கு வடகீழ்த் திசையி லிருப்பதாம் அது சிவபெருமானைச் சத்தி(உமாதேவி) பூசித்தமையால் சத்தீச்சுர மென்னும் பெயர் பெற்றது , கோ (நந்தி தேவர்) பூசித்தமையால் கோபாவத மென்னும் பெயரையும் பெற்றது. “அத்தலமு நந்திபெய

நாயேனோ பருப்பதமாய்ச், சகத்தியெயாராற்சகத்திச் சாருமாயத்
தழைத்தாராலென விருத்தாசல புராணம் கூறுகின்றது

**பாகயக்ஞன் மாதந்தி பாராயண ரிடத்துச்**
**சென்று சிவஞானனது கொடுஞ் செயல்க**
**ளைக் கூற, அவர் சிவஞானனைக் கருணை**
**யோடு நோக்கினா ரெனல**

15 முடியாவுப தேசமி தென்றிவனம்
முனிவன்பத மேயதி மொழிந்தனனிக்
கொடியான்வெரு வாது தயிறறியனோ ப
கூற்றகரி தாய கொடுந்தொழிலே

இப்பாகயக்ஞன் சுவப்பகத முனிவர் திருவாய்
மலர்ந்தருளியதைக் கேட்டு, இம்முனிவர் திருவாய்
மலர்ந்தருளியது எல்லாம் பற்று உண்மைதசமாதமென்று
கருதி சகதீச்சுர மென்னும் திவ்விய க்ஷேத்திரத்திற்
குச் சென்று, மாதந்தி பாராயண ரென்னும் மகாத்து
மாவை யடைந்து, அவருடைய திருவடிகளை வணங்கித்
துதித்து அவரது சந்நிதானத்தில் சிவஞானனை நிறு
த்தி சுவாமி! இக்கொடியவனை எனது புத்திரன் ஒன்

றுக்கு மநுசாது செய்த துன்பந்தருங் கொடிய செயல்கள் அளவிட்டுக் கூறுதற்கு முடியாதனவாம். 13.

14. ஈங்குள் ளிருமுன் பகரும்படியோ
விவனெய்திய தீவினை யென்னவெலா
மீங்கும்படி தன்னநு பூதியினை
னிகழும்விழி வைத்தன னின்மலனே.

இவன் செய்த கொடும்பாதகச் செயல்களை யெல்லாம் இங்குத் தேவரீர் சந்நிதானத்தில் கூறுவது தகுதியாகாது: இவனது துன்பங்களைத் தேவரீர் கிருபா நோக்கத்தால் நீக்கியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதுகேட்டு மாநந்தி பாராயண முனிவர் சசிவன்னன்மீது கருணை கொண்டு, இச்சசிவன்னனடைந்துள்ள பாவ கருமமனைத்து மொழியும்படி, சுவானுபவத்தால் அன்றலர்ந்த செந்தாமரை மலர் போல விளங்குகின்ற தமது கிருபா நோக்கத்தால் அவனது முகத்தைப் பார்த்தனர். 14.

பாகயக்ஞன் சத்தீச்சுரஞ் சென்று மாநந்தி பாராயணரைக் கண்டு வணங்கித் துதித்து, அவர் சந்நிதானத்தில் சசிவன்னனை நிறுத்தினான்; அவர் பாகயக்ஞனை நோக்கி, நீ

யாா் உனனுடனிருக்கினற இவன யாா் ா யிருக்குவ த காா
ணம பாடதனை வினவினா அதறகு பாகக்கனு டான
பிராமணனை, என பபா பாதகங்கள் ஆர்த பாவி எனது
புதல்வன் இவன் செய்த மகா பாதகங்களுக் களவில்லை,
அவ்வவிவன் பெருந் துன்பங்களை அனுபவிக்க வருகின
றுன் . . . கம . . . . பான . . . . கங்கை, எனது
பிதா கங்கா தீர்த்த ஸ்நானஞ் செய்யும் சேவதீா இப
பாவியானின்னும் தோஷம் நீங்கும் வழியுண்டோ
பிராயச்சித்தமென்ன அதுமட்டும் மா . . . . . . முனிவா
சசிவா . . . பிராட்டி கேட்பவனை திருமனையி கடனை நியமிக்க மாட்டேன்,
அ . . . . . . . கங்காதேவியை . . . . . . . தாம

**மாதங்கி பாராயணா தம் கிருபாநோக்கத்தால**
**சசிவன்னன துன்பம் நீங்கினா னென்றல்**

15 கணியாத பவககடு வானதிருக
கண்வைததலும் விட்டன காதுகடும
பிணியாவையு நல்லபிதா விறைதாள
பேணிபபணி யென்று பெயாந்தனனே

மாதங்கிபாரா ணை முனிவா அருளவிடற பி
பிறபெ ானனுங சொடிப விஷசோமை கேகுாதறகு

தார விஸ்வபுருஷராயிருப்பதான தமது திருப்பார் நோக்கத் தைச் சசிவன்னர் தீந்து வந்தனர் அவ்வளவில் அவரை வர ... ட திணியும் ...யும் பிராணமுமாகத் தியும் அவரையிட்டு நீங்கின (அதனால் அவர் ஆ ஆ ரென்று நூக்கபயல்வ ... ழிந்து தெளிவுடையவ னு னை உதயமாகுணம் ... (தனது பதிரான ஆ' ஆ' என்று ... வம் தாழிந்து தெளிவுடையவரை திருப்பமைக்க ... அரபும் முகமும் மலர்பெற்று, அம்மா முனிவரது திருவடிகளைத் தொழுது துதித்து அவரிடத்தினின்றும் விடைபெற்றுக் காண்டு, சசி வன்னனை நோக்கி நீபெயரின் நாளும் எது திருக களுப ... தழுப்பாடு மகாமுனிவரது திருப்பா நோக்கத்தை ... பெற்ற சசிவனன்' இனி நீ மெய்கண்டா முனிவரது திருவடிகளை அனுப்புற்று வணங்கிக் துதி செய்துகொண்டு இவர் தகிலேப்ப பிறப்பகர் கவா பொன்று கூறி (அவரை அங்கேயே நிறுத்திவிட்டுத்) தனது குருகுச சென்றனன 15

பாமயிலே விஷமுதலியவற்றை நீக்குவதற்கு எட்டுப்ப டை-கொட்டை, அடுசினஞைப்பாளை யி ... மோ முதலியவிஷ

மருந்துகள் தகுதியுடையனவை யிருத்தல் போல, பிறவிப் பிணியை நீக்குவதற்கு ஞானிகளது கிருபா நோக்கம் அமிர்த சஞ்சீவிமருந்தாயிருக்கின்றதென்பது நன்குணர்தற்பாலதாம்.

யோக சித்தியுடையார் தம்மை யடுத்தவரது நோய் நீங்க வேண்டுமென்று கருதி அவரைக் கிருபையோடு நோக்குவாராயின், அவரது நோய் நீங்கி விடுவதாம், ஞானசித்தியுடையார் தம்மை யடுத்தவரது பிறவிப்பிணி நீங்கவேண்டுமென்று கருதி அவரைக் கிருபையோடு நோக்குவாராயின், அவரது பிறவிப்பிணி மகாவாக்கிய உபதேச வாயிலாக நீங்கிவிடுவதாம். யோகசித்தியும் ஞானசித்தியுமுடைய மாதங்கிபாராயண முனிவர் சசிவன்ன னடைந்துள்ள நோயும், பேயும் பிரஹ்மஹத்தியும் நீங்கவேண்டுமென்று கருதி, யோக பாவனைகொண்டு அவனைக் கிருபையோடு நோக்கினார்; அதனால், அவனடைந்துள்ள நோயும், பேயும், பிரஹ்மஹத்தியும் அவனைவிட்டு நீங்கின வென்பதாம்.

## சசிவன்னன் சற்குருபணிவிடை செய்வதில் மேம்பட்டவனானெனல்

16. இடனேமுத லாக வுவந்திறையோ
னேவும்பணி செய்தி வனுஞ்சிலநா
ளுடனேயிவ னத்திரு மேனிதனக்
கரியானென வுற்றன னும்பனோடே.

சசிவன்னன் காந்தந்தை தனக்கு மாநந்தி பாராயணமாமுனிவரது திருவடித் தொண்டு செய்து கொண்டிருக்கக் கடவாயென்று கூறியதை மகா மந்திர உபதேசமாகக் கொண்டு, உடலுயிர் - கண்ணிமை - ஊசிநூல் போல மாநந்தி பாராயண முனிவரைப் பிரியாது,) இடனே முதலாகவுள்ள சற்குரு பணிவிடைகளைத் தவறாது செய்யவேண்டுமென்று நிச்சயித்து, மாநந்திபாராயண முனிவர் ஏவும் பணிவிடைகளை, இப்பணிவிடை செய்யும் பாக்கிய மெனக்குக் கிடைத்ததே யென்று பரமானந்தமடைந்து செய்து வந்தான்; இவன் இங்ஙனம் சிலநாள் செய்துவந்த போது, ஈசரசிவன்னனும் உத்தம சிஷ்யருடனே அம்மாமுனிவரது திருமேனிக் குரியவனென்று அங்குள்ளார் புகழ்ந்தனர், அம்மாமுனிவருடனிருந்தனன் 16

மாமுனிவரது திருமேனிக் குரியவனாதல்-மாநந்தி பாராயணமுனிவரது பிரமகோசத்தை(உடம்பை)ப்பாதுகாப்பதில் கண்ணுங் கருத்து முடையவனாதல்.

இவை முதலான சற்குரு பணிவிடைகள் அப-தம், அங்கம், ஸ்தானம், சற்பாவ மெனப்படுவனவாம்.

அபசம்—சற்குருவிற் கனுகூலமான காரியங்களைச் செய்தலாம்.

அங்கம்—சற்குருவின் திருவடியைக் கழுவுதல், பிடித்தல் முதலிய தொண்டுகளைச் செய்தலாம்.

ஸ்தானம் (இடம்)—சற்குருவின் மடம் நில முதலியவற்றைப் பாதுகாத்து வருதலாம்.

சற்பாவம்—சற்குருவைப் பிரத்தியக்ஷ சிவமெனக் கருதும் விசுவாசமாம்.

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]னே."

என்று அருட்பிரகாசர் கூறியிருத்தலா லுணர்க.

**சசிவன்னன சற்குரு பணிவிடையை**
**நன்றாகச்செய்து வந்தமையால்,**
**சாதன சதுஷ்டய முடையவனானா னெனல்.**

17. நன்றாமுனி தாள்வழி பாடதனா
னானாவித மான பிறப்பினைவிட்
டொன்றாகிய வீடுண ருத்தமர்கட்
குளசாதன நான்கு முதித்தனவே.

சசிவன்னன மாநகர் பராபரன முனிவரது திருவடிக் கொண்டு (ஆபதம், அங்கம், ஸ்தானம சற்பாவ மென்பனவற்றுள் ஒன்றாகக் குறைவாகாது) செவவைபாகச் செய்து வந்தனன்; அவ்வாறு செய்து வந்தமையால் பலவிதமான பிறப்பினின்றும் நீங்குதற் பொருட்டு, (நாதா என்பது சிறிதாகவேனு மின்றி) ஏக வடிவாயுள்ள மோட்சத்தை யுள்ளவா றுணர்ந்தடைய விரும்பிய உத்தமோத்தமரா புள்ள சாதன நான்கும அவனுக் குண்டாயின 17.

பலவிதமான பிறப்பு எழுவகைப் பிறப்பாம்; அவை தேவர், மக்கள், விலங்கு (மிருகம்), புள் (பறவை), ஊர்வன (எறும்பு முதலியன), நீர்வாழ்வன (மீன் முதலியன), தாவரம் (மரஞ்செடி முதலியன) என்பனவாம். இப்பிறப்புகளை கருப்பையிற் பிறத்தல், முட்டையிற் பிறத்தல், வித்திற் பிறத்தல், வியர்வையிற் பிறத்தல் என்னும் நால்வகையு ளடங்குவனவாம். எழுவகைப் பிறப்புள் தேவப்பிறப்பு 14 இலட்சம் பேதமும், மக்கட்பிறப்பு 9 இலட்சம் பேதமும், விலங்குப் பிறப்பு 10 இலட்சம பேதமும், புள் பிறப்பு 10 இலட்சம பேதமும், ஊர்வனவற்றின் பிறப்பு 11 இலட்சம பேதமும், நீர்வாழ்வனவற்றின் பிறப்பு 10 இலட்சம் பேதமும், தாவரப்பிறப்பு 20 லக்ஷம் பேதமுமாக விருப்பனவாம்.

“ஊனா பதிமூன்று மொன்பது மாறுமா
நீயுமறை யாற்கா மேலாப் பப்பா நாம்—நீயா
பந்தமாந் தேவா பதிமூ வாம்பமா
அந்தமில் ஸ்ரீத தாவாரநா வந்து”

என்னும் வெண்பா இங்குணர்த்தற்பாலதாகும்.

மோட்சம்—சாயுஜ்யத்துக்கு நிவிர்த்தி பரமானந்த பிராப்தி வடிவமாக விருப்பதாம் குறிப்பிட்டோர் நுவல்கின்றனம்.

சிவவடிவ ரூபமா அல்லது ஆத்மவடிவச் சிவம் மாயை அதன் காரியமென்பன வானந்தமாக வில்லாது ஏகமாக விருத்தலின், அதுவே மோட்ச சொரூபமாக விருப்பதாம் உத்தமா-அதிசிவிரகர் பகருவர்.

சாதனம் நான்காவன—(1) நித்யாநித்திய வஸ்து விவேகம், (2) இகாமுத்திரார்த்த பலபோக விராகம், (3) சமாதி சட்க சம்பத்தி, முமுட்சுத்துவம் என்பனவாம்.

(1) நித்தியாநித்திய வஸ்து விவேகமாவது சிவம் அல்லது ஆத்மாவே நித்தியம், அதற்கன்னியமாயிருப்பன வெல்லாந் தும் அநித்தியமாமென்று அவற்றைத் திடமாக விசாரணை செய்து தெளிவாகவறிவதாம். நித்தியம்-அழியாதது, அநித்தியம்-அழிவது.

(2) இகாமுத்திரார்த்த பல போக விராகமாவது நல்வினைப்பால் வரும் இகலோக (இவ்வுலக) போகமும், பரலோக (சுவர்க்காதி யுலக) போகமும் நாசமாவதால் துக்க சாதனமா மென்றுணர்ந்து, அவற்றைக் காக்கை மலம் - வாந்தி - மச்சபத்து அன்ன முதலியவற்றை விரும்பாமை போல விரும்பா திருத்தலாம்.

(3) சமாதி ஷட்க சம்பத்தியாவது சம முதலிய ஆறு குணங்களைப் பெறுதலாம். அக்குணங்கள் சமம், தமம், திதிட்சை, உபரதி, சிரத்தை, சமாதானம் என்பனவாம்.

(a) சமமாவது அந்தக்கரணத்தை (மனம்-புத்தி-சித்தம்-அகங்காரம் என்பனவற்றை) யடக்குதலாம்.

(b) தமமாவது பாகிய கரணத்தை (சுரோத்திரம்-துவக்கு முதலிய இந்திரியங்களை) யடக்குதலாம்.

(c) திதிட்சையாவது தன்னை (உடம்பை)ப் பற்றி வரும் துன்பம், பிற வுயிர்களைப் பற்றி வரும் துன்பம், தெய்வத்தைப் பற்றி வரும் துன்ப மென்னும் தாபத்திரயத்தைச் சகித்துக்கொண் டிருத்தலாம்.

(d) உபரதியாவது சற்குரு பணிவிடை செய்தற் பொருட்டு, தான் செய்துவந்த கரும மனைத்தையும் விடுதலாம்.

(௫) சிரத்தையாவது வேத வாக்கியத்திலும் சற்குரு வாக்கியத்திலும் பூரண விசுவாசம் வைத்தலாம்.

(௬) சமாதானமாவது சற்குரு அருளிய வாக்கியத்தைச் சிறிதும் மறவா திருத்தலாம்.

(௪) முமுட்சுத்துவமாவது அதி தீவிரதரமான மோட்சாபேட்சையாம்.

சசிவன்னன மாநதிபாராயண முனிவரது திருவடித் தொண்டைச் செய்து வரும்போது அவர்க்குக் கந்த (வேர்) மூல (கிழங்கு) பல (பழ) முதலியவற்றைக் கொண்டு வருதலிலும், அவரது பசுவிற்குப் புல்லிடுதல் முதலியவற்றிலும், அவர் ஸ்நானஞ் செய்யத் தீர்த்தங் கொண்டு வருவதிலும், அவரது வஸ்திரங்களைத் தோய்ப்பதிலும், கோவணத்தைச் சுத்தஞ் செய்வதிலும், அவர்க்குப் படுக்கை போடுவதிலும், அவரது திருவடிகளைப் பிடிப்பதிலும், அவரை வணங்கித் துதிப்பதிலும், மற்றுமுள்ள தொண்டுகளிலும் சிறிதுந் தவறா திருந்தான்; அதனால், அவனுக்கு அறம் (புண்ணியம்) வளர்வதாயிற்று; பாவம் குறைவதாயிற்று; அதனால், அவன் அறியாமை நீங்கப்பெற்றுச் சாதன சதுஷ்டய முடையவனாயினா னென்பதாம்.

### சசிவன்னன் தனது குறையை மாநந்தி பாராயணமுனிவர்க்குத் தெரிவிக்கத் தொடங்கி அவரை வணங்குதல்.

18. முனிவனார் திருமுன்பா நன்குறைதான்
மொழிவன் சிவ வஞ்சலி தஞ்சியதாய்ப்
பணிவந்திரு கண்கள் பதங்களிலே
பலகால்வலம் வந்து பணிந்தனனே

சசிவன்னன் மாநந்திபாராயண முனிவரது சந்நிதியில் தனக்குள்ள குறைபாடுகளுள் சிலவற்றைச் சொல்லத் தொடங்கி, தனது சிரசின்மீது இரண்டு கரங்களையும் குவித்துக்கொண்டு, இரண்டு கண்களிலும் நீர் தாரைதாரையாய்ப் பொழிய அழுது, அவரது திருவடியில் பலமுறைப் பிரதக்கணஞ் செய்து வணங்கினன். 18

சசிவன்னன் தனக்குள்ள குறைபாடுகளை மாநந்திபாராயண முனிவர்க் கறிவித்து, அவரது அருளைப் பெறுதற்பொருட்டு, அவருடைய திருவடிகளை வணங்கினா னென்பதாம். (பிரதக்கணம்-வலம்வருதல்.)

### மாநந்திபராயண முனிவர் அவனது குறைபாடுகளை வெளியாக்க வினவல.

19. அருளேவடி வாகிய மாமுனிதா
னறியாதவர் போல வழங்கவுறும்
பொருளேதென மைந்த னடுங்கினனிப்
பொல்லாத பவப்புண ரிக்கெனவே.

கருணையே வடிவமாக வுடைய மாநந்தி பராயண முனிவர் சசிவன்னனது குறைபாடுகளை அவனது முகக்குறிப்பால் அறிந்தும், அவற்றை யறியாதவரைப் போல நடித்து, சசிவன்னனை நோக்கி, சசிவன்னா! துன்பமுற்று வருந்துவதற்குரிய காரணம் யாது என்று வினவினார். அதற்குச் சசிவன்னன் சுவாமி! அடியேன் இப்பொல்லாத பிறவிக் கடலைக் கடப்பதற்கு வழி தெரியாமையால், அதுபற்றி மிக நடுக்கமுற்று நிற்கின்றேன்; அப்பிறவிக்கடலைக் கடத்தற்குரிய மார்க்கத்தைத் தேவரீர் தமியேனுக் கருளிச் செய்தல் வேண்டுமென்று கூறினான். 19

ஞானிகளிடத்து இயல்பாக விருத்தற் குரிய குணங்கள் நான்காம். அவை மைத்திரி, கருணை, முதிதை, உபேட்

சை யெனப்படுவனவாம்; அவற்றுள், (1) மைத்திரியாவது சற்புருஷ சிநேகமாம்; (2) கருணையாவது துக்கிகளிடத் துண்டாகு மிரக்கமாம்; (3) முதிதையாவது சற்கருமங்களைப் புரிகின்றவரைக் கண்டவிடத்து அவர்மீ துண்டாகும் பிரியமாம்; (4) உபேட்சையாவது பாவிகளிடத்து உண்டாகத் துவேஷமில்லா திருத்தலாம். மாதங்கிபாராயண முனிவர் கருணையையே வடிவமாக வுடையவரென்று கூறப்பட்டாராயினும், மைத்திரி முதலிய நான்கையும் வடிவமாக வுடையவரென்றுங் கொள்ளுதல் வேண்டும்.

பழுத்த பிறப்பறுத்திடுவான் சுசிவன்னன் பரமாசாரியரது பாதங்களை வணங்கித் துதித்தபோது, அவர் அவனது கருத்தை முகக்குறிப்பா லுணர்ந்தும், உணராதவர் போலச் சுசிவன்னனே நீ வருத்தமுற் றழுவதற்குரிய காரணம் யாதென்று வினவியதற்கு, அவன் தான் பிறவிக்கஞ்சி நடுங்குவதைக் கூறினா னென்பதாம்.

## மாதங்கி பாராயண முனிவர் பிறவிக் கடலி னியல்பைக் கூறல்.

20. வெருவும்பிற விக்கடல் வித்தாமுன்
வேதாகம கீதை விளம்புமதைக்
குருவுந்தன தன்பன் மனத்தளவிற்
கொளுமாறு தொகுத்திது கூறிடுமே.

வி ந நாஆ ந ம ... நாடீ த
கள விவேபா முண்டபாா பாலசப அநேகக்கற்கரிய பிற
விக்கடலின விரிவைச் கூறுவதானார், அதனை ம திரா
பண முனிவருநா கய கணபனுை சசிவ ம ன து நகிற
கொளுபாவு எவவளவோ அ வளவாக அமமனம
கொள்ளுமாறு கொத்துக் கூறத் தொடங்கினர் 20

வேதாகம கீதைக் கொண்டு சுருதி - மிருதி - பகவக் கீதை முதலிய நூல்களை.

சசிவன்ன பிறவிக்கடலைக் கடக்கும் வழி தெரியா மை ... அதுபற்றி மிக நகமுறிருக்களனே ... ன மைபால, மாநாகிபாராயன முனிவர் பிறவிக் கவிலை விளையும் துன்பத்தை நன்கு விரித்துமா அளன மனங் கொளு மளவினதாக, அதனுக்கு அதனைத் ... பிரிவைத் தொகுத்துக் கூறத் தொடங்கினர்காம

## பிறவிக்கடலின் வர்ணனை.

வேறு

21. மரண பவங்க ளான டனலை புண்டபது
மதியை விழுங்க காம வரவு பெரியது
கரண வொழுங்க ளுது விடய விரைநகா
கணமோ டியங்கு மீன மிகவு முகளவகே

(மாந்தூாாயண முனிவர் சசிவன்னனை நோக்கி, அப்பனே பிறவிக் கடலி னியல்பினைக் கூறுகின்றேன் அதனை நீ கவனமாகக் கேட்கக்கடவாய்) பிறவிக்கடலானது பிறப்பிறப் பென்னும் நீரை யுடையது. சந்திர சூரியர்களை இராகு கேது வென்னுஞ் சாயாக்கிரகங்கள் மறைப்பதுபோல உள்விழி யென்னும் ஞானக் கண்ணை மறைத்து விழுங்குவதாகிய காமமென்னும் பாம்பை மிகுதியாக வுடையது. சப்த பரிச-ரூப-ரச கந்த மென்னும் விஷயங்களாகிய இரைகளைக் கிரமந்தவறு துண்ணும் இந்திரியக் கூட்டத்தோடு சஞ்சரிக்கும் அந்தக்கரண மென்னும் மீன்கள் மிகவும் நிறைந்திருத் துள்ளதுவானாக விருப்பது. 21

ஞானக்கண் தத்துவ ஞானத்தை யுண்டாக்குஞ் சுத்த சாதனமாயுள்ள சுத்த மனம். சுத்த மனமாவது இராசத குணமுந் தாமதகுணமு மடங்கி நிற்க, சத்துவ குணமே மேம்பட்டுள்ள மனமாம். ஞானக் கண்ணை மறைத்து விழுங்குதலாவது காமம் மனத்தில் சத்துவ குணம் எவ்வகையாலும் வெளியாகாவாறு செய்தலாம். மனம்-புத்தி-சித்தம்-அகங்காரமென்னும் அந்தக்கரணம் எப்போதும் மெய்-வாய்-கண்-மூக்கு-செவியென்னு மிந்திரியங்களோடு கூடி, யாதாவ

தோன்றுனெ நினைத்தல், அறிதல் முதலிய வியாபாரமுடைய தா யிருத்தலின், அஃது இந்திரியக் கூட்டத்தோடு சஞ்சரிப்ப தாக விருக்கின்ற தென்க. காதிந்திரியம் சப்தத்தையம், தொக்கிந்திரியம் பரிசத்தையும், கணணிந்திரியம் ரூபத்தை யும், நாக்கிந்திரியம் ரசத்தையும், மூக்கிந்திரியம் கந்தத்தை யம் கிரமமாக அறிவதன்றி மாறுக அறிவதில்லையாகலின், இந்திரியக்கூட்டம் சப்தாதி விஷயங்களைக் கிரமமாக அறிய மியல்புள்ளதா யிருக்கின்ற தென்பதாம்.

காமமாவது பேராசையாம். காமமுடையார் மாதர்போக முதலியவற்றை விரும்பி, உள்நோக் கில்லாதவரா யிருத்த லின், அவர் ஞானக்கண் இல்லாதவராயி நக்கின்றன ரென் பது இங்குணர்தற்பாலதாம். பிரபோத சந்திரோதயம் காம ஞதியர் வீராலாபச் சருக்கத்தில் காமன் " தாதவிழ்பூங் குழற் கனிவாய்த் தத்தைமொழி முத்துநகைத் தைய லார்மேல் காதலுறப் புரிசெயலே யென்வடிவா யவரவர்தங் கருத்துட னோன்றி, யேதம்விளை விக்குமென்ற விரதியா லெனதுசின் னத் தியல்பா லென்றும், ஆதரவுற் றின்பமென்னு மவ்வலையி லெவ்வுலகோ ரகப்ப டாரோ" என்று கூறியிருப்பது காமத் தின் தீமையை நன்கு விளக்குவதாம்.

22. பெருமித மென்று கூறும் பெருமை யுடையது
பிணிக ளேனுங்கெ டாத புலவு கமழ்வது
வருமிட ரின்ப மான திரைகள் பொருவது
மனமேனும் வஞ்ச ராஜ மகர முறைவதே.

*பெருமித மென்று சொல்லப்படும் பெருமையை யுடையது; நோய்களென்று சொல்லப்படும் ஒருபோதுங் கெடுதலில்லாத புலால் நாற்றத்தை வீசிக்கொண்டிருப்பது; மாறி மாறி வரும் சுக துக்கமென்னும் அலைகள் தம்முள் மோதியடித்துக்கொண்டிருப்பனவாக விருப்பது; மனமென்று சொல்லப்படும் கபட முள்ள ராஜ மகரம் வசிப்பதா யிருப்பது.* 22

*பெருமிதம் - இறுமாப்பு. பெருமை - கம்பீரம், அஃதாவது தோற்றப் பொலிவு. இராஜமகரம் - திமிங்கல மீன்.*

23. அளவி லகந்தை யாமை யபரி மிதமுள
தவாவேன் னிறந்த வாழ மறிய வரியது
களவு நெருங்கு பாரு மலையு முடையது
கலக விடங்கண் மேவு கிருமி கெளிவதே.

*அளவில்லாது வளரும் அகந்தையென்னும் ஆமைகள் அளவில்லாதனவாய் வசிக்க விருப்பது; அவா*

வென்னும அளவு கடநத ஆழததை யெததன்மை யுடையாரும அளவிட் டறிதற்கு அருமை யுடைய தாக விருப்பது; களவென்னும் நெருங்கிய தரையை யும் மல்லையையு முடையது; கலகஞ் செய்தலென்னும விஷம நிறைநத புழுககள் நெளிவனவாக விருப பது. 23

அகநதையாவது ஆன்மதெனனுடைய தெனனும் அபி மானமாம். தேகாபிமானம் அகஙகாரமாம். பிரபோத சநதி ரோதயததில அகஙகாரன் "தேகாபி மானம் பற்றி யானெ னுஞ் செருககுத தானே, போகாத சொரூப மாகு மன்ன லும் பொருளை யீட்டி, மாகாத லுமையுமேல வதசிதெனெ தென்றல வடிமை யாககும, வநாவென் னகநதை யாலு மெவர்கொலோ மாப்பு றறே" என்று கூறியிருபப திங குணர்தற் பாலதாம். அவா - எனக்கிது வேணடுமெனனும் விருப்பமாம். களவு - பிறர் பொருளை யபகரித்துக கொள் ளுதலாம்.

24. துகளேனு நன்கி லாத நுரைக டருவது
துறவேனு மின்ப மான கரையை யகழ்வது
மகளி ரேனுந்த வாத வலிய சுழியது
மறலியு மஞ்சு கோப வடவை யெரிவதே.

குற்றமான செயல்களைச் செய்வதென்னும் நன்மையைத் தருவதில்லாத நுரைகளைத் தருவது; பேரின்பத்தைத் தருவதற்குக் காரணமாயுள்ள அறமென்னுங் கரையைத் தோண்டி யழித்துக்கொண்டிருப்பது; பெண்ணாசை யென்னுங் கெடாத வலிய சுழியினையுடையது; யமனும் அஞ்சுதற்குரிய கோபமென்னும் வடவாமுகாக்கினி எரிந்துகொண்டிருப்ப திருப்பது. 24

குற்றமான செயல்கள் - பழி பாவங்களுண்டாவதற்குக் காரணமாயுள்ள செயல்கள். வடவாமுகாக்கினி - கடலிலிருந்து அதனீரைக் கரைகடந்து செல்லாவாறு செய்யும் ஒருவகை யக்கினி.

"எதிருறத் துடிதுடித் தெரிவிழித் துணைசிவத், ததிர்கொள்சொற் படபடத் தங்கமும் பதைபதைத், துதிரமெய்க் குலைகுலைத் துட்கொதித் தெழுசினக், கொதிபொறுப் பவர்களைக் குவலயத் தவர்களே" என்று பிரபோத சந்திரோதயம் கூறுவதால், கோபத்தி னியல்பு நன்கு விளங்குவதாம்.

25. வெருவரு கின்ற போக முதலை யுடையது
விவித மநந்த மான துறையு முடையது
ஒருவர் கடந்து போக விரகி லெழுபவ
வுததி விளம்ப யாவ ருலகி லறிவரே.

நித்தியா நித்தியவஸ்து விவேக முடைய இது மிகப் பொல்லாததென நினைக்கின்ற போகமென்னு முதலைகள் நிறைந்திருப்ப விருப்பது தன்னை வந்தடைவதற்குக் காரணமாய் நின்றுகொண் டிருப்ப வாதுள்ள ஜடபுத்தி, தீயாரது நேசம், விஷயாசக்தி, குதர்க்கம், சபலத்துவ முதலிய பற்பலவிதமான துறைகளையுடையது; தத்துவ ஞானிகளல்லது மற்றவருள் ஒருவராவது தன்னைக் கடந்து போவதற்குச் சாதனமில்லா திருப்பதாம் இத்தன்மையதா யுள்ள எழுவகைப் பிறப்பெனனுங் கடலின் தன்மையை யளவிட்டுரைக்க உலகத்தில் யாவரறிவர் (ஒருவருமிலர்). 25

நித்தியாநித்தியவஸ்து விவேகம - இது நித்தியவஸ்து, இஃது அநித்திய வஸ்துவெனப் பொருள்களைப் பகுத்துணர்தலாம். போகம் - இங்குச் செல்வப் பெருக்காம். செல்வம் - காணி, மனை, கைப்பொருள் முதலியனவாம். ஜடபுத்தி - பகுத்தறிவின்மை; விஷயாசக்தி - விஷய விச்சை; குதர்க்கம் - யுக்தியில்லாது பேசுதல்; சபலத்துவம் - மனங் கலங்குதல். எழுவகைப் பிறப்பு - தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமென்னும் பிறப்பாம்.

### பிறவிக் கடலை யின்னார் கடவார், இன்னார் கடப்பரெனக் கூறல்.

26. பொறிவழி சென்று மளூ மவல மதிகொடு
பொருசம யங்க ளாறு மறிய விழுமதி
லறுவழி வொன்றி லாத பொருளி தெனவுள
வநுபவ வங்க மேறு மறிஞ ரகல்வரே.

அப்பிறவிக் கடலில் சுரோத்திரம் (காது), துவக்கு (உடம்பு), சட்சு (கண்), சிங்ஙுவை (நாக்கு), கிராணம் (மூக்கு) என்னும் இந்திரியங்களின் வழியே விஷயங்களிற் சென்றுசென்று திரும்பித்திரும்பி வருங் கிலேச புத்தியைக் கொண்டு என் கடவுள் பெரியது, உன் கடவுள் சிறியது என்றற் றொடக்கத்தனவற்றைப் பேசித் தம்முள் வாதப் போர் செய்கின்ற மதவாதிகளாறுவரும் (முத்திநகரி சிறந்தேகுவதற்குரிய துறை யறியாமையால்) தலைகீழாக விழுந்து கிடப்பர். தத்துவ விசாரத்தால் அழிவென்பது சிறிதுமில்லாத பொருள் இஃதென றுள்ளவா றுணர்ந்து, நிர்விகற்ப சமாதி கூடி, அதனுள்ளதாகிய சுவாநுபவமெனனும் மாக்கலத்தி

லேறியுள்ள விவேகிகள் அப்பிறவிக் கடலைக் கடந்து முத்தி நகரி சிறக்குவார்கள். 26

ஆறு மதங்கள் - சார்வாகம், சமணம், பௌத்தம், சாங்கியம், நியாயம், வைசேடிக மென்பனவாம்; மற்ற மதமனைத்தும் இவற்றுள் அந்தர்க்கதமாம்.

மதவாதிகள் புறநோக்குடையவரா யிருத்தலின், அவர்கள் பிறவிக்கடலைக் கடப்பதில்லை யென்பதாம். "ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர், ஆறு சமயப் பொருளு மவனலன்" என்று திருமந்திரங் கூறுவது இங்குணர்தற் பாலதாம்.

அழிவென்பது சிறிதுமில்லாத பொருள் - சிவமாம். சுவானுபவம் - தனதனுபவம்; அஃதாவது ஆத்மாவாகவே விளங்குதல்.

## குறுந்திரட்டு.

## பிறவிக்கடல்.

சாதல் வாழ்தலென மேவிய சலத்தை யுளதாய்க்
கோதை மாதரொடு கோண்முதலை யாக வுளதாய்
தோத லாகவரு நோய்நுரைய தாக வுளதாய்க்
காத லானிலை கலங்கவரு காலு முளதாய்.

வதமி குத்துவரு கோபவாட வன்னி யுளதாய
வித்தம ளப்பருமவி ரோதநதி வீழ வுளதாயச்
சுத்தமு றப்படு சுகத்திவலை வீசி யுளதாய
மதமெ னப்படு மகாமகரம் வாழ்வ துளதாய.

திவாவ ராவிடய சிந்தைதிரை யாக வுளதாய்த்
தவீத வாறுதொழின் மேவிவரு சங்க முளதா
யவாவென் யாவரு மளப்பரிய வாழ முளதாய
விவாத மாமலை யெறிந்தவொலி விஞ்சி யுளதாய.

இருண்மை யாமளவி லாதமலை பொங்கு முளதாயக்
குடும்ப மாகிய வரால்கள்பல கூடி யுளதா
யுடம்ப தாகிய புலாலொழிவி லாமை யுளதாய
விடங்கள் சேர்விவித மானவினை மீன முளதாய்.

அசை மாகவிடு கர்மமெனு மால முளதாய
நசைவசெய் போகமெனும் வேகவிட நாக முளதாய்ச்
சுவைசெய் துண்டுவிடு சுற்றமெனு மட்டை யுளதாய்ப்
பவம கோதநதி பதுப்பவர் பகர்ந்து முடிவார்.

வெருவாரு மெழிப்பிறவி வேலையில்வீழ்ந் தழியாமே
திருவாரு முத்தியெனுந் தீரத்தைச் சேர்வுறுதற்
கொருஞான நாவாய்கொண் டோங்குநளா லேயுய்க்குந்
குருநாத ரீகாமற் கூடுநர்க்குக் கூடுமால்.

*என்று கூறுவது இங்குணர்தற்பாலதாம்.*

### பிறவிக் கடலைக் கடப்பதற்குச் சிறந்த சாதனமாயிருப்பது தத்துவஞானமென்னும் மரக்கலமாமெனக் கூறல்.

27. புணரி கடந்து போக விரகி லெனமொழி
பொழுது புலம்பி யாவி புதல்வ னிறமுன
முணர்வெனும் வங்க மேற மறிஞ ரகல்வரென்
றுரையை வழங்கி நாத னுவகை யருளவே.

மாதங்கிபாராயண முனிவர் சசிவன்னனை நோக்கி, அன்பனே! எழுவகையாயுள்ள இப் பிறவிக் கடலைக் கடந்து, முத்தி யென்னும் நகரத்திற் செல்லுவதற்குச் சார்வாகம, சமணம், பௌத்தம், சாங்கியம, நியாயம், வைசேடிக மென்னும் அறுவகைச சமயங்களுள் யாதொரு சாதனமு மில்லை யென்று கூறியருளினார்; அதனைக் கேட்கும்போதே சசிவன்னன் யாம் பிறவிக் கடலைக கடந்து சுகக்கடலா யிருப்பது எவ்வாறு மெனச் சோர்வுற்றழுது மூர்ச்சை யடையுந் தன்மைய னாயினன்; மாதங்கிபாராயண முனிவர் தமது ஞான

புத்திரனை சுசிவன்னனது அதிதீவிர பக்குவத்தைக் கண்டு உவந்து, அவன் மூர்ச்சையடைவதற்கு முன்னே அப்பா! சுசிவன்னா! பிறவிக்கடலைத் தத்துவ ஞான மெனனும் மரக்கலத்திலேறிய விவேகிகள் தவறாது கடப்பர், இதற்குச் சந்தேகஞ் சிறிது மில்லை யென் றருளிச் செய்தனர். சுசிவன்னன் அவ்வருளிச் செயலைக் கேட்டு நமக் கினிப் பிறவித் துன்ப முண்டாகா தென்று தெளிவடைந்து மகிழ்வடைந்தனன். 27

இறைவனடி (சேர்ந்தார்) பிறவிப் பெருங்கடல் நீந்து வா என்ற திருக்குறள் கூறுவதும், "அறிவு மரக்கலத்தி லாரோ கணித்தால, பிறவிக் கடலைப் பிரித்தத - துறை யாம, பிறவா வழிக்குரிய பேரின்ப வீட்டில், உறவாக வைக்கு முவந்து" என்ற அனுபவசார வெண்பா கூறுவதும், இங்கு நன்குணரப் படுமாயின், பிறவி தத்துவ ஞானத் தாலன்றி மற்றொன்றா லொழிவ தில்லையா மென்பது நன்கு துணியப்படுவதாம்.

தத்துவ ஞானமாவது ஜீவப்பிரஹ்ம ஐக்கிய ஞானமாம்; அஃதாவது ஜீவ சாட்சியான ஆத்மாவும், ஈசுவர சாட்சியான பிரஹ்மமும் ஒன்றேயென் றுணரும் ஞானமாம். இந்த ஞானம்: பிறப்பு, அது வருதற்குரிய காரணம், வீடு, அதனைப்

பெறுதற்குரியகாரணம என்பவற்றைக் கடகாரிடத்துத் தக்க வாறு விசாரஞ் செய்வதால் வருவதாம். இவ்விசாரம் சமாகி யப்பியாச முடையாரிடத்தன்றி மற்றவரிடத்து நிலைபெறுவ தில்லையாம.

## சசிவன்னன பிறவியைக்கடத்தற் கேதுவாயுள்ள தத்துவ ஞானத்தை யெனக்கு உபதேசித்தல் வேண்டுமெனக் கூறல்.

வேறு.

28. வாழியென விறைவனடி தொழுதுவரு பவமா
மாழியினை யகலுமறி வருளுகென வவனே.

பின்பு அச்சசிவன்னன் மாநந்தி பராயண முனிவ ரது திருவடிகளை வணங்கி, தேவரீர் எனதுள்ளக் கமல த்தி லெழுந்தருளி யிருந்து எப்போதும வாழவேண்டு மென்று துதிசெய்து, சிவசொரூபமான தேசிக மூர்த் தியே! தேவரீர் என்னை விடாது தொடர்ந்து வரு கின்ற பிறவிக்கடலை யான் கடப்பதற்குச் சாதனமா யுள்ள தத்துவ ஞானத்தை அடியேனுக் குபதேசஞ் செய்தருளல வேண்டுமென்று பிரார்த்தித்தனன். 28

## மாகந்திபராயண முனிவர் சசிவன்னனுக்குத் தத்துவ ஞானோபதேசஞ் செய்தல்.

இருவகை யறிவு.

29. பரவறிவு மபரவறி வெனவுமிரு பரிசாந்
திரவறிவை யறியுமவா மொழிவர் தெளிவுறவே.

மாகந்திபாராயண முனிவர் சசிவன்னனுக்கு தத்துவ ஞானோபதேசஞ் செய்யவேண்டுமென்று திருவுளங்கொண்டு, அவனைப பெருங் கருணையோடு நோக்கி, அன்பனே! ஸ்திரவறிவென்னும பிரமத்தைத் தமது நிஜவடிவமாக வுணர்ந்த ஞானிகள் தெளிவாக அறிவானது பர அறிவு அபர அறிவு என இருவகைத்தாக விருக்கின்றதென் றதனைக் கூறுகின்றனர்.

பரவறிவு - அபரோட்ச ஞானமாம்; அபரவறிவு - பரோட்ச ஞானமாம்.

இதுகடம், இதுபடம என்றற் றொடக்கத்து ஞானம் அபரோட்ச ஞானமாம்; கடமிருக்கின்றது, படமிருக்கின்றது என்றற் றொடக்கத்து ஞானம் பரோட்ச ஞானமாம்.

இங்கு அகம்பிரஹ்மாஸ்மி (யான் பிரஹ்மமா யிருக்கின்றேன்) என்னும் ஞானம் அபரோட்ச (பிரத்தியட்ச)

ஞானமாம், பிரமம் ஒக்கின்றதென்னும் ஞானம் பரோட்ச ஞானமாம். அபரோட்ச ஞானம் பிரஹ்ம வித்தையெனவும், பரவித்தையெனவும், தத்துவ ஞானமெனவும் கூறப்படும்.

30 அபரவுணர் வருமறைநூல் முதலகில கலையு
முபரமதை யறவுதவு முணர்வுபர வுணர்வே

அபரவறிவாவது உபாகர்ஷகரிப வேதம் முதலிய சத்தாந்தச வித்தைகளின் ஞானமாம்; பரவறிவாவது அந்தப் பிரமத்தைத் தனக்குச் செவ்வையாக வறிதற்குச் சாதனமாயுள்ள ஞானமாம். 30

சாஸ்திரஞானம அபரவறிவாம, குருபதேசத்தால ஆத்மாவைப் பிரஹ்மமென்றறியும் ஞானம பரவறிவாம. பிரமகீதை - முண்டகோபநிஷத் தாற்பரியமுரைக்கு மத்தியாயத்தில "இங்குநா மறிய வேண்டுவ திரண்டு விச்சையவ் விரண்டினு மொன்று, பங்கமா மபரை பரையெனப் படுவ தொன்றதிற் பழமறை நாலும, அங்கமா றுணமை யமையிதி காச மாதிக ளபரையா மற்ற, தெங்குமாய நின்ற தொன்றனையா தொன்று லெய்தலாமது" என்றும், "தாணுவா யெல்லாந் தோற்றுதற் கிடமாந் தத்துவந் தன்னைத் தன் ஞலே,யாணியா யறிட மறிவது விச்சை யாவது பிறிதெலா மவிச்சை" என்று

கூறுவதால், இருவகை விச்சையின் (அறிவின்) இயல்பு நன்கு விளங்குவதாம்.

"முமுட்சுக்கள் இருவிதவித்தையையும் அத்தியாவசியக மாகச் சம்பாதித்தல் வேண்டும்; அவற்றுள், ஒன்றே சாத னமா யிருத்தலின் அபரையாம்; மற்றொன்றே பலரூப மாக விருத்தலின் பரையாம்... .....சிட்சை முதலிய ஆறங் கங்களோடு கூடிய இருக்கு முதலிய நான்கு வேதங்களையும் விஷயமாகவுடைய வித்தை அபரையாம். அபரையாலே பரை யடையப்படும். அத்விதீயப் பிரஹ்மத்தைக் விஷயமாகவுடைய வித்தை பரையாம்" என்று ஆதமபுராணம்-முண்டகோபநிடத தாத்பரிய வருணனத்தில்-கூறுகின்றது. இங்குப் பரையென் பது பரவறிவாம்; அபரையென்பது அபரவறிவாம்.

சதுர்த்தச வித்தைகள்:—வேதம் 4, வேதாங்கம் 6, நியா யம் 1, மீமாம்சை 1, ஸ்மிருதி 1, புராணம் 1 என்பனவாம். பாரதம், இராமாயணம், சிவாகமம, விஷ்ணு ஆகம முதலி யன வெல்லாம ஸ்மிருதி புராணங்களில் அடங்குவனவாம்.

## சாஸ்திரங்களி னபிப்பிராய மறியாவிடத்து அவற்றால் பயனின்றெனல்.

31. புராணமிதி காசமேவை யும்பொரு ளனைத்தின்
பிராணனறி யாதுள விடத்திவை பிதற்றே.

புராணம இதிகாசம மற்றுமுள்ள சாஸ்திரங்க. என்பனவற்றினது பொருளக ளெல்லாவற்றின் பிராணனை யறியாதுள்ள விட்டது இவற்றைப் படித்தல பிதற்றலாக முடியும். 31

பிராணன் - புராண முதலியவற்றின் தாற்பரியமாம்.

புராண மிதிகாச முதலியவற்றைப் படித்துணர்தல் ஆத்மாவை யறிந்து, சுகச்சுடராக விளங்குவதற்காமென்ப துணராது, அவற்றைப் படிப்பவா அவற்றின் தாறபரிய மறியாது கலக்க முறுவாரென்பதாம்.

பிரமகீதை "வேதமா கமபு ராண மிருதிகள் வேறு மார்க்கர், ஓதுமா கமஙகள் தர்க்க மொன்றொடொன் றெவ்வா காகும், மீதெலா மொக்கப பண்ண லாவதன் றிதய துக்கம், ஆதலா லனைத் தும் விட்டிங கனைத்துமாஞ் சிவத்தைப் பார்ப்பான்" என்று கூறுவ துணர்வார்க்குப் புராண மிதிகாச முதலியவற்றின் பொருள் நிச்சயம் அதிகாரி புருஷன் அனைத்துமாஞ் சிவத்தைத் தனது வடிவமாகக் காணல் வேண்டுமென்பதும், அதனால் அவன் இதய துக்க மில்லாது ச் சுடராக விளங்குவா னென்பதும், விளங்குவனவாம்.

புராணம் - பிரமம், பதுமம் முதலிய மகா புராணங்களும், சநற்குமாரம், நாரசிங்கம் முதலிய உப புராணங்களுமாம்.

இதிகாசம் - பாரதம், இராமாயண முதலியனவாம்.

தத்துவராயர் அஞ்ஞவதைப் பரணியில் "படித்த மறைகள் பொருளறிந்தும் பயனில் வெட்டிப் பாராதே, வடித்த கிளிபோல் வருமாயா வாதப் பேய்க்கும் வாரீரோ" என்று கூறுவதனால், புராணேதிகாச முதலியவற்றின் தாற்பரியத்தை யறிந்து, சமாதிசெய்து, ஆத்மாவை யறிய முயலாது ஏட்டைப்படித்த திறமாத்திரமாயிருப்பவர் அவற்றின் பயனை யடையா தொழிகின்றன ரென்பது நன்கு விளங்குவதாம்.

## பரவறிவுண்டாதற்கு நேர்சாதனமா யிருப்பது யோக நித்திரையா மெனக் கூறல்.

32. ஆகம விதங்களறி வாரபர மறிவார்
யோகமோ டுறங்குமவ ரேபர முணர்ந்தார்.

சுருதி-ஸ்மிருதி-புராணம் - இதிகாச முதலிய ஆகமங்களின் பலவிதமான அர்த்தங்களையு மறிபவர் அபரவறிவுடையவராவர், பரவறிவுடையவராகார்; யோக நித்திரை செய்பவரே பரவறிவுடையவராவர். 32

அபர வறிவென்னுஞ் சாஸ்திரஞானம் பரவறிவுண்டா தற்கு நேர்சாதனமாக விருப்பதில்லை; ஆனால், பரம்பராசாத னமாக விருக்கின்றது; யோகநித்திரையோ நேர்சாதனமாக விருக்கின்றதென்பது இங்குணர்தற் பாலதாம்.

அபரவறிவு - கடவுளிருக்கின்றார், சீவனிருக்கின்ற னென்றற் றொடக்கத்தது ஞானமாம்; பரவறிவு - சீவப் பிரம்ம ஐக்கிய ஞானமாம.

"சின்னஞ் சிறியார்கள் செயதமணற் சோறதையொக் கும், மன்னுங் கலைஞான மார்க்கம் பராபரமே" என்றும், "போகியர்க்கே ஞான மொழுங்காம்பே ரன்பான, தாகிய ரும் யோகமுன்னே சார்ந்தோர் பராபரமே" என்றும, தாயு மானவர் கூறுவது இங்குணர்தற் பாலதாம்.

யோக நித்திரையாவது சர்வ விருத்தி நிரோதமாம்; அஃதாவது சித்தம் உலகவெண்ணங்களுள் ஒன்றுமில்லாமல், ஆத்மாவையே நோக்கி நிற்பதாம்: யோகம், மந்திர யோகம், ஸ்பரிச யோகம், பாவ யோகம், அபாவ யோகம், மகா யோகமென ஐவகைத்தாம்.

(1) பிரணவம், பஞ்சாட்சரம், அஷ்டாட்சர முதலிய மந்திரானுசந்தானத்தால், சித்தம் பரமாத்மாவினிடத்து ஒடுங்கி நிற்றல் மந்திர யோகமாம்.

(2) அந்த மந்திரயோகத்தோடு சித்தமும் பிராணவாயுவும் ஒன்றாய், மூலாதாரத்திலிருந்து, சுழிமுனைநாடி மார்க்கத்தி லேறியபோது, சித்சபா சிரசின் மத்தியில் விளங்கும் பரமாத்மப் பிரகாசத்தில் ஒடுங்கி நிற்றல் **ஸ்பரிச யோகமாம்.**

(3) சுவர்க்கம் சிரசும், திக்குகளே காதும், சந்திர சூரியர்களே கண்ணும், அக்கினியே முகமும், ஆகாயமே நாபியும், பூமியே பாதமுமான பிரபஞ்சமாகிய விராட்புருஷ வடிவத்தையாவது அபயாஸ்த ஆபரணாதிசகிதமான ஈசனது திவ்விய வடிவத்தையாவது தியானஞ்செய்து, பின்பு அந்த அவயவங்களை ஒவ்வொன்றாகவிட்டு, நின்ற அவயவி மாத்திரமான சத்ரூபப் பிரஹ்மத்தில் சித்தம் ஒடுங்கி நிற்றல் **பாவ யோகமாம்.**

(4) இந்திரியங்களாலும், வாக்காலும், மனத்தாலும், அனுமான முதலிய பிரமாணங்களாலும் எட்டியறிதற் கியலாத நிருபாதிக (உபாதியில்லாத) பிரஹ்மத்தில் சித்தம் ஒடுங்கி நிற்றல் **அபாவ யோகமாம்.**

(5) தோற்றவொடுக்கத்திலும் அறியேன் அறிவேனென்பதிலும் தனக்கொரு கெடுதியு மில்லாது ஒரேவிதமாக விருக்கும் பிரத்தியகாத்மப் பிரஹ்மத்தில் சித்தம் ஒடுங்கி நிற்றல் **மகா யோகமாம்.**

இவ்வைவகை யோகத்துள் எதனையாவது சற்குருவாயிலாக வறிந்து, கிரமமாக அப்பியாசஞ் செய்பவர் தத்துவஞானமென்

னுப பாவத்தினைப் பெறுதல் நிச்சயமாம். இந்த போதங்களி னியல்பு இங்குச் சுருக்கமாகக் கூறப்பட்டது.

## இஃதறிவாம், இஃதறிவாகாதெனல்.

33. இயலறிவ திசையறிவ தினமறிவ துளதா
மயலறிவ தறிவதல வறிவறிவ தறிவே.

இயற்றமிழி னியல்பை யறிவது, இசைத் தமிழி னியல்பை யறிவது, நாடகத் தமிழி னியல்பை யறிவது என அறிவு மூன்றுவகைப்பட்டிருக்கின்றது; அவ்வறிவு அபரை யறிவதாம்; ஆகலின், அஃது (ஆத்மாவைச் சிவசாரூபமாக அறியும்) அறிவாகாது; சின்மாத்திரமாயுள்ள சிவசாரூப ஆத்மாவை யறியும் அறிவே (உண்மை) அறிவாம். 33

இயற்றமிழ்-செய்யுள் இலக்கணத்தையும் வசன இலக்கணத்தையு முணர்த்தும் நூலாம்; இசைத்தமிழ்-செய்யுள் கீர்த்தனம் முதலியவற்றின் இராக தாளங்களினியல்பை யுணர்த்தும் நூலாம்; நாடகத்தமிழ்-செய்யுள் முதலியவற்றை யுரைக்கும்போது ஆடல் அபிநய முதலியவற்றைச் செய்யு மியல்பை யுணர்த்தும் நூலாம். இம்மூன்று நூல்களினியல்பனைத்தையும் நன்குணர்ந்தவ ராதாலொன்றனை யெழுதுவதற்கும் பேசுவதற்கும் பாடுவதற்

சமிக்க தகுக்கபுடைடமராக விருக்கின்றனர், இவர்கள் இத்தகியுடையவரா யிருந்தாலும், தன்னை (ஆத்மாவை) யறியும் அறிவில்லாதவரா யிருத்தலின் அவ்வறிவு நல்லறிவாகாது. ஆகவே, அவர் பிறவா நெறியைப் பெறுதற்குரியவராகா திருக்கின்றனர் என்பதாம். இது "கற்பதற்பாலன சாத்திரங்களை யெல்லாங் கற்றவ ரென்றிருக்கின்ற, பெருமித முடையார் மூடரே பிறவா நெறியைப் பெறுவாரலார்" என்று பிரதிஞ்ஞை கூறுவதால் எனக்கு விளங்குவதாம். அடலை (அன்னியத்தை) யறிவது மெய்யறிவாகாது. அறிவை (ஆத்மாவை) யறிவது மெய்யறிவாமென்னு அருணகிரிநாதர் திருப்புகழில் "அரவு புனைதரு புனிதரும் வழிபட மழலைமொழிகொடு தெளிதர வொளிதிகழ அறிவை யறிவது பொருளென வருளிய பெருமாளே" என்று கூறுமாற்றானுந் தெளிந்து விளங்குவதாம்.

தமிழின் பாகுபாடாகவுள்ள இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பவற்றின் இயல்புகளை யறிவது அறிவாகாதென்று கூறப்பட்டதாயினும், இனம்பற்றி, சமஸ்கிருத முதலிய பாஷைகளின் இயல்புகளை யறிவதும் அறிவாகாதென்று கொள்க. இதனால் இலக்கண நூலுணர்ச்சி தன்னை யறிவதற்கு சாதனமாகாதென்பது துணிந்தவாறாம்.

**அறுபத்துநான்கு கலைகளையு முணர்ந்தவரும் யோகாப்பியாச மில்லாவிடத்துப் பரம்பொருளை யறியாரெனல்.**

**34. கலிலுகலை யறுபத்து நான்குமறி வாரும்
பவலயம தறுசுத்த பரமமறி யாரே.**

*தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வருகின்ற அறு பத்து நான்கு கலைகளின் பொருள்களையுந் தெளிவாக வறிந்திருப்பவரும் (யோகாப்பியாச மில்லாதவிடத்து) நாசோற்பத்தியில்லாத சுத்தப் பிரஹ்மத்தைத் தாமாக (ஆத்மாவாக) அறியமாட்டார்கள்.* 34

*அறுபத்து நான்குகலைகள்-கீதமுதல் வைதலிகீ வித்யா ஞான மீறுயுள்ள நூல்களாம். இவை இன்னவை யென்பதைப் பிரஸ்தானபேத மென்னும் நூலிற் காண்க.*

*இதனுல், இலக்கண நூற் பயிற்சியே யன்றிப் பல திறப் பட்ட நூலுணர்ச்சி யுடையாரும் யோகாப்பியாச மில்லாதவிடத் துச் சுத்தப் பிரஹ்மத்தைத் தாமாக வறியாரென்ப துணர்த்திய வாறும்.*

*நாசோற்பத்தி யில்லாதது நித்தியமாம். நாசமாவது, உற் பத்தியும் நாசமுமாவது உடையது அநித்தியமாம் ; இவ்விரண்*

டனுள் ஒன்று மில்லாதது நித்தியமாம் சுத்த பிரஹ்மம் நாசம், அல்லது உற்பத்திநாச மென்பனவற்றுள் ஒன்றுமில்லா திருத்தலின், அதுவே நித்தியப் பொருளாம். ஆத்மா சுத்த பிரஹ்ம சொரூபமா யிருத்தலின் அஃது அநித்திய மென்பது பெறப்படாது படாதாகவே ஆத்மாவிற்கு அனன்னியமாகத் தோற்றுவன வனைத்தும் அத்தியடமாமெனக் தன்னை யொன்றுங் கலத்த லில்லாதது சுத்தசுயம். வியவகார நோக்கல் ஆகாயத்தை யொன்றுங் கலவாமை போல, பாரமார்த்திக (உண்மை) நோக்கில் பிரபஞ்சத்தை யொன்றுங் கலத்தலின்மையின் அது சுத்தமா யிருக்கின்ற தென்பதாம்.

## இவர் கலைஞான நோக்குடையவரா யிருப்பர்: இவர் அகநோக்கில்லா திருப்பரெனக் கூறல்.

35 ஆகவறி வாளரறி வாரிவை யனைத்து
மேகவறி வாளரிவை யாவுமறி யாரே

ஏக தேசமென்னும் ஞான முடையவர் இதரசாஸ்திரங்களின் பாகுபாடு, பொருள் நுட்பம், இலக்கண மமைதி, தருக்கப்பொருத்த முதலியவற்றை யெல்லாம் அறிதற் குரியவராவர், ஏகமாயுள்ள பரமபொருளைத் தாமாக வறிந்திருப்பவர் இவ்வெல்லாவற்றையும் அறிவ தொழிந்திருப்பர். 35

தானியத்தைப் பெறுதலின்றி வைக்கோலைத் தூற்றுபவனைப்போல பிரஹ்மத்தை அறிந்து பிரஹ்மசொரூபமாக நிற்கின்றவர் சாஸ்திரவிசாரயிருப்ப தில்லாதவராயிருப்பரென்பதாம்.

மீதமோகமென்றும் ஞானமென்றும் சாமனென்பதனைப் பெற்று ளாரென்று புகழியார். இதனுள், மீதமோகர் என்றும் ஞான மில்லாதவர் சாஸ்திரவாராய்ச்சி முதலியவைகளில் என்றுமேயாச வில்லை, அம்முதலானவர் அதனைச் சடகோத்திரியவரா யிருக் கின்றனரென்பது கருத்தெனவறியப்.

## வீடுபேறு ஞானத்தாலன்றி யோகத்தாற் சித்தியாதெனல்.

36. ஐயறி வறிந்தவை யடங்கினவ ரேனும்
மெய்யறி விலாதவர்கள் வீடது பெறரே

மெய்யுணர்விலாதவர் மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் இந்திரியங்களின் வியாபாரத்தாலுண் டாகிய வுணர்வுகளி னியல்பையறிந்து, அவ்வுணர்வுகளை (அவ்விந்திரியங்களைவிட்டுத் தடையுத்தலைவாக) அடக் கப்பெற்றவராகவிருப்பாராயினும், சர்வதுக்க நிவிர்த்தி- பரமானந்தப் பிராப்தி வடிவ மோட்சத்தை யடையமாட் டார்

இந்திரியங்களின் வேறுபாட்டால் ஐந்தாகிய வுணர்வுகளை யுடையபடியால் இங்கு 'ஐந்தாகிய வுணர்வுகள்' என்று கூறப்பட்டன. அவை அடங்குதலாவது அவ்வைந்து இந்திரியங்களின் வாயிலாகச் சென்று சப்த பரிச முதலிய விஷயங்களை யறியுந் தொழிந்து ஒருமுகப்பட்டு ஒரு குறியில் நிற்றலாம். யோகமென்பது மிதுவேயாம்.

மெய்யுணர்வு — தத்துவஞானமாம். இதனை, தத்துவஞான மில்லாதவர் யோகம் புரியா முடையவரா யிருப்பினும் வீடுபெறா ரென்பது [illegible] யோகம் தத்துவஞான முண்டாவதற்குக் காரணமா யிருப்பதன்றி, நேரே வீட்டினைப் பெறுதற்குக் காரணமாக விருப்பதில்லை யென்பது இங்குணர்தற்பாலது.

“ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே, மெய்யுணர் வில்லா தவர்க்கு” என்று திருவள்ளுவர் கூறுவதூஉம், “அவ்வவர் காலம் பலவா யிருந்து யோகந் தன்னை, தவாவிலா புந்தி வாரா தத்துவ ஞானத் தலைவரால்” என்று ஞானசத்தி கூறுவதூஉம், “கண்ணுறு யிரத்தகாரணம் யோக மிருப்பினும், [illegible] கண்டறி வாரிலை, உண்மைஞான தெரிவுறு யோகத்தினால், கண்மேவு பாலக கலைதானின் [illegible]” என்று [illegible] ராங் கூறுவதூஉம், இங்குச் சிந்தித் துணர்தற்பாலனவாம்.

**மெய்யறிவாவது தம்மை யறிவதாம்,**
**அன்னியத்தை யறிவதன்று மெனல்.**

37. மேய்ம்மையறி வல்லதமில் வேறறிவ தேல்லாந்
தம்மையறி யும்மறிவ தேயறிவு தானே.

*நமக்கு வேறாக விருப்பனவற்றை யெல்லாம் அறிவது மெய்யறிவன்றாம்; தம்மை (ஆத்மாவை) யறியு மறிவே மெய்யறிவாம்.* 37

*அறிவு - மெய்யறிவு, பொய்யறிவென இரு வகைத்தாம். (1) ஆத்மா முக்காலத்திலும் பொய்யென்று நிச்சயித்தற் குரிய தாகாததா யிருத்தலின், அது மெய்யாக விருப்பதாம்; அதனை யறிவது மெய்யறிவாம்; (2) ஆத்மாவிற்கு அன்னியமாக விருப்பன வெல்லாம் எக்காலத்திலும் பொய்யென்று நிச்சயித்தற் குரியனவாக விருத்தலின், அவை பொய்யாக விருப்பனவாம்; அவற்றை யறிவது பொய்யறிவாமென்க.*

*நானென்பதன் உண்மைப் பொருள் ஆத்மாவாம். அது நனவு கனவு உறக்க மென்னும் அவஸ்தை மூன்றிலும் மாறா திருத்தலையும், நனவில் விளங்கும் உலகம் கனவிலும், கனவில் விளங்கும் உலகம் நனவிலும், அவ்விரண்டும் உறக்கத் திலும் விளங்கா தொழிதலையும், நானென்பதற்கு அன்னிய*

மாக என்றெனறு சொல்லப்படும் உடம்பு, பொறி, பிராணன், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனபனவும், வீடு காணி முதலியனவும், பிரத்தியக்ஷமாவை விளங்காவாறு செய்துள்ள மாயை டப சத்தா' அசத்தா' சதசத்தா' இவ்விரண்டிலும் வேறு' அஃதாவது சித்தையா வென்றவற்றை விசாரிக்குமிடத்து அவை தமக்கென வொரு பொருளின்றிப் பொய்யாயொழிதலையும், ஞனகுணாந்து நோக்குமிடத்து, மெய்ப் பொருளென்பது ஆத்மாவேயாம், பொய்ப் பொருளென்பது அதற்கன்னியமாகத் தோன்றுவனவேயாமென்பது நன்கு விளங்குவதாம்.

திருமந்திரம் "முன்னைப் பிறவியிற் செய்த முதுதவம், பின்னைப் பிறவியிற் பெறற்கு அறிவலாம், தன்னை யறிவ தறிவாமஃதன்றிப், பின்னை யறிவது பேயறிவாமே" என்றும் ஔவை குறள் "உடம்பினைப் பெற்ற பயனுவ தெல்லாம், உடம்பினி லுத்தமனைக் காண்" என்றும் கூறுகின்றன.

**ஈசனையறிவது அறிவாகாதோ வெனின், ஆகாது; அவனையும் தன்னையும (ஆத்மாவையும்) ஏகமாயறிவதே அறிவாமெனக் கூறல்.**

38- பூசனையு மதுசகல பொருளுமறி தமையு
மீசனையும் வேறதற வறிவதறி வெனவே.

பூசைசெய்யும் விதத்தையும் அப்பூசை செய்தற்குரிய (எண்ணெய், இளநீர், பால், தயிர், நெய், தேன் முதலிய) பலபொருள்களையும் அறிந்துள்ள தம்மையும், (அப்பூசையை யேற்றுக்கொள்ளுதற்குரிய) ஈசனையும், வேற்றுமை தோன்றிய அறிவைக்கொண்டு அறியாமல்; (அங்ஙனமன்றி அவனை ஆண்டானையும் தம்மை அடிமையாகவு மறிந்து அறிவென்னும்) என்று திருவாய்மலர்ந்தருளினார். 38

ஒன்றாகவேயிருக்கும் ஆகாயம் கடம் மடம் (வீடு) என்னும் உபாதிகளால் கடாகாயம் மடாகாயமென்னும் வியவகாரத்திற்குரியதாயிருக்கல்போல, ஒன்றாகவேயிருக்கும் சிவமும் மாயை அவித்தையென்னு முபாதிகளால் ஈசன் சீவனென்னும் வியவகாரத்திற்குரியதாயிருக்கின்றது, கடம் மடமென்னு முபாதிகள் நீங்கிய காலத்தில் கடாகாயம் மடாகாயமென்னும் பேதமில்லாமல் ஒன்றாகவேயிருக்கும் ஆகாயம் ஒன்றாகவே விளங்குவதுபோல, மாயை அவித்தையென்னு முபாதிகள் நீங்கிய காலத்தில் ஈசன் சீவனென்னும் பேதமில்லாமல் ஒன்றாகவேயிருக்கும்சிவமும் ஒன்றாகவேவிளங்குகின்றதென்பது வேதசித்தாந்தமாம். இந்தச் சித்தாந்தத்தை யொப்பாதவர் அநாத்ம(ஜட)வாதிகளாவரென்பதற்குயாதோர்ஐயப்பாடுமின்றாம். ஆத்மாவிற்குப் பிரஹ்மம் உண்மையில் வேறாகவே

யிருக்குமாயின், அஃது அநாத்பாவாய அநாத்மா வென்பது ஜட மாம். இதனால், புணர்ச்சி செய்யும் ஆத்மாவையும் அதனை வேறாக கொள்ளும் ஞானையும் வெவ்வேறாக வறிந்தது மெய்யறிவன்றாம்; (உபாதிமைச் சுகி) ஒன்றாகவறிவது மெய்யறிவா மென்பதுணாத ரியவாராய் ஒரு பொருளாய் [illegible] பொருள்போலத் தோன்றச் செய்வது யோபாதியாம். ஈசன்வேறு, சீவன்வேறு என்பன வுபாதி கா யிருத்தலின், அவ்விரண்டையும் வெவ்வேறாக வறிவது பொய்யறிவாம், ஈசனும் சீவனும் உண்மையில் ஒன்றாகவே யிருத்தலின், அவ்விரண்டையும் ஒன்றாகவே யறிவது மெய்யறி வாம். [illegible] "ஆன தாமத வெகுவயத்த [illegible] [illegible], காரணமாகித் தனைதகன்று [illegible] தன்மையும், [illegible] ஞாதாதி மொழிகத யுள்ள வறிவதனால், தானேயாக [illegible] ண்டிரிதல் சத்தாயுள்ள அசையம்த" என்றும், அமாத்ரா [illegible] "முன்புற்ற, சிற்சடமெலாஞ் சிவமாக [illegible] வைசிவற், [illegible] சனை பாதம் [illegible]" என்றும் கூறுகின்றன.

சசிவன்னன் வினா.

59. தானேனு முடம்பிது தனைத்தவிர வேறு
யானேனு மருத்தமுள வோவருளு கெனவே.

(சசிவன்னன் மாநந்தி [illegible] முனிவர் நம்மை யறிவதே யறிவாம், அன்னியத்தை யறிவது அறிவாகா

கென்று தொடர்பாக வருளிச் செய்ததைக் கேட்டு, சிறிது நேர மாலோசித்து நோக்கி, தேசிக மூர்த்தியே! யாவரும்) தானென்று வியவகரிக்கும் இவ்வுடம்பினைத் தவிர, இதற்கு வேறாக யானென்று கூறுவதற்கியைந்த பொருளிருக்கின்றதோ? அஃதெனக்கு விளங்கவில்லை; இருந்தால், விளங்குமன்றோ? அதனை அடியேனுக்கு விவரித்தருளிச்செய்தல்வேண்டும் (என்று வினவினன்).

சுசிவன்னன் தான் என்பதற்குப் பொருள் இவ்வுடம்பா யிருக்கின்றதன்றி, இதற்கு வேறாகக் காணப்படவில்லை; அங்ஙன மிருத்தலின், நான் என்பதற்குப் பொருள் யாது என்று வினவின னென்பதாம்.

தான என்பது ஆத்மாவாம்; அதுவே நான் என்பதன் பொருளாம். அது சற்குருவின் உபதேசத்தைப் பூரணமாகப் பெறாதவர்களுக்கு விளங்குவதின்றாமென்பதிங் குணர்தல் வேண்டும். எதில் நானென்னும் புத்தி புண்டாகின்றதோ அஃதாத்மாவாம்; அல்லது எதில் மிகுபிரீதி யுண்டாகின்றதோ அஃதாத்மாவாம். நாஸ்திகர் அல்லது சார்வாகர் நான் மனிதன் நான் பிராமண னென்றற் றொடக்கத்துப் புத்தி (ஸ்தூல) சரீரத்திலேயே யிருக்கின்றது; அதிலேயே மிகு பிரீதி யுண்டாகின்றது; ஆதலால், சரீரமே ஆத்மாவாம்; அதற்கு வேறாக நானென்பதற்குப் பொருளில்லையென்று கூறுவர்; இவர்க்கு மரணமே மோட்ச

மாம்; பிரத்தியட்ச மொன்றே பிரமாணமாம்; பொருளைத் தேடுதலும் அதுகொண்டு சிற்றின்பத்தை யனுபவித்தலுமே புருஷார்த்தமாம். ஆத்மா இத்தன்மையது, அநாத்மா இத்தன்மையது, ஈசனது சொரூப மித்தன்மையது, நமது சொரூப மித்தன்மையது என்பதுணர்ந்து, அதனால் தேகாகாரமா யிருப்பதொழிந்து, ஆத்மாவாகவே நில்லாதவா யாவரும நாஸ்திகர், அல்லது சார்வாகராவ ரென்பது சிதையாத சித்தாந்தமாம்.

**மாகந்திபாராயணர் விடை. எனதுட லென்றலின், இத்தேகம் ஆத்மாவன்றெனல்.**

வேறு.

40. எனதாடை போன்பூ மகன்றையல் பாய்மா
விபங்கண் முகங்கால்கை மெய்யேன்ன வென்றுந்
தனதா யுரைப்பான் வகுத்திந்த வூனைத்
தானேன் றயர்த்துஞ் சொலத்தக்க தன்றே.

(மாகந்திபாராயணமுனிவர் சசிவன்னன் கூறியதைக் கேட்டு, அவனது பிராந்தியைத் தீர்க்கக்கருதி, அன்பனே! ஆத்மா தேகம், இந்திரியம், பிராணன், மன முதலியவற்றுள் ஒன்றுமன்று; அதுபற்றி யான் கூறுவதை நீ கவனமாய்க் கேட்கக்கடவாய்.) அறிவிலான் என்

னுடைய ஆடை, என்னுடைய பொன், என்னுடைய பூமி, என்னுடைய புத்திரன், என்னுடைய மனைவி, என்னுடைய குதிரை, என்னுடைய யானையென்று கூறுவதுபோல, என்னுடைய கண், என்னுடைய முகம், என்னுடைய கால், என்னுடைய கை, என்னுடைய உடம்பு என்றும் அவற்றை யாரோ நாம் வேறாகப் பிரித்துத் தன்னுடைய பொருளாகக் கூறுகின்றனன்றோ! ஆதலால் இந்தத் தேகத்தை மறந்தாயினும் ஆன்மாவென்று கூறுதல் கூடாது.

மமதைக்கு (எனதென்பதற்கு) விஷயமாவது அகந்தைக்கு (நானென்பதற்கு) விஷயமாகாதென்பது கருத்தாமாகலின், என்னுடைய தென்பதற்கு விஷயமாயுள்ள தேகம் யானென்பதற்கு விஷயமாகாது; ஆதலால், தேகம் எவ்வகையாலும் ஆன்மா வாகாதென்பதாம்.

என்னுடைய ஆடை, என்னுடைய பொன், என்னுடைய பூமியென்றற்றொடக்கத்தனவாக வியவகாரஞ் செய்கின்றவனுக்கு அவ்வாடை பொன் முதலியன வேறாகவே யிருத்தல்போல என்னுடைய கண், என்னுடையமுக மென்றற்றொடக்கத்தன வாக வியவகாரஞ் செய்கின்றவனுக்கும் அக்கண் முக முதலியன வேறாகவே யிருக்கின்றன ஆகலின், எனதென்பதற்கு விஷய

யாவனும் தேகத்தை மறந்தாயினும் ஆத்மாவென்று கூறுதல் கூடாதென்பது ஒங்குணர்த்தற் பாலதாம். என்னுடைய ஆத்மா என்னுமிடத்து, ஆத்மா மமதைக்கு விஷயமா யிருத்தலின், அஃ தங்ஙனம் பிறனென்னுஞ் சொல்லிற்குப் பொருளாமெனின், என்னுடைய ஆத்மாவென்பவன், தேகத்தைப் பிறனென்பதனைப் பொருளாகக்கொண்டு, அதற்கு வேறாக அஃதிருக்கின்றதென்று கூறுதலாலே, அவன் கருத்தின்படியும், ஆத்மா தேகத்திற்கு வேறாகவே யிருக்கின்றதென்பது பெறப்படுகின்றது, ஆகவே, ஆத்மா தேகத்திற்கு எவ்வகையாலும் வேறாகவே யிருக்கின்றதென்பது பெறப்படுமாறறிக. இதனாலே, என்னுடைய தென்ற வியவகரிக்கப்படும் தேகம் எவ்வகையாலும் ஆத்மா வாகாதென்று விளக்கியவா றறிதற்பாற்று. என்னுடைய ஆத்மாவென்பதிங்கு இராகுவினது தலையென்பதுபோல்வதாம்

## தேகம் தேர்போன் றிருத்தலின். அது தன்னை நடத்தும் ஆத்மாவாகாதெனக் கூறல்.

41 தாளாக வூராழி யார்வெங்கில் வீறை
தண்டாக வன்மாறு தட்டாக மொட்டா
நாளா மலர்ச்சென்னி கூந்தற் கொடித்தேர்
நாணுளு மூர்வானின் வேறாக நாடே.

மகாமகோபாத்யாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்.

காலிரண்டும் ஊர்ந்துசெல்லும் சக்கரங்களாகவும் முதுகிலுள்ள வீணாதண்டம் ஐந்துரு வாணியாகவும், மார்பு தட்டாகவும், தலை சிகரமாகவும், கூந்தல் அல்லது குடுமி கொடியாகவும் உடைய இத்தேகமென்னுந் தேரானது எப்போதும் தன்னை நடத்தும் ஆத்மாவிற்கு வேருகவேயிருப்பதாம். சசிவன்ன! நீ தேகமும் தேகியு மிவ்வாறிருத்தலை யாராய்ந்து நோக்கக்கடவாய் 41

தேரினுள் இருந்து அதனை நடத்துவோன் தேராகாமை போல, உடம்பினுள் இருந்து அதனை நடத்தும் ஆத்மாவும் உடம்பாகாது; ஆதலால், உடம்பை ஆத்மாவென் றெவ்வகையாலு மறிதல் கூடாதென்பதாம்.

தேகவடிவத் தேர்க்கு இந்திரியங்கள் குதிரைகளாகவும், மனம் கடிவாளமாகவும், புத்தி சாரதியாகவும், ஆத்மா யஜமானுகவும், நல்வழியி லொழுகுதல் அல்லது தீவழியி லொழுகுதல் அந்தத்தேர் செல்லும் மார்க்கமாகவு மிருக்கின்றனவென்பதுமிங் குணர்தல் வேண்டும். இதனல், ஆத்மாவில்லாத விடத்து உடம்பு ஓரிடத் திருந்து மற்றோரிடத்திற்குப் போகாது; போதலின், அதற்கு வேருக அதனுள் ஆத்மாவிருந்து அதனை நடத்து கின்ற தென்பது விளங்கியவாறறிக.

**தேகத்திற் கொருவகையாலும் தானே யியங்குந் தன்மை யில்லை; அஃது ஆத்மா இயக்க, இயங்குகின்ற தெனக்கூறல்**

42. கடக்குஞ் சரம்பண்ணி யுண்ணின் றொருத்தன்
கைபாத கன்னங்கண் மெய்போ லியக்குங்
கிடக்குங் நடத்தா விடத்திவ் வுடம்புங்
கிடக்கு மொருத்தன் னடத்தா விடத்தே.

ஒருவன் மூங்கில் துணி முதலியவற்றைக் கொண்டு மதயானையொன்று செய்து, அதனுள்ளே தானிருந்து, அதனது துதிக்கை, கால், காது என்பனவற்றை யியக்கு வானாயின், அப்பொய்யானை மெய்யானைபோலத் துதிக் கையை யாட்டியும், காலால் நடந்து சென்றும், காதை யாட்டியும் இயங்குகின்றது; அவன் அதனை யியக்கா விடத்து அது வறிதே கிடப்பதாம்; அங்ஙனமே, இவ் வுடம்பும் ஆத்மா இயக்குகின்றபோது, கொடுத்தல்-வாங்கல்-நடத்தல்-கேட்டல் முதலிய வியவகாரங்களைச் செய்கின்றது, தன்னை இயக்காதபோது வறிதே கிடப்பதாம். 42

*மூங்கில் முதலியவற்றாற்செய்துள்ள யானையினுள்ளிருந்து, அதனை யாட்டுகின்றவன், அந்தயானை யாகாமைபோல, உடம்*

பினுள் ளிருந்து அதனை யாட்டும் ஆத்மாவும் அந்த வுடம்பாகா தென்பதாம். இதனால், உடம்பி னியக்கத்திற்குக் காரண ஆத்மாவன்றிப் பிறிதொன் றன்றென விளக்கியவாறறிக.

"மாக்கையா விரகுள்ளோர் மைந்தனிருந் தாட்டல்
செந்நசியது வாடுஞ் செயல்போல்—றிக்குமுடல்
ஆட்டுவா னுடனுஞ் லாடுபவ னுடலாக்காம்
காட்டரும்பா வாகுமிது காண்"

என்னும் வெண்பா இங்குணர்தற் பாலதாம்.

## உடம்பே உயிராயின், மலமும் உயிராதல் வேண்டுமெனக் கூறல்.

43. ஒருகூறு மலமாகு மொருகூ றுடம்பா
மொருகூறு மனமாகு முண்டாற வன்ன
மிருகூறு நீயாகி லொருகூறு நீயா
மிழிக்கும் மலஞ்சோ ரிடப்பட்ட வுடலே

கண் காது முக்கு முதலிய வாயில்க ளெல்லாவற்றி னும் பீளை, குறும்பி, சளி முதலிய மலங்கள் கசிந்து வருமியல்புடைய உடம்பு அறிவுடையார் யாவரும் அருவருத்தற் குரியதாக விருக்கின்றது; சசிவன்னா! நீ அவ்

லுடம்பாயின், பானதுபற்றிக் கூறுவதைக் கேட்கக் கடவாய். உண்டி சீரணமான ஆகாரம் மூன்று பாகமாகின்றது; அம்மூன்றனுள், ஒருபாகம் மலமா யமைகின்றது; மற்றொரு பாகம் உடம்பா யமைகின்றது இன்னொரு பாகம் மனமா யமைகின்றது. இம்மூன்றனுள் உடம்பும் மனமுமாகிய இரண்டுபாகமும் நீயாயின், மலமாகிய மற்றொருபாகமும் நீயாதல் வேண்டும். (நீ மலமாகாமையின், உடம்பும் மனமும் நீயாதல் கூடாது; ஆதலால், நீ உடம்பன்று). 43

உண்டு சீரணமாகிய வுணவு மலமும் உடம்பும் மனமுமா யமைகின்றது; அம்மூன்றனுள், உடம்பும் மனமும் ஆத்மா வாகுமாயின், மலமும் ஆத்மாவாதல் வேண்டும்; ஆத்மா மலமாகாமையின், அஃதுடம்பும் மனமு மாதல் எவ்வகையாலுங் கூடாதென்பதாம். உண்டு சீரணமாய வுணவின் சத்துவ பாகம் (சூக்குமப் பகுதி) மனத்தோடுகூடி அம்மனமாகவும், இராசத பாகம் (மத்திமப் பகுதி) உடம்போடு கூடி அவ்வுடம்பாகவும் அமைகின்றன; தாமதபாகம் (ஸ்தூலப்பகுதி) மலமா யமைகின்றதென்பன இங்குணர்தற் பாலனவாம்.

## உடம்பு உயிராகா தென்பதை விளங்குகின்றதோ ரனுபவவாயிலாகக் கூறல்

44. கிளரா தரத்துண்ணு மன்னஞ் சுடக்கை
கிட்டப் பொறாதே யிருந்தார் கிடந்தார்
தளரா துறுப்பொன்று முயிர்போக வன்றே
தழற்பள்ளி மீதே துயின்றார் சகித்தே.

*மிக்க விருப்பத்துட னுண்ணுதற்குரிய அன்னமானது சுட, அதனைக் கையால் தொடச் சகியா திருந்தவர் நோயால் படுக்கையிற் கிடந்து, கை கால் முதலிய அவயவங்களுள் ஒன்றும் குறையாதிருக்க உயிர்நீங்க, உயிர் நீங்கிய வப்போதே இடுகாட்டில் அக்கினி சயனத்தின் மீது, அவ்வக்கினியைச் சகித்துக் கொண்டு நித்திரை செய்கின்றனர்.* 44

*உண்ணுதற்குரிய அன்னஞ் சுடும்போது, அதனைத் தொட முடியாது வருத்த முற்றவர் இறந்தபின் இடுகாட்டில் அக்கினி சயனத்தின்மீது யாதொரு வருத்தமுமின்றி உறங்குகின்றனர்; இவ்வா றவ ரிருப்பதற்குக் காரணம் யாதென்று விசாரித்தால், உயிர் உடம்பினும் வேறென்பது நன்கு விளங்கு மென்பதாம்.*

*உடம்பினுள் உயிருள்ளபோது அது சிறு சூட்டையும் பொறுத்தற்குரிய தாகாது வருத்த முறுகின்றது; அது நீங்கிய*

காலத்தில் கட்டை முட்டைகளைப் போல எரிக்கப்படுகின்றது; அஃதவ்வா றெரிக்கப் படுவதால், உயிர்க்கு பாதொரு வருத்தமும் சம்பவியாதிருக்கின்ற தென்பது இங்குணர்தற்பாற்றும்.

> ஆயு பாரறுந்த காலத் துருத்துவெந்
> தீயட லானுமிங் குந்தீபற
> தேகந் தானல்லை யுந்தீபற"

என்று அவிரோத வுந்தியார் கூறுகின்றது.

**கைகால் முதலிய அவயவங்கள்**
**சுதந்தரமாகத் தொழில் செய்வதில்லை ;**
**அவற்றைத் தொழில் செய்விக்குமொன்று**
**உடம்பிற்கு வேறாக அதனுள்**
**இருக்கின்றதென்று கூறல்.**

45. நிழற்பாவை கண்ணாடி யிற்பாவை கைகால்
நிமிர்க்கும் முடக்கும் மிவண்செய்யு மெல்லாந்
தொழிற்பால வாமற்றிவ் வுடலஞ்செய் தொழிலுஞ்
சுடர்ஞான வடிவான வன்செய்த தொழிலே.

சூரியன் - சந்திரன் - தீப மென்பனவற்றால் தோன்றும் ஒருவனது உடம்பின் நிழல் வடிவமும், கண்ணாடியில் தோன்றும் பிரதிபிம்ப வடிவமும், கையை நிமிர்த்

தலையும் முடக்குதலையும், காலை நிமிர்த்தலையும் முடக்கு
தலையும் செய்கின்றனவன்றே? அத்தொழிலெல்லாம்
இவன் செய்யும் தொழில்களால் நிகழ்வனவாம்; அது
போல, இவ்வுடம்பு செய்யுந் தொழில்களும் ஞானவடி
வாயுள்ள ஆத்மா செய்யுந் தொழில்களால் நிகழ்வன
வாம். 15

ஒருவனது உடம்பின் நிழல் வடிவமும் பிரதிபிம்ப வடிவமும் கையையும் காலையும் நிமிர்த்தலையும் முடக்குதலையும் செய்வது போலத் தோன்றுவதற்குக் காரணம் அவன் தனது கையையும் காலையும் நிமிர்த்தலையும் முடக்குதலையுஞ் செய்தலாம். அவன் தனது கையையும் காலையும் நிமிர்த்தலையும் முடக்குதலையும் செய்யாவிட்டால், அவனது நிழல் வடிவமும் பிரதிபிம்ப வடிவமும் தமது கையையுங் காலையும் நிமிர்த்தலையும் முடக்குதலையும் செய்வதில்லையாம்; அங்ஙனமே, உயிர் தனது கையையுங் காலையும் நிமிர்த்தலையும் முடக்குதலையும் செய்யவேண்டுமென்று சங்கற்பஞ்செய்கின்றபோது அவைநிமிர்த்தலையும் முடக்குதலையுஞ் செய்கின்றன; அவ்வுயிர் அவ்வாறு சங்கற்பஞ் செய்யாதபோது, அவை நிமிர்த்தலையும் முடக்குதலையும் செய்வதில்லையா மென்பதாம். உடம்பினது ஒவ்வொரு தொழிலும் ஆத்மா தொழில் செய்கின்றபோதே நிகழுகின்றது; அது வாளாவிருக்கின்றபோது அதனிடத்து நிமிர்த்தல் முடக்குதல் முதலிய தொழில்களுள் ஒன்

றுஞ் சலமுறுவ தில்லையா மென்பதிங்குணர்தல் வேண்டும். ஆத்மா ஞானவடிவமா யிருத்தலின், நிர்விகார வடிவமாம். நிர்விகார வடிவமா யிருப்பினும், கேவலத்தில் அவித்தையிலும், சகலத்தில் அவித்தையின் காரியமாயுள்ள அந்தக்கரணத்திலும் பிரதிபிம்பித்துச் சீவ சொரூபமாய் விளங்குகின்றது; சீவ சொரூபமாய் விளங்கும் நிலைமையில் விகார முடையதுபோலத் தோன்றி, தேகேந்திரிய முதலியவற்றை யியக்கும் தொழிலுடையதாக விருக்கின்ற தென்பது சாஸ்திரார்த்தமாம். கேவலம்-சுழுத்தியாம்; சகலம்-சாக்கிரமும் சொப்பனமுமாம். காந்தக் கல்லின் சந்நிதானத்தில் இரும்புகள் தொழிற்படுவதுபோல, ஆத்ம சந்நிதானத்தில் தேகேந்திரியாதிகள் தொழிற் படுகின்றன வென்பதிங் குணர்தற்பாலதாம்.

"உன்முகம் போற்கண் ணாடிக் குள்ளொரு முகங்கண் டாற்போல், சின்மய வடிவின் சாயை சித்துப்போற் புத்தி தோன்றும்" என்றும், "செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குங் காந்தச் சிலைமலைமுன் னிரும்புகள்சேட் டிக்கு மாபோல், செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்கு மென்முன் செடமான வுலகமெலாஞ் சேட்டை செய்யும்" என்றும், கைவல்லிய நவநீதங் கூறுவதிங் குணர்தற் பாலதாம்.

இதனால், கைகால் முதலியன தாமே யியங்குந் தன்மையைப் பெறாது உயிரி னியக்கத்தா லியங்குவனவா யிருத்தலால், உயிர் உடம்பாகாதெனவிளக்கியவாறறிக.

**ஒரு வீட்டினுள் ளிருந்துகொண்டு**
**அவ் வீட்டை யறிபவன் அவ் வீடாகாமைபோல**
**உடம்பினுள் ளிருந்துகொண்டு**
**அவவுடம்பை யறியும் ஆத்மாவும்**
**அவ் வுடம் பாகாதெனக் கூறல்.**

46\. அறிகின்ற பொருளென்று மறிவானில் வேறே
யானாலிவ் வூனுரை நானென்ன லாமோ
செறிகின்ற புள்ளல்ல வேகூடிவ் வகையே
சேடமான வுடனின்னில் வேறென்று தெளியே.

*அறியப்படும் பொருள்களெப்போதும் தம்மை யறிகின்றவனுக்கு அன்னியமாயிருப்பனவாமன்றோ? அங்ஙனமாயின், ஆத்மாவால் அறியப்படுவதாயுள்ள இம்மாமிச வடிவ வுடம்பை ஆத்மாவென்று கூறுதல் பொருந்துமோ? பொருந்ாதன்றோ? மேலும், கிளி-காடை முதலிய பறவைகள் வசிக்கின்ற கூடு அப்பறவைகளாமோ? ஆகாதன்றோ? (இங்ஙனமே, ஆத்மா வசிக்கின்ற வுடம்பு ஆத்மாவாமோ? ஆகாதன்றோ? ஆதலால், சசிவன்ன!) நீ சட வடிவமாயுள்ள வுடம்பு சித்*

வடிவமாயுள்ள உனக்கு வேறாகவே யிருக்கின்றதென் பதைத் தெளிவா யறியக்கடவாய். 46

இவ்வுடம்பி னிருப்பு சாக்கிராவஸ்தையிலும், இதனது அபாவம் சொப்பனாவஸ்தையிலும் சுழுப்தி யவஸ்தையிலும் ஆத்மாவா லறியப் படுவனவா யிருத்தலின், இவ்வுடம்பு ஆத்மாவாக மாட்டாது; மேலும், கூட்டில் வசிக்கும் பறவை அக்கூடாகாமை போல, உடம்பில் வசிக்கும் ஆத்மாவும் அவ்வுடம்பாகா தென்பதாம். சேதனமாய் அருவாய் நித்தமா புள்ள ஆத்மாவும், அசேதனமாய் உருவாய் அநித்தமா புள்ள வுடம்பும் தம்முள் பாறாக விருப்பனவா மாதலின், அவ்விரண்டும் ஒன்றாகா; அங்ஙன மிருப்பினும், ஆதமா வினை வயத்தால் உடம்போடு கூடியிருக்கின்ற தென்பதிங் குணர்தற்பாலதாம்.

இனிக் கூடு என்பதற்கு முட்டை யென்று பொருள் கொள்ளுதலும் கூடும். முன்னர் முட்டையும் கருவும் (பறவையும்) வேறாகாதிருந்து பின்னர் வேறாய் விடுதல் போல, முன்னர் உடம்பும் ஆத்மாவும் வேறாகா திருந்து பின்னர் (மரண காலத்தில்) வேறாய் விடுகின்றன வென்பது மிங்குணர்தல் வேண்டும். "ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்றினும், வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர்" என்று நன்னூல் கூறுகின்றது.

"நடுங்கும்வெங் காய வனத்துழல் வோர்க்கு நதியெனு ஞானநீ ரன்றி, இடும்பைதீர்ப் பதுவே றிலைநிரு விகற்பத்

தேகமா யிலஙகுமெய்ஞ் ஞானி, குடம்பைநீத் தேகும் புள்ளெனச் சூழ்ந்த கொடுஞ்சடம் வேறதாய் நிற்பன்" என்று பெரியார் கூறுவது இங்குங் கவனித்துணர்தற்பாலதாம். குடம்பை-கூடு; சடம்-உடம்பு.

## இவ்வுடம்பு பூதகாரியமா யிருத்தலின், ஆத்மாவாகாதெனக் கூறல்.

47. நிலமாகும் வற்பென்ற னெகிழ்கின்ற னீரா
நெருப்பா மிதிற்சுட்ட வெல்லாமு மநிலஞ்
சலமான புரையான வானிந்த வுடலஞ்
சடமான வைம்பூத வுருவங்க டாமே.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாய மென்னும் பஞ்ச பூதங்களின் காரியமாயுள்ள இவ்வுடம்பு சடமாம்; (ஆகலின், அது சித்தாகிய ஆத்மா வன்றாம். இவ்வுடம்பு பஞ்சபூதங்களின் காரியமா மென்பது எவ்வாறு மெனின், கூறுதும்). இவ்வுடம்பில், கடினமா யிருக்கும் பகுதி யெல்லாம் பிருதிவியின் காரியமாம்; நெகிழ்ச்சியா யிருக்கும் பகுதியெல்லாம் அப்புவின் காரியமாம்; சுடுந் தொழிலை யுடையனவா யிருக்கும் பகுதி யெல்லாம் தேயுவின் காரியமாம்; சலனமா

யுள்ள பகுதியெல்லாம் வாயுவின் காரியமாம்; புரையாயுள்ள பகுதியெல்லாம் ஆகாயத்தின் காரியமாம். 47

சலனம் - அசைவு; புரை - துவாரம்.

ஆதலால், பூதங்களின் காரியமாயுள்ள உடம்பு காரண காரிய ரகிதமாயுள்ள ஆத்மாவாகாதென மறுத்தவாறறிக.

“அன்னமே செய்த தூல வாக்கையே யன்ன கோசம், அன்னமுண் டாலவ் வுய்யு மஃதிலா தேலி றக்கும், துன்னிய மேதை யத்தி தோன்முதற் கூட்ட மான, அன்னது நித்த சுத்த மாகிய வான்மா வாகா” என்று விவேகசூடாமணி கூறுகின்றது.

இதுகாறும் ஸ்தூல தேகம் ஆத்மாவாகாதென்பது கூறப்பட்டதென்க.

## ஞானேந்திரியங்கள் ஆத்மாவாகா வெனக் கூறல்.

48. விழியைப்பு மானென்னில் ரவியாதி யாலே
விளங்கின்ற தல்லால் விளங்காமை யாலே
யொழியப் படுங்கன்ன முதனான்கு மொன்றா
னுருக்கண்ட கண்டன்னை யொப்பாக வுன்னே

சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்ஙுவை, கிராணம் என்னும் ஞானேந்திரியங்களுள், சட்சு உலக வியவ

காரஞ் செய்வதற்கு முக்கிய காரணமா யிருத்தலின், அதனை ஆத்மாவென்று கொள்ளுதல் கூடாதோவென்று சசிவன்ன! நீ கூறுவையாயின், அவ்வாறு கூறுதல் கூடாது. சட்சுவென்னுங் கண்ணிந்திரியம் சூரியன் - சந்திரன் - தீபமென்னு மொளிப் பொருள்களின் சம்பந்தத்தால் விளங்குகின்றதல்லாமல், தானே விளங்குகின்றதில்லையாம்; ஆகையால், அது சுயம்பிரகாசப் பொருளன்றும்; சட்சு விந்திரிய மொழிந்த சுரோத்திரம்-துவக்கு-சிங்ஙுவை-கிராணமென்னும் நான்கிந்திரியங்களும் ஆத்மாவன்றும்; அவற்றை உருவ முதலியவற்றை யறிவதற்குச் சாதனமா யுள்ள உனது சட்சு விந்திரியத்திற் கொப்பாகக் கருதக் கடவாயாக. 48

சுரோத்திர முதலிய இந்திரியமைந்தும சுயம்பிரகாசப் பொருள்களன்றாகலின், அவை ஆத்மாவன்று; எது சுயம்பிரகாசப் பொருளோ அதுவே ஆத்மாவாம். சுரோத்திர முதலிய இந்திரியங்கள் ஆத்மாவின் சம்பந்தத்தால் சுயம்பிரகாசப் பொருள்கள் போல விருந்து, சத்த முதலியவற்றை யறிதற்குச் சாதனமாயிருக்கின்றன; அவற்றை ஆத்மாவென்று கூறுதலை பா தென்பதாம்.

கண்ணிந்திரியம் சூரியன், சந்திரன் முதலிய ஒளிப்பொருள்களின் சம்பந்தத்தால் விளங்குகின்றது; அதற்குச் சுயம்பிரகாச

மின்றென்று கூறியது இந்திரியங்களுக்குச் சுயம்பிரகாச மின்றென்பதை விளக்குவதற்காம். சுயம்பிரகாச மென்பது இங்கு அனுபவப் பிரகாசமாம். அஃதாவது எப்போதுங் கெடுதலில்லாத பிரகாசமாம். சூரியன் சந்திரன் முதலிய வொளிப்பொருள்கள் ஒரு காலவிசேஷத்திற் கெடுவனவாயிருத்தலின் அவை சுயம்பிர காசப் பொருள்களன்றென்ப துணர்தல் வேண்டும்.

மனத்தோடுகூடிய ஆத்மா சுரோத்திர முதலிய விந்திரியங்களோடு கூடியபோது, அவை சத்த முதலியவற்றை யறிவதற்குச் சாதனமாகின்றன வென்பது விளங்குமாயினும், சுரோத்திர முதலிய விந்திரியங்கள் ஆத்மாவுக்கா மென்பது நன்கு விளங்குவதாம். சட்சு இந்திரியம் ஒளிப் பொருள்களின் சம்பந்தமில்லாதபோது உருவ முதலியவற்றை அறிவதற்குச் சாதனமாவதில்லை, ஒளிப்பொருள்களின் சம்பந்த முள்ளபோதே அவற்றை யறிவதற்குச் சாதனமாகின்றது. சுரோத்திர முதலிய மற்ற ஞானேந்திரியங்களோ ஒளிப் பொருள்களின் சம்பந்தமில்லாமலே சத்த முதலியவற்றை யறிவதற்குச் சாதனமாகின்றன வென்பதும், அவை மனத்தோடு கூடிய ஆத்மாவின் சம்பந்தமில்லாதபோது கடம் படம் முதலியனபோல ஜடமாகவே யிருக்கின்றன வென்பதும் கூர்ந்து நோக்குவோர்க்கு நன்கு விளங்குவனவாம்.

சைவருள் ஒரு பகுதியார் கண்ணுக்குச் சுயமாகவே ஒளியுண்டு. அது விளங்குவதற்குச் சூரியன் முதலிய வொளிப்

பொருள்கள் உதவியாயிருக்கின்றன வென்று கூறுவதை மறுக்க, இங்குக் கண்ணுக்கு இயற்கையாக வொளி யில்லை யென்பது கூறப்பட்டது. மின்மினிப் பூச்சியின் ஒளியும் மற்றொரு ஒளியால் விளங்காது, தானே விளங்குவதா யிருத்தலை உய்த்துணரா வார்க்குக் கண்ணொளி விளங்குதற்குச் சூரியன் முதலிய ஒளிப் பொருள்கள் உதவியா யிருக்கின்றன வென்று கூறுவார் கூற்று, எறும்பு எறும்பிலை (யானையை) விழுங்கிய தென்பார் கூற்றுப் போன்று இறும்பூதாகவே (வியப்பாகவே) தோன்றுமென்க. மேலும், அவர் கண்ணொளியும் கதிர் (சூரியன்) ஒளியும் கூடி ஒன்றாய் விளங்குதல் போல, சீவனும் சிவமுங் கூடி ஒன்றாய் விளங்குதலே அத்துவிதமா மென்று கூறுகின்றனர். இவா கூறுவதைச் சொரூபானந்தர் சொரூபசாரத்தில்

"விண்ணுருவ மீசனென்பர் வேறுருவஞ் சீவனென்பர்
கண்ணு மிரவியும்போற் கானென்பர்—திண்ணமதாய்
அத்துவித மாகா தவையிரண்டு மாகாத
சித்துருவந் தானே சிவம்"

என்று கூறி மறுத்திருக்கின்றனர்.

சத்தத்தைக் கேட்டல் சுரோத்திர (காது) இந்திரியத்தின் வியாபாரமாம்; பரிசத்தை யறிதல் துவக்கு (மெய்-உடம்பு) இந்திரியத்தின் வியாபாரமாம்; உருவத்தை யறிதல் சட்சு (கண்) இந்திரியத்தின் வியாபாரமாம்; இரசத்தை யறிதல் சிங்குவை

(நாக்கு) இந்திரியத்தின் வியாபாரமாம், வாசனையை யறிதல் கிராண (மூக்கு) இந்திரியத்தின் வியாபாரமாம். சுரோத்திர முதலிய இந்திரியங்கள் மனத்தொடு கூடிய ஆத்மாவின் சம்பந்தமுள்ள போது கேட்டல் முதலிய வியாபாரங்களைச் செய்கின்றன. அச்சம்பந்தமில்லாதபோது அவ்வியாபாரங்களைச் செய்யாதிருக்கின்றன, இவ்வாறிருத்தலால், அவற்றை ஆத்மாவெனக் கொள்ளுதல் கூடாதென்பது இதனால் விளங்கியவாறறிக.

## கர்மேந்திரியங்களும் ஆத்மாவாகா வெனக் கூறல்.

வேறு

49 அழலுண்பொருள் களிலுண்பன வ முக்கூறதின்
முதற்கூ றணியென்பு நடுக்கூறது மச்சைகசணி
யாகு, மெழில்கொண்ட கடைக்கூறது வாக்கா
யெழுமென்றே யியனுன்மறை யந்தங்க ளிசைக்
கின்றன தாமே.

ஒருவனுண்ணுதற்குரிய எண்ணெய்,நெய் முதலிய வுணவுகளுள் உதராக்கினியால் சீரணமானவை மூன்று பாகமாம்; அவற்றுள், முதற்பாகம் எலும்போடுகூடி அவ்வெலும்பாக அமைகின்றது; நடுப்பாகம் மச்சை

யோடு கூடி, அம்மச்சையாக அமைகின்றது; கடைப் பாகம் வாக்கிந்திரியத்தோடுகூடி அவ் வாக்கிந்திரியமாக அமைகின்றதென்று அநாதியாக நடைபெற்று வருகின்ற வேதாந்தங்கள் கூறுகின்றன. 49

மச்சை-கொழுப்பு; வேதாந்தம்-உபநிடதம்; அநாதி - உற்பத்தியில்லாதது. சாந்தோக்கிய உபநிடதம் 6-வது பிரபாடகத்தில் இவ்விஷயங்களை விரிவாகக் கூறுகின்றது.

இதனால் ஒருவனுண்ணும் எண்ணெய் நெய் முதலிய உணவு சீரணமாயபோது, அதுமூன்று பாகமாக அமைகின்றது; அவற்றுள் முதற்பாகம் எலும்போடு கூடி அவ்வெலும்பாகவும் இரண்டாமபாகம் மச்சையோடு கூடி அம்மச்சையாகவும், மூன்றாம்பாகம் வாக்கிந்திரியத்தோடு கூடி அவ்வாக்கிந்திரியமாகவுமமைகின்றன; சீரணமாய வுணவால் விருத்தியடைந்து வருகின்ற எலும்பு, மச்சை, வாக்கிந்திரிய மென்னு மூன்றனுள் எலும்பும் மச்சையும் நீயாகுமாயின், வாக்கிந்திரியமும் நீயாதல் கூடும்; எலும்பும் மச்சையுமநீயன்றாகலின், வாக்கிந்திரியமும் நீயன்று எனக் கூறியவாறறிக.

சீரணமாய வுணவின் சத்துவபாகம் வாக்கிந்திரியத்தோடு கூடி அவ்வாக்கிந்திரியமாகவும், இராசதபாகம் மச்சையோடு கூடி அம்மச்சையாகவும், தாமதபாகம் எலும்போடுகூடி அவ்வெலும்பாகவு மமைகின்றன வென்பதிங் குணர்தல் வேண்டும்.

கர்மேந்திரிய மைந்தனுள் வாக்கிந்திரியம் ஈ (ஆகாய) அன்றென்று தலைமைபற்றிக் கூறப்பட்டது; படவே, ஏனைய இந்திரியங்களும் ஈடன்றென்று கூறப்பட்டதென்றுங் கொள்ளல் வேண்டும்.

கர்மேந்திரியம்: வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் என்பனவாம்.

வாக்கிந்திரியத்தின் வியாபாரம் வசனித்தலாம்; பாத இந்திரியத்தின் வியாபாரம் நடத்தலாம்; பாணி (கை) இந்திரியத்தின் வியாபாரம் இடுதலேற்றலாம்; பாயுரு இந்திரியத்தின் வியாபாரம் மலங்கழித்தலாம்; உபஸ்த இந்திரியத்தின் வியாபாரம் ஆநந்தித்தலாம். உடம்பினுள் வசிக்கும் உயிர்க்குச் சுரோத்திர முதலிய ஞானேந்திரியங்கள் அது கேட்டல் முதலிய வியாபாரங்களைச் செய்வதற்குச் சாதனமாயிருத்தல்போல, வாக்கு முதலிய கர்மேந்திரியங்களும் வசனித்தல் முதலிய வியாபாரங்களைச் செய்வதற்குச் சாதனமாயிருக்கின்றன வென்பதாம். ஒருவனுக்கு அவன் நடப்பதற்குச் சாதனமாயுள்ள தடி அவனாகாமை போல, உயிர்க்கு அது கேட்டல் முதலிய வியாபாரங்களைச் செய்வதற்குச் சாதனமாயுள்ள ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் அஃதாகா வென்பதிங் குணர்தல் வேண்டும்.

### ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களும் கானென்பதன் பொருளாகாவென்பது ஒக்கும்; பிராணவாயு ஏன் கானென்பதன் பொருளாகா தெனனும் வினாவிற்கு விடை கூறல்.

50. உண்ணும்புனன் முக்கூறதின் முதற்கூறுபவர் நீரா
ருதிரநடு விற்கூறு கடைக்கூறு பிராண,
னெண்ணும்மிதி லிருகூறவை நீயாயிடி னன்றே
விறுகின்ற பிராணன்னது நீயாதலை யிசையே.

*ஒருவன் குடிக்கின்ற நீர் சீரணமாயபோது மூன்று பாகமாம்; அவற்றுள், முதற்பாகம் மூத்திரமாம்; நடுப் பாகம உதிரத்தோடுகூடி அவ்வுதிரமாம்; கடைபபாகம் பிராணவாயுவோடு கூடி அப்பிராண வாயுவாம். மூத்திரம, உதிரம், பிராணவாயு வென்னு மிம்மூன்றனுள், மூத்திரமும் உதிரமும் நீ யானலென்றே பிராணவாயுவும் நீயாதல் கூடும்? சசிவன்ன! நீ இக்கூறு பாட்டை ஆலோசித்துக் கூறக்கடவாய்.* 50

*இதனால் ஒருவன் குடிக்கும் நீர் சீரணமாயபோது அது மூன்றுபாகமாக வமைகின்றது; அவற்றுள், முதற்பாகம் மூத்*

கிரமாகவும், இரண்டாம்பாகம் உதிரத்தோடுகூடி அவ்வுதிரமாக வும், மூன்றாம்பாகம் பிராணவாயுவோடு கூடி அப்பிராணவாயு வாகவு மமைகின்றன; இம்மூன்றனுள் மூத்திரமும், உதிரமும் நீயாகுமாயின், பிராணவாயுவும் நீயாதல்கூடும்; மூத்திரமும் உதிரமும் நீயன்றாதலின், பிராணவாயுவும் நீயன்று எனக் கூறிய வாறாம். உதிரம் - இரத்தம்.

சிரணபாப நீரின் சத்துவபாகம் பிராணவாயுவோடு கூடி அப்பிராண வாயுவாகவும், இராசதபாகம் உதிரத்தோடு கூடி அவ்வுதிரமாகவும், தாமதபாகம் மூத்திரமாகவு மமைகின்றன வென்பதிங் குணர்தல் வேண்டும்.

மனம் பிருதிவியின் (மண்வடிவ அன்னத்தின்)காரியமாயும், வாக்குத் தேயுவின் (அக்கினியின் சம்பந்தமுள்ள எண்ணெய் நெய்முதலியவற்றின்) காரியமாயும், பிராணன் அப்புவின்(நீரின்) காரியமாயு மிருத்தலின், அவை ஆத்மா வாகாவென்பது இங்குத் தொடர்பாக வுணர்த்தப்பட்ட தென்க. கடையப்பட்ட தயிரின் சூக்குமாம்சம் வெண்ணெயாவதுபோலப் பிருதிவியின் சூக்குமாம் சம் மனமாகவும், தேயுவின் சூக்குமாம்சம் வாக்காகவும், அப்புவின் சூக்குமாம்சம் பிராணனாகவு மமைகின்றன வென்பதிங் குணர்தற் பாலதாம். பஞ்சபூதத்துள் பிருதிவி - அப்பு - தேயு வென்னு மூன்றுமே காம் உண்பன - தின்பன - நக்குவன - பருகுவனவா யுள்ள அன்னபானங்களாக வமைகின்றன வென்பது மிங் குணர் தற் பாலதாம்.

"கடையப்படு தயிரிற்றிரணெய்போன் மனமுகமா
லுடையிற்செயுமியல்வேறிலை"

என்று பிரமகீதை கூறுகின்றது.

இருதய ஸ்தானத்திலிருந்து, மூக்குநுனி பரியந்தம் சென்று உச்சுவாச நிச்சுவாசஞ் செய்யும் வாயு பிராண வாயுவாம்.

பிராண பஞ்சகத்துள் பிராணவாயு நியமனமென்று தலைமை பற்றிக் கூறப்பட்டது. படவே, மற்ற வாயுக்களும் நியமனமென்று கூறப்பட்டதென்றுங் கொள்ளல் வேண்டும்.

பிராணபஞ்சகம்-பிராணன் அபானன் சமானன் உதானன், வியானனென்பனவாம்.

குதஸ்தானத்திலிருந்து மல மூத்திரங்களைக் கழிப்பிக்கும் வாயு அபானனும், நாபி ஸ்தானத்திலிருந்து உண்ட அன்ன சாரத்தைச் சர்வாங்கத்திற்கும் பகுத்துக் கொடுக்கும் வாயு சமானனும், கண்ட ஸ்தானத்திலிருந்து வாந்தி பண்ணுவிக்கும் வாயு உதானனும், சர்வாங்கத்திலுமிருந்து தேகத்தை நிறுத்துவிக்கும் வாயு வியானனும்

### பிராணவாயு ஆத்மாவாகாதென்பது விளங்க வில்லை யென்னும் வினாவிற்கு விடை கூறல்

(வேறு)

51 பிராணனு மல்ல துஞ்சி லுணர்வின்மை
யாலஃ துணரும் புலன்க ளோர்ந்திவாற,
பிராணன தென்னின் மன்னை யொழியாது
சேனை நகர்சூழ் வளஞ்செய் பொழிந்த

(தேகம், ஞானேந்திரியம், கன்மேந்திரிய மென்பன வற்றுள் எதுவும் ஆத்மாவாகாதென்று தேவரீர் அருளிய தொகுதும்; பிராணவாயு ஆத்மாவாகாதென்பது விளங்கவில்லை; அதனைத் தேவரீர் அருளிச்செய்தல் வேண்டுமென்றனன் சசிவன்னன். அதுகேட்ட பிராநந்திபரமபர முனிவர் அவனை நோக்கி அன்பனே! நீ யான் கூறுவதைக் கவனமாய்க் கேட்கக்கடவாய்). பிராணவாயுவும் ஆத்மாவன்று; அஃதெதனாலெனின், அது நாம உறங்கும்போது சடமா யிருத்தலாலும், விஷயங்களை யறியும் இந்திரியங்களின் சம்பந்தமில்லா திருப்பதினாலு மாம். (இங்ஙன மிருப்பதால் பிராணவாயு எவ்வகையாலும் ஆத்மாவாக மாட்டாது.) பிராணவாயு நாம உறங்கும்

போது சுரோத்திரமுதலிய இந்திரியங்களை அடங்கிப்போ வனைப் போன் றடங்குவதாகாது தனது வியாபாரத்தைச் செய்திருப்பதற்குக் காரண மென்னை யெனின், அரசன் நகர்வலஞ் செய்யும்போது அவனது சேனை அவனை விடாது சூழ்ந்திருத்தல் போல, ஆத்ம வரசன் புரத்திரய நகர்வலஞ் செய்யும்போது, அவனது சேனையாகிய பிராணவாயு அவனை விடாது சூழ்ந்திருக்கின்றது. (அரசனுஞ் சேனையும்போல ஆத்மாவும் பிராணவாயு மிருக்கின்றன வென்பதை நீ யுணரக் கடவாய்). 51

புரத்திரயம்-சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி யென்னும் அவஸ்தைகளாம்.

நாம் உறங்கும்போது பிராணவாயு சடமாயும், விஷயங்களை யறியும் இந்திரியங்களின் சம்பந்தமில்லாததாயு மிருத்தலின், ஆத்மாவாக மாட்டாது; அரசன் நகர்வலஞ் செய்யும்போது, அவனை அவனது சேனை சூழ்ந்திருத்தல்போல ஆத்மா புரத்திரயத்திற் சென்றுலாவும்போது அதனை அதனது சேனைபோலுள்ள பிராணவாயு சூழ்ந்திருக்கின்றது; அரசனும் சேனையும் ஒன்றாகாமைபோல, ஆத்மாவும் பிராணனும் ஒன்றாகாவென்பதாம்.

ஒருவன் சாக்கிராவஸ்தை யுடையவனா யிருக்கும்போதும், சொப்பனவஸ்தை யுடையவனா யிருக்கும்போதும், சுழுத்தி

யவஸதை புண டபவனுயிருககுமபோதுய, அவன பிராணவாயுவை உடைபவனுக காணபபடுதலின, நகாவலஞெசெயயும அரசனை அவனது சேனை விடாது சூழநதிருததலபோல, புாததிரயததிற சென்று உலாவும ஆதமாவையும பிராணவாயு விடாது சூழநதிருக கின்ற தெனபது இங்குணாதற பாலதாம

ஆதமா-சாககிர வஸதையில ஸதூலபஞசபூதம, தசேநதிரியம, பிராணதிவாய பஞசகம, அநதககரண சதுஷடயமெனனும இருபததுநானகு தததுவ வடிவ ஸதூல சரீரததிலிருநது வியவகாரஞ செயகினற தெனறும, சொபபன வஸதையில இவவிருபததுநானகு தததுவஙகளுள ஸதூல பஞச பூத மொழிநத சூககும சரீரததிலிருநது வியவகாரஞ செயகினறதெனறும, சுழுததி யவஸதையில ஆ தததததுவஙகளுககுக காரணமாயுளள அஞஞானமெனனும காரண சரீரததிலிருநது வியவகாரஞ செயகினற தெனறும, சொபபனவஸதையிலும சுழுததி யவஸதையிலும பிராணவாயு வில்லாவிடினும, அவவவஸதைகளை படைநது கிடககினறவனை நோககுவோாககு அவனது சரீரததில பிராண வாயு தோனறுதலின, அஃது அவவவஸதைகளி லிருககினற தெனறு கொளளபபடுகினற தெனறும இஙகு உணாதல வேணடும

"ஒனறனையா மூலத" எனனும சிவஞானபோத வெணபாவுனுரையில பாணடிப்பெருமாளவாகள "எனறது அநதககரண

ங்கள் அமைச்சராகவும், வாயில்காப்பார்-ஒற்றர்கள்-தூதாள்-அத்தாணிகள்-புரோகிதர் ஐவரும் ஞானேந்திரியங்களாகவும், யானைப் படை-குதிரைப்படை-தேர்ப்படை-காலாள்-சேமப்படையர் ஐவருங் கன்மேந்திரியங்களாகவும், சத்தாதி-வசனாதி விடயங்களைந்தும் ஏவலாட்களாகவும், பிராணவாயு முதலிய வாயுக்கள் உறுதிச் சுற்றமாகவும் உடைய ஆன்மாவாகிய அரசன் என்றதாய், இராசா பவனிபோய்த் தன்னுடைய கோயிலுட் புகுமளவில் வாயில் தோறும் நிற்குமவர்களை நிறுத்தி அந்தப்புரத்தில் தானே புகுமாறுபோல, கருவி கரணாதிகளுடனே உணர்த்து முறையிலே வியாபரித்த ஆன்மா சாக்கிரம் - சொப்பனம் - சுழுத்தி - துரியம் - துரியாதீத மென்கின்ற அவஸ்தைகளைப் பொருந்தி இலாடம்-கண்டம்-இருதயம்-நாபி-மூலாதாரமாகிய இடங்களை யடையுமளவில், அவையிற்றில் நிற்குங் கருவி கரணாதிகளை முறைமையிலே நிறுத்தி யடைவ னென்றதாய்" என்று கூறிய நுட்பத்தினுந் உணர்தற்பாலதாம்.

## சுரோத்திர முதலியன வொடுங்கியவிடத்தும் பிராணவாயு வொடுங்காதிருப்பதற்குக் காரணங் கூறல்.

52. கண மொடுங்க வாயு நிகழ்வென்கோ
லென்னி லுடல்காவ லாகு மிலதேன்,

மரண மடைந்த தென்று தமர்சுட்
டிடா முன் வளைவாலின் ஞாளி கொளுமே.

சிவன்முன்! நீ சுரோத்திர முதலியன வொடுங்கிய விடத்தும், பிராணவாயு விருந்து உசுவாச நிசுவாசங்களைச் செய்தற்குக் காரணமியாது என்று வினவுவாயாயின், அதற்கு விடை கூறுகின்றேன், கேட்கக்கடவாய். ஒருவனுறங்குங் காலத்தில் பிராணவாயு தான் வசிக்கின்ற அவனுடம்பிற்கு உசுவாச நிசுவாசங்களைச் செய்துகொண்டு காவலாக விருக்கின்றது; அஃதவ்வா றிலதாயின், அவ்வுடம்பை மரணமடைந்து விட்டதென்று அவனது சுற்றத்தார் இடுகாட்டிற் கொண்டுபோய்ச் சுடுவதற்கு முன்னே (வளைந்த வாலையுடைய) நாய் தனக் காகாரமாகக் கொண்டுவிடும். (உறங்குகின்றவ னுடம்பு மங்களகரமாக விளங்குதற் பொருட்டு, பிராணவாயு ஒடுங்காதிருக்கின்றது; இஃதிவ்வாறிருப்பது ஈசனது ஆணையாமென் றறியக்கடவாய்) 52

பிராணவாயு ஒருவனுறங்குகின்ற காலத்தில் சுரோத்திர முதலியவற்றைப்போல ஒடுங்கி விடுமாயின், அவனுடம்பு பிணம்

போலத் தோன்றுவதாம்; அஃதவ்வாறு தோன்றுவாறு, ஈசனது கட்டளையால் பிராணவாயு ஒடுங்காதிருக்கின்றதென்பதாம்.

அரசன் தான் வசிக்கும் வீட்டிலுறங்கும்போது அவ்வீட்டை முக்கியமாய சேவகர்கள் தாம் நீங்காது காத்துக்கொண்டிருப்பதுபோல, சீவன் தான் வசிக்கு முடம்பில் உறங்கும்போது அவ்வுடம்பை (தேகத்தினிருப்பிற்கு) முக்கியமாய பிராணவாயு தானீங்காது (ஒடுங்காது) காத்துக்கொண்டிருக்கின்றதென்பது இங்குணர்தற்பாலதாம்.

இங்கு உறங்குதலென்பது சொப்பனாவஸ்தையும் சுழுப்தியவஸ்தையுமாம்.

## மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அந்தக்கரண சதுஷ்டயத்துள் ஒன்று ஆத்மாவாகாதோ வென்னும் வினாவிற்கு விடை கூறல்

## மனமும் ஆத்மாவன்று, புத்தியும் ஆத்மாவன்றெனல்.

53. இனமுற வெண்ண வுள்ள கரணத்தி
லொன்றி தெனலா லிதென்ன தெனலான்,

**மனமுன மன்ன மென்ற வதனலு**
**மல்ல மதியல்ல வந்த வகைகயே.**

ஞானேந்திரிய பஞ்சகம், கர்மேந்திரிய பஞ்சகம், பிராண பஞ்சகம் என்னுந் தத்துவங்களுக்கு இனமாக வெண்ணா விருக்கின்ற அந்தக்கரண சதுஷ்டயத்துள் ஒன்றாயிருப்பது இம்மனமென்று சொல்லப்படுவதனாலும், வியவகாரகாலத்தில் இஃது என்னுடைய மனமென்று சொல்லப்படுவதாலும், முன்பு (43-வது எண்ணில்) மனம் உண்ணுமுணவின் காரியமாமென்று கூறப்பட்டிருப்பதாலும், மனம் ஆத்மாவாகாது; அவ்வாறே புத்தியும் ஆத்மாவாகாது. 53

மனம் அந்தக்கரண சதுஷ்டயத்துள் ஒன்றாயும், என்னுடைய மனமென்று சொல்லுதற் குரியதாயும், உணவின் காரியமாயு மிருத்தல் போல, புத்தியும் அந்தக்கரண சதுஷ்டயத்துள் ஒன்றாயும் என்னுடைய புத்தியென்று சொல்லுதற்குரியதாயும், உணவின் காரியமாயு மிருத்தலின், அதுவும் மனம்போல ஆத்மாவாகாதென்பதாம்.

மனமும் புத்தியும் உணவின் காரியமாமென்பது அவை உணவில்லாதபோது, சோர்ந்து போவதால் நன்கு விளங்குவதாம். மரத்தின் விருத்திக்கு மண்ணும் - நீரும் - வெயிலும்,

காற்றும் அவசியமா யிருத்தல்போல, மனம் புத்திகளின் விருத்திக்கு உணவு அவசியமா யிருக்கின்றதென்பதிங் குணர்தல் வேண்டும்.

மனம் கரணரூபமாகவும், புத்தி கர்த்தா ரூபமாகவு மிருப்பனவாம்.

(1) தேகத்தில் அகந்தையும் (யானென்பதும்) வீடு முதலியவற்றில் மமதையும் (எனதென்பதும்) ஆகிய அபிமானத்தை வைத்துக்கொண்டு, இந்திரியங்களின் வாயிலாய் வெளியே செல்வதாய்க் கரண (கருவி) ரூபமா யிருப்பது மனமாம்.

(2) சாக்கிராவஸ்தையில் (நனவில்) நகநுனி முதல் சிகை வரையிலும் தேகத்தில் வியாபித்துக் கருத்தா (செய்பவன்) ரூபமா யிருப்பது புத்தியாம்.

விஷயங்களை நினைத்தல்வடிவ மனமும், அவற்றை நிச்சயித்தல் வடிவ புத்தியும், அந்தக்கரணத்தின் வியாபாரமாயும், மமதைக்கு (எனதென்பதற்கு) விஷயமாயும், உணவுள்ளபோது விகாசத்தையும் (விரிதலையும்) அஃதில்லாதபோது சங்கோசத்தையும் (சுருங்குதலையும்) அடைந்து வருவனவாயு மிருத்தலின், அவை ஆத்மாவாகா வென்பது கூறப்பட்டது.

## அகங்காரமும் ஆத்மாவன்றெனல்.

வேறு.

54. இடரின் புளதாய நிலையற றறிவற்
றெண்ணுங்கர ணங்க ளிலாயேவரும்,
அடரும் பிறவிக் கடியேன் றுணரு
மகங்காரமு நீயல வென்றறியே.

காணுள்ளளவும் சுகதுக்க வ்யவஹாரத்தை மாறாது தந்துகொண்டிருப்பதாயும், ஒரு கணமேனும் நிலைபெறுவதாகாது மாறிமாறி வருவதாயும், அசேதனமாயும், மனம் - புத்தி - அகங்காரம் - சித்தமென வெண்ணும் அந்தக்கரண சதுஷ்டயத்துள் ஒன்றாயும், (தத்துவ ஞானிகளல்லாதார்) யாவர்க்கும் (நெருங்கிய) பிறவி வருவதற்குக் காரணமாயுமுள்ளதென் றறியத்தக்க அகங்காரமும் நீ (ஆத்மா) அன்று சசிவன்னே! நீ இதனை நன்குணரக்கடவாய். 54

சுகதுக்கங்களைத் தருவதாயும், நிலையற்றதாயும், அசேதன (ஜட)மாயும், அந்தக்கரணசதுஷ்டயத்துள்ஒன்றாயும், பிறவிக்குக் காரணமாயுமுள்ளது அகங்காரமாம்; அஃதுன்னா லறியப்படுதலின், அதுநீ (ஆத்மா) அன்றென்பதாம்.

தேகாதி வடிவப் பிரபஞ்சத்தை யானெனவென்று அபிமானித்தல் வடிவ அகங்காரம் சேதனத்தின் சாயையை (கண்ணாடி சூரியனது சாயையைப் பெற்றதுபோல) ஏற்றுச் சேதனம்போல விளங்குகின்றது; அதனால், பலர் அகங்காரத்தையே ஆதமாவென்று தீர்மானித்து, மேற் செல்லுவதில்லாது கலக்க முற்றனர்; அகங்கார சாட்சியாக விளங்காதவளவும் அவர்க்குப் பிறவி யொழியாதென்பது இங்குணர்தற் பாலதாம்.

அகங்காரம் நானென்னும் வடிவமாக விளங்குவதாம். ஒருவன் கருங்குவளை மலரை யறியுமிடத்து, அவனுக்குக் கருமையென்னும் விசேஷணத்துடன் விசேஷியமாகிய மலர் விஷயமாவது போல, இளைத்தேன் நான், கண்டேன் நான், நினைத்தேன் நான் என்னுமிடத்து இளைத்தல், கண்டல், நினைத்தலென்னும் விசேஷணத்துடன் விசேஷியமாகிய நான் (அகங்காரம்) ஆத்மாவிற்கு விஷயமாதலால், அகங்காரம் ஆத்மாவன்றாம். கடத்தை யறிபவன் அதற்கு வேறாக விருத்தல்போல அகங்காரத்தை யறியும் ஆத்மாவும் அதற்கு வேறா யிருக்கின்றது; அதனால், அஃது அகங்காரமாகா தென்பது இங்குணர்தற்பாலதாம். இளைத்தேன் நான் என்னுமிடத்து உடம்பும், கண்டேன் நான் என்னுமிடத்து இந்திரியமும், நினைத்தேன் நான் என்னுமிடத்து அந்தக்கரணமும் ஆத்மாபோலவிளங்குகின்றன; அவை முறையே என்னுடம்பு, என்னிந்திரியம், என்னந்

தங்கரணமென ஆத்மாவிற்கு விஷயமாயிருத்தலின், அவற்றை ஆத்மாவென்று கொள்ளுதல் கூடாதாம்.

அகங்காரம்-சுத்தம், அசுத்தமென இருவகைத்தாம். (1)தேகத்திரய விலட்சணமாய், அவஸ்தாத்திரய சாட்சியாயுள்ள ஆத்மாவை நானென்னு மகங்காரம் சுத்த அகங்காரமாம், (2) உடம்பு பொறி (இந்திரியம்) மனமுதலிவற்றுள் யாதாவதொன்றனை னென்னும் அகங்காரம் அசுத்த அகங்காரமாம். இவற்றுள், முன்னையது மோட்ச சாதனமாம், பின்னையது பந்தசாதனமாம்.

இன்னும் இவ்வகங்காரம் சாமானிய விசேஷமெனவும், முக்கியம் அமுக்கியமெனவும் இரண்டிரண்டு வகைத்தாம். (1) தேகாதி தாமங்களி னுத்தேசமின்றிக் கேவலம் நானென்றெழும் அகங்காரம் சாமானிய அகங்காரமாம், (2)தேகாதி தாமங்களின் (பெயர் ஜாதி முதலியவற்றின்) உத்தேசத்தால் நானென்றெழு மகங்காரம் விசேஷ அகங்காரமாம், (3) தேகம் இந்திரியம் முதலியவற்றோடு கூடிய சீவனையும் ஆத்மாவையும் ஒன்றாகக் கொண்டு, அறியாமையால் சர்வ வியவகாரத்திலும் நானென்று வியவகரித்துக் கொண்டெழும் அகங்காரம் முக்கிய அகங்காரமாம்; (4) வியவகார தசையில் சீவனையும், பரமார்த்த (உண்மை) தசையில் ஆத்மாவையும் நானென்று கொண்டெழும் அகங்காரம் அமுக்கிய அகங்காரமாம்.

சாமானியம, விசேஷம, முக்கியமென்று மூன்றகங்கார மும் அசுத்த அகங்காரமாம.

அசுத்த அகங்காரத்தின் வடிவமின்ன தென்பது "தேகாபி மானம் பற்றி யானெனுஞ் செருக்குத் தானே, போகாத சொரூப மாகும்" என்று பிரபோத சந்திரோதயங் கூறுவதாலினிது விளங்குவதாம. இவ்வகங்கார முள்ளவளவும் பிறப்பொழியாது ; அஃதொழிந்தபோது பிறப்பொழியு மென்பது "யானென தென்னுஞ் செருக் கறுப்பான் வானோர்க், குயர்ந்த வுலகம் புகும்" என்று திருக்குறள் கூறுவதால் நன்கு விளங்குவதாம்.

## சித்தமும் ஆத்மாவன்றெனல்.

5௬. ஐயப் படலோர் பொருணிச் சயமா
யறியப்படல் யானென தென்றுமதஞ்
செய்யப்படல் செய்வது சிந்தனையாஞ்
சித்தம்மது வன்றென நீதெளியே.

யாதாவ தொன்றனிடத்து இதுவோ அதுவோ வென்று ஐயமுறுதல், அதனை நிச்சயமாக அறிதல், தானல்லாத வுடம்பை யானென்றும், தனதல்லாத பொருளை எனதென்றும் அபிமானங் கொள்ளுதல் என்னு மூன்றனையுஞ் செய்வது சித்தமாம் ; அச்சித்த மும் ஆத்மாவன்று ; இதனை நீ தெளிவாக அறியக் கடவாய்.

பாதம் பத்தினானே ஆத்துமவா அத்துமவா மென்று நினைத்
தல் நிசசயிக்க அபிமானித்த மென்னு மூன்றனை செய
வது சித்தமாம் அஃது அந்தக்கரண சதுஷ்டயத்துள் ஒன்
ற மென்னும் சித்தமென்று சொல்லுதற் குரிடதாம் உண
விவேகிகளின் அந்தக்கரணத்தை சதுர்விதமாகச் சொல்லுவது
அப மிருத்தனை ஆத்மாவாகக் கொண்டதால்

அந்தக்கரணம் நான்குபோல் புத்தி அங்காரம் சித்த
மென்பனவாம் சித்தத்தை மனத்திலும் அங்காரத்தை
புத்தியிலும் அடக்கி அந்தக்கரண மிரண்டெனக் கூறுதலு
முண்டு அசருமுல சித்தத்தி னிலக்கணம் மனத்திலும் அங்
காரத்தி னிலக்கணம் புத்தியிலு மடங்குவனவாம்

நினைப்பது மனமாம், நிச்சயிப்பது புத்தியாம், அபிமா
னிப்பது அகங்காரமாம், சிந்திப்பது சித்தமாம் அந்தக்கர
ணம் புடைக்கருவி

‘ஆங்கார நிச்சயித்த தப்புத்தி பற்றலா
ஞேங்குள ஞனமன முந்தீபற
ஒன்றுநீ யன்றிவற றுந்தீபற’’

‘ அறிவா னினைவு மடங்கலாற சித்த
மறிவன றசித்தாமென றுந்தீபற
அறிவுன னுருவமென றுந்தீபற’’.

என்று அவிரோத உந்தியார் கூறுவது இங்கு துணர்தற் பாலதாம்.

**தேகமுதல் சித்தமீறுயுள்ள வெழும் உன்னு லறியப்படுதலின், அவை நீயன்றெனத் தொகுத்துக் கூறல்.**

56. முன்னுக வுடம்பது சித்தமதே
முடிவாக மொழிந்த பொருட்டிரடா
னின்னுகில நீயறி யும்பொருளாய்
நிகழ்கின்ற தனுலென நின்மலனே.

மலரகிதராய் விளங்கும் மாநந்தி பாராயண முனிவர் சசிவன்னனை நோக்கி, சசிவன்னு! தேகமுதல் சித்தமீறுகக்கூறிய பொருள்களனைத்தும் உன்னு லறியப்படுவனவா யிருத்தலின், அவை உனது யதார்த்த வடிவமன்றும். (கடத்தை யறிபவன் அந்தக் கடமாகாமை போல, தேகம், இந்திரியம், பிராணன், மனம், புத்தி, அகங்காரம், சித்தமென்னு மேழினையு மறியும் நீ அவையாகாய்; இதனைக் குறிக்கொண் டுணர்வாயாக என்றனர்). 56

தேக முதல் சித்த மீறு யுள்ள வெழும் சீவவுபாதி அல்லது காரிய வுபாதி யென்று கூறப்படும். சுரோத்திரம் துவக்கு

சிங்குவை - கிராண மென்னும் ஞானேந்திரிய பஞ்சகம் வாக்கு-பாதம் பாணி-பாயுரு-உபஸ்த மென்னும் கர்மேந்திரிய பஞ்சக மென்பனவற்றை இந்திரியமென வொன்றாகவும், பிராணன்-அபானன் - சமானன் - உதானன் வியானனென்னும் பிராண பஞ்சகத்தைப் பிராணனென வொன்றாகவும் கொண்டு, காரிய வுபாதி பேதமென்று கூறப்பட்டது. சாக்கிரம் (நனவு), சொப்பனம் (கனவு), சுழுத்தி (உறக்கம்) என்னும் அவஸ்தை மூன்றும் இக்காரிய வுபாதியி லடங்குவனவாம். (1) சீவன் தேகம், இந்திரியம், பிராணன், மனம், புத்தி, அகங்காரம், சித்தமென்னு மிவ்வேழு உபாதியுடன் கூடி விளங்கும் காலம் சாக்கிராவஸ்தையாம், இவ்வவஸ்தை யுள்ளபோ தவனுக்குப் பெயர் விசுவனு. (2) சீவன் அவற்றுள் பிராணன், மனம், புத்தி, அகங்காரம், சித்தமென்னும் ஐந்துடன் கூடி விளங்கும் காலம் சொப்பனவஸ்தையாம், இவ் வவஸ்தை யுள்ளபோ தவனுக்குப் பெயர் தைஜசனும். (3) சீவன் அவற்றுள் பிராணனுடன் மாத்திரம் கூடி விளங்கும் காலம் சுழுத்தியாம், இவ் வவஸ்தை யுள்ளபோ தவனுக்குப் பெயர் பிராஞ்ஞனும். சீவன் சாக்கிராவஸ்தையில் தேக முதல் சித்த மீறா யுள்ள வற்றையும், சொப்பன வஸ்தையில் மன முதல் பிராண னீறா யுள்ளவற்றையும், சுழுத்தியில் பிராணனையு முடையவனா யிருக்கின்றான், அங்ஙன மிருப்பது கொண்டு, அவனை அப்பொருளாகக் கூறுவது கூடாதென்பதாம்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
வே. சாமிநாதையர் நூல் நிலையம்

சொப்பனாவஸ்தையிலும் சுழுத்தி யவஸ்தையிலும் சீவன் பிராணனை யுடையவனு யிருக்கின்றனென்பது சொப்பன வஸ் தையை அல்லது சுழுத்தி யவஸ்தையை யடைந்திருப்பவன் பிராணவாயுவை யுடையவனுய்த் தோன்றுவது பற்றியாமென்க.

(1) சாக்கிராவஸ்தை ஸ்தூலபூத பஞ்சகம், தமேந்திரிய பிராணுதி பஞ்சகம், அந்தக்கரண சதுஷ்டய மென்னும் இரு பத்துநான்கு தத்துவவடிவ ஸ்தூல சரீரத்தி லிருப்பதாம்; (2) சொப்பனவஸ்தை அவ்விருபத்து நான்கு தத்துவங்களுள் ஸ்தூல பூத பஞ்சக மொழிந்த மற்றப் பத்தொன்பது தத்துவவடிவச் சூக் கும சரீரத்தி லிருப்பதாம்; (3) சுழுப்தி அவஸ்தை இந்தத தத்துவமெல்லா மொடுங்கப்பெற்று அவற்றின் சமஸ்கார த்துடன் கூடியுள்ள பிரகிருதி(அவித்தை) வடிவக் காரண சரீரத்தி லிருப்பதாம். இங்குக் காரண சரீரமான பிரகிருதியை யொழி த்து ஸ்தூல சரீரமுதல் சித்த மீறு யுள்ளன சீவனுக்கு உபாதிய மென்று கூறப்பட்டது. அவித்தை சரீரம்போன் றிருக்கின்ற தன்றி, உண்மை நோக்கில் சரீர மாகாமையின், அஃதிங்குச் சரீர மென்று கூறப்படவில்லை. இக்காரிய வுபாதி யேழனுள் முத லது ஸ்தூல சரீரமாம்; மற்றவை சூக்கும சரீரமாம். இவ்வேழு உபாதிகளில் (1) ஸ்தூல சரீரம் அன்னமய கோசமாம்;(2) பிராண வாயுவும் கன்மேந்திரியமுங் கூடியது பிராணமய கோச மாம்; (3) மனமும் ஞானேந்திரியமுங் கூடியது மனோமய கோசமாம்; (4) புத்தியும் ஞானேந்திரியமுங் கூடியது விஞ்

ஞானமய கோசமாம். (5) இவை யுண்டாதற்குக் காரணமாயுள்ள அஞ்ஞானமும், பிரியம் - மோதம் - பிரமோத மென்னும் மூவகைச் சுகவிருத்தியுங் கூடியது ஆநந்தமய கோசமாம். கோசமென்பதன் பொருள் மறைப்ப தென்பதாம். அனுகூல விஷயங்களைக் காண்டலா லுண்டாகும் பிரியம், அவற்றை யடைதலா லுண்டாகு மோதம், அவற்றை யனுபவித்தலா லுண்டாகும் பிரமோத மென்னும் மூவகைச் சுகவிருத்திகள் சுழுத்தி யவஸ்தையில் அஞ்ஞானத்தோடு கூடி யிருக்கின்றனவென்ப தினுணர்தல் வேண்டும். சுழுத்தியினின் றெழுந்தவன் நானொன்று மறியாது சுகமாக வுறங்கினே னென்று கூறுவதால், அங்கு அகமாகார விருத்தியும் (நானென்னும் வடிவ ஞானமும்), அவித்தியாகார விருத்தியும், (ஒன்றுமறியா தென்னும் அஞ்ஞான வடிவ ஞானமும்), சுகாகாரவிருத்தியும் (சுகவடிவ ஞானமும்) இருக்கின்றனவென்பது முணர்தல் வேண்டும்.

ஸ்தூலசரீர முதலாக வுள்ளனவற்றுள் ஒவ்வொன்றை மதவாதிகள் ஆத்மாவென்று தவறாக வுணர்ந்து, அவற்றுள் ஒவ்வொன்றை ஆத்மாவாகக் கூறி வருதல் பற்றி 'அவை யனாது யதார்த்த வடிவமன் றாம்' என்று கூறப்பட்டது.

(1) நாஸ்திகருள் ஒரு சாரார் ஸ்தூல தேகத்தையே ஆத்மாவென்றும், (2) மற்றொரு சாரார் இந்திரியத்தையே ஆத்மாவென்றும், (3) இன்னொரு சாரார் பிராணனையே ஆத்மாவென்

றும், (4) வேறொரு சாரார் மனத்தையே ஆத்மாவென்றும், (5) பௌத்தருள் ஒரு சாரார் புத்தியையே ஆத்மாவென்றும், (6) பௌத்தருள் மற்றொரு சாரார் சூனியத்தையே ஆத்மாவென்றும், (7) சமணர் ஆத்மா தேக முதலியவற்றிலும் வேறுப்பட்ட தேக பரிமாணமாக வுள்ளதென்றும், (8) தார்க்கிகர் ஆத்மா கர்த்தா, போக்தா, ஜடம், விபு என்றும், (9) பூர்வ மீமாம்சகர் ஆத்மா ஜடசித் சொரூபமென்றும், (10) சாங்கியர் ஆத்மா போக்தா, கர்த்தாவன்று, போத (ஞான) சொரூபமென்றும் கூறுகின்றனர். இவர்கள் இவ்வாறு கூறுவனவெல்லாம் பிறழ்ச்சியுடையனவாம், அவற்றுள், ஒன்றும் ஆத்மாவன்றாம்; ஆனால், அவித்தையால் கர்த்திருத்துவ முதலிய தர்மங்களுடன் கூடி, பரமார்த்தத்தில் (உண்மையில்) ஒரு தர்மமுமில்லாது பரமானந்த போத (ஞான) சொரூபமா யிருப்பதே ஆத்மாவா மென்பதிங் குணர்தல் வேண்டும்.

என் தேகம், என்னிந்திரியம், என் பிராணன், என் மனம், என் புத்தி, என் அகங்காரம், என் சித்தம், (என் அஞ்ஞானம்) என அவை என்னுடையன வென்பதற்கு விஷயமா யிருத்தலின், ஆத்மாவன்றென்று இங்குத் தீர்மானமாக அறிதல் வேண்டும்.

ஆத்மா ஜாக்கிராவஸ்தையில் இந்திரிய அந்தக்கரணங்களி னுதவியால் விஷயங்களை யறிந்து வருகின்றது; சொப்பன வஸ்தையில் இந்திரியமில்லாது அந்தக்கரணத்தி னுதவியால்

விஷயங்களை யறிந்து வருகின்றது, சுழுத்தி யவஸ்தையில் இந்திரியமும் அந்தக்கரணமு மில்லாது அவித்தையோடு மாத்திர மிருந்து, (சுகமுதலிய) விஷயங்களை யறிந்து வருகின்றது; அஃ தெப்போதும் அறிவு சொரூபமாகவே யிருப்பதாம்; அதற்கு விஷயமாகும் ஸ்தால தேக முதலியவற்றுள் ஒன்றும் அஃதாவ தில்லையா மென்பதும் இங்குணர்தற் பாலதாம்.

## அறியும்பொருள் யானன்றாயின், அறியாப் பொருளோ யானென்பதென்று வினவுதல்.

57. உன்னாலறி யப்படு மியாவையுமுன்
னுருவன்றென வோதினை யொக்குமெனக்
கென்னாலறி யாதொழி யும்பொருளோ
யானாவது தென்றன னென்றலுமே.

சசிவன்னன் (மாநந்தி பராயண முனிவர் தேக முதல் சித்தமீறாகவுள்ளன உன்னாலறியப்படுவனவாயிருத்தலின், அவை உனது யதார்த்த வடிவ மன்றாமெனக் கூறியதைக் கேட்டுச் சிறிது மயக்கமுற்றுச் சிவசொரூப மாந் தேசிக மூர்த்தியே! தேவரீர்) உன்னா லறியப்படும் பொருளனைத்தும் உனது யதார்த்த வடிவ மன்றாமென்று திருவாய் மலர்ந்தருளினீர்; அஃது எனது அனுபவத்

திற் றொகுத்திருக்கின்றது ; ஆனால், என்னா லறியப்படா தொழியும் பொருளோ யானென்பதன் யதார்த்தப் பொருள் ? அதனை விளக்கமாகக் கூறியருளல் வேண்டு மென்று வினவினன். 57

சசிவன்னன் நானென்பது அறியப்படும் பொருளன்றாயின், அறியப்படாத பொருளோ? அதனை விளக்க வுணர்த்தல் வேண்டு மென்று வினவினனென்பதாம்.

அறியப்படும் பொருள் நானன்றென் றுணர்ந்தபோது சசிவன்னனுக்குச் சூனிய தரிசனமுண்டாயிற்று, அதனாலவன் யானென்பது அறியப்படாத பொருளோவென்று வினவினா னென்பதிங் குணர்தல் வேண்டும்.

சூனிய தரிசனமாவது ஒன்றுந் தோன்றாது நிற்றல். ஒன்றுந் தோன்றாமையு மென்னா லறியப்படுவதாக விருத்தலின் அங்ஙனம் யானென்பதன் பொருளாகு மென்று சசிவன்னன் ஐயுற்றானென்ப திங்குணர்த்தியவாறாம்.

"என்னவா சானை நோக்கி யேதமில் சீடன் சொல்வான் சொன்னவிப் பஞ்ச கோசஞ் சுத்தமா யத்தை யென்றே, புன்மதி நா னாகத் தாலே யொதுக்கிய பின்ன ரையா, வொன்றுஞ் சூனியமே யன்றி மற்றேது மிங்குக் காணேன்" என்று ஸ்ரீ-சங்கராசாரிய சுவாமிகள் விவேக சூடாமணியிற் கூறியிருப்பது ஈங்குணரற் பாலதாம்.

### நீ யறிபடும் பொருளுமன்று, அறிபடாப் பொருளுமன்றெனக் கூறல்.

58 அறிபடாப்பொருள் காரண மாயைதறித்
தறியும்பொருள் காரிய மாமுலகிந்
நெறியா லறிகம் நான்மறை யந்தமெலாம்
நீயன்றென வோது நிரந்தரமே

[மாதநதி பாராயண முனிவா! சசிவன்னன் கூறியதைக் கேட்டு, இவர் கேட்பதற்குத் தகுதியானவரென்று வியப்புற்ற அன்பனே!] (இன்ன தன்மையதென்று) சுட்டி யறியப்படாத பொருள் உலகத்திற்குக் காரணமாயுள்ள மாயையாம்; (இன்ன தன்மையதென்று) சுட்டி யறியப்படும் பொருள் மாயையின் காரியமாயுள்ள உலகமாம். இம்முறையால் நான்மறை யந்த மனைத்தும் நீ (ஆத்மா) அறியாப் பொருளுமன்று; அறியும் பொருளுமன்றென நிரந்தர மோதுகின்றன. இதனை நீ கவனித் துணரக்கடவாய். 58

மாயை இன்ன தன்மையதென்று சுட்டி யறிதற்கியலாத பொருளாம்; உலகம் இன்னதன்மையதென்று சுட்டியறிதற்குரிய பொருளாம்; இவ்விரண்டும் அறியப்படுவனவாயிருத்தலின், ஆத்

மாவன்றாம்; இங்ஙனம் கூறுவது வேத சித்தாந்தமா மென்பதாம்.

எக்காரணத்தால் அறியும் பொருள் ஆத்மாவன்றோ, அக்கார ணத்தால் அறியாப் பொருளும் ஆத்மாவன்றென்பது உணர்த்திய வாறாம்.

காரணமாய மண்ணையும் அதன் காரியமாய கடத்தையு மறி பவன் அவ்விரண்டிற்கும் வேறாயிருத்தல்போல, காரணமாய மாயையையும் அதன் காரியமாகிய வுலகத்தையுமறிபவன் அவ் விரண்டிற்கும் வேறாயிருக்கின்றா னென்பதிங் குணர்தல் வேண் டும்.

மாயை இன்னதன்மையதென்று சுட்டி யறியப்படாதபொரு ளென்பதை விருத்திப் பிரபாகரம் 8-வது பிரகாசத்திற் காண்க.

நான்மறை யந்தமென்றது உபநிடதங்களை. நிரந்தரம்—எப் போதும்.

தேஜோபிந்தூபநிஷத் " ஆத்மா ஸ்தூல தேகமுமன்று; சூக் கும தேகமுமன்று; காரணாதிகளுமன்று"என்றும், மைத்திராயண ணியுபநிஷத் " அந்த இவன் சூட்சுமமானவன்; (கர்மேந்திரியங்க ளால்) கிரகிக்கப்படாதவன் ; (ஞானேந்திரியங்களுக்குப்) புலப்ப டாதவன் ; புருஷனென்னும் பெயருடையவன் ; நித்திரை செய் கின்றவன் தன்புத்தி பூர்வகமாய் விழித்துக்கொள்ளாமைபோலச் சங்கற்ப மில்லாமலே இத்தேகத்தில் ஓரம்சத்தினு லிருக்கின்றான்; இங்ஙன மிருப்பதில் இவனது சித்சுபாவமாயுள்ள அம்சம் பிரதி

பருவஷனுரூப (அந்தககரண பிரதிபிம்ப சேதனமாகும்); க்ஷேத்திரக்ஞன் சங்கற்ப - நிச்சய - அபிமான மென்னு மிவற்றை யுடையவனாக வுடையவன்; பிரஜாபதி - விசுவனென்னும் பெயருடையவன்; இவனுமே இச்சரீரம் சேதனத்தைப்போல நிலைபெற்றிருக்கின்றது. இச்சரீரத்தை யேவுகின்றவனு மவனே." என்று கூறுகின்றன. இவ்வாறு பலவுபநிஷத்பிரமாணங்களிருக்கின்றன. "எலும்பு நரம்பு முதலிய வடிவமாகிய இச்சரீரம் தேகியென்று தோற்றுகின்றது, யாதொரு இவ்வன்னமயமாகிய ஆத்மா சாரீரிகனென்று தோற்றுகின்றதோ, அதனினும் பிராணமய ஆத்மா வேறாயு முள்ளாயு மிருக்கின்றது, அதனினும் மனோமய ஆத்மா வேறாயும் உள்ளாயு மிருக்கின்றது, அதனினும் விஞ்ஞானமய ஆத்மா வேறாயும் உள்ளாயு மிருக்கின்றது, ஆநந்தமய ஆத்மாவோ அதனினும் வேறாயும் உள்ளாயு மிருக்கின்றது. யாதொரு இந்த அன்னமய முண்டோ அது பிராணமயனால் பூரணமாயிருக்கின்றது; பிராணமயனே அப்படி மனோமயனால் சுபாவமாகப் பூரணமாயிருக்கின்றது; அப்படியே மனோமய ஆத்மாவும் விஞ்ஞானமயனால் பூரணமாயிருக்கின்றது; விஞ்ஞானமயம் ஆநந்தமயனால் எப்போதும் சுகமே பூரணமாயிருக்கின்றது; அப்படியே ஆநந்தமயமும் தனக்கு வேறான பிரஹ்மமாகிய சாட்சியினால் பூரணமாயிருக்கின்றது. எல்லாவற்றினும உள்ளா யிருத்தலால் பூரணமாயிருக்கும் பிரஹ்மம் வேறொன்றினால் பூரணமாவதில்லை. யாதொரு இந்தப் பிர

ப்ரபஞ்சமென்னும் பெயருடையதும், சத்திய ஏகரூப வடிவினதும், பழைமையானதுமாகிய சாரமான ஞானத்தினையே சாக்ஷாத்தாக அடைந்து முத்தியெய்துஞ் சுகியாகின்றனன், மெய்வகையால் சுகத்தனைப் எய்துமிலனே" என்று சாமவேதத்தின் கட்டளைப் பிரத்தியக்ஷத்துக் கூறுவதின் கருத்துணர்தற்பாலதாம்.

**அங்ஙனமாயின், நானென்னும் பொருளை யறிவதெப்படி யென்னும் வினாவிற்கு விடை கூறல்.**

50 அறியும்பொருளன் றறியாப் பொருளன்
றறிவாகிய நீயெனு மப்பொருடான
பொறியின் வழிநின் றறியும்பொருளே
போதக்கண் விழித்தறியும்பொருளே.

அறிவே வடிவமாகவுள்ள நீ யென்னும் அந்தப் பரமபொருள் (இன்ன தன்மையதென்று) சுட்டியறியப் படும் பொருளாகிய உலகமுமன்றாம்; (இன்ன தன்மையதென்று) சுட்டியறியப்படாத பொருளாகிய மாயையுமன்றாம்; இது சத்தியமாம். அந்தப் பரமபொருள் சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, கிராணமென்னு மிந்திரியங்களின் வழியே மனம் நின்றறிதற்குரிய

நன்றாம்; ஆனால், போத (ஞான)க்கண் (தன்னுறக்கத்தி னின்றும்) விழித்துக்கொள்ளுமாயின், அதனை அறிதற்குரிய பொருளாம். (சசிவன்னே! உன்னுடைய போதக்கண் விழித்துக்கொள்ளுமாயின், அதனை நீ அந்தப் பரம்பொருளை யறிதற்குரியவனாவாய்). 59

ஆதலால் அறிவு வடிவமாயிருப்பது அஃது அறியப்படும் பொருளன்று; ஏனைய பொருளையன்று, அதனை ஞானபோதத்தாலன்றி மற்றெதனாலு மறிதல் கூடாதென்பதாம்.

ஆதலால் இந்திரியங்களுக்கு விஷயமாயின, சப்த பரிச முதலியவற்றுள் ஒன்றும், மனத்திற்கு விஷயமாயாயின், சுகதுக்க முதலியவற்றுள் ஒன்றும், ஆத்மா அறிவு வடிவாக விருத்தலின் சுரோத்திர முதல் மனமீறாகவுள்ளனவற்றுள் எதற்கும் விஷயமாக தன்றும். போதக்கண் விழித்துக்கொண்டபோது அதனை யறியலாமென்பது ஞான சாதன மிகு பக்குவமானபோது நான் [illegible] மூன்றற்கும் வேறாய், அவஸ்தை மூன்றற்கும் சாட்சியாய சச்சிதாநந்த சங்கரவடிவமா யிருக்கின்றேனென் றதிகாரிபுருஷன அதனை யுணர்தலாம்.

போதக்கண் என்பது இராசத தாமத குணங்கள் மிகத்தாழ்ந்து நிற்க, சத்துவகுணம் மிகமேம்பட்டுள்ள மனமாம். இம் மனம் ஆத்மாவையே நோக்கி நின்று அதனை யறிதற்குச் சாதனமாக விருப்பதாம்.

"அறிபடும் பொருணீ யல்லே யறிபடாப் பொருளு மல்லே, அறிபொரு ளாகு முன்னே யனுபவித் தறிவாய நீயே" என்றும், "அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பாரமுக மாகினு லெம்மட்டும், சித்தி லுள்விழிப் பார்வையா மிப்படி நிரந்தரப் படிகத்தால், வசத்தி லுன்மன நின்றுசின் மாத்திர வடிவமா யிடின்மை ரந்தர, சுத்த தேகத்தி லிருக்கினு மாநந்தக்கடல்வடி வாவாய்" என்றும், கைவல்லிய நவநீதம் கூறுவதும், "முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள், அகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்" என்று திருமந்திரம் கூறுவதும், இங்குக் கவனித்துணர்தற் பாலனவாம்.

## மகா வாக்கிய உபதேசம்.

60. வேதப்பொரு டானிது வேறுசொலும்
விளையாவையு மன்றெரு வேறுமிலாட்
போதப்பொரு ளந்த மறைக்கணியாம்
புனிதப்பொரு டத்வ மசிப்பொருளே.

அறிவே வடிவமாகவுள்ள நீ யென்னும் அந்தப பரம்பொருள் போதக்கண் விழித்துக்கொள்ளுமாயின், அதனை லறிதற்குரிய பொருளாமென்னுமிது வேதசிச் சயமான பொருளாம். இதற்கு வேறாகச் சொல்லப் படும் கருமங்கள் யாவும் அந்தப் பரம்பொருளை யறிவ

தற்கு நேரே காரணமாவ தில்லையாம். உண்மை நோக் கில் ஒரு வேற்றுமையு மில்லாதுள்ள அந்தத்திருக்குப் பொருள் வேதத்திற்குச் சிரோரத்நமாக விருப்பதாம்; சுத்தப் பிரஹ்மமாம்; தத்துவ மசியென்னும் மகா வாக் கியத்தின் பொருளாம். 60

அறிவே வடிவமாகவுள்ள நீயென்னும் பரம்பொருள் போத க்கண்ணாலன்றி மற்றெதனாலு மறிதற் குரியதன்று; அதற் கன்னியமாக ஒரு பொருளும் வாஸ்தவத்தி லில்லை; அதுவே சுத்தப்பிரஹ்மமாம; தத்துவமசி யென்னும் மகாவாக்கியத்தின் பொருளா மென்பதாம்.

வராகோபநிஷத் "நீ நான் என்னும் சொற்களின் லட்சி யார்த்தமும், எத்தோஷத்தாலும் பற்றப்படாததும், எல்லாவற்றி னுமிருப்பதும், சச்சிதாநந்தமுமாயுள்ள ஆத்மாவினை ஞானக் கண்ணுடையவன் காண்கின்றான்" என்று பிரஙகைத "மையலொன் றறவிவ் வறிவினை யறியின் மானுடன் முத்தனு மன்றித், துய்யகன் மத்தால் மைந்தரால் மற்றோர் பொருளினு லுற்பவந் துடையான்" என்றும், விசாரசாகரம் ஆருவது தரங் கத்தில் "முத்திக்குக் காரணம் கர்மமு மன்று, தியானமுமன்று ஆனால் ஞானமேயாம்; ஏனெனின், ஆத்மாவின்கண் பந்தம் சத் தியமாயிருக்குமாயின், அதன் நிவிர்த்தி வடிவ மோட்சம் ஞானத் தாலுண்டாகாது; கர்மம் அல்லது தியானத்தா லுண்டாம். அங்

தம் பந்தம் ஆத்மாவின்கண் சத்தியமாகவில்லை. ஆறு ரஜ்ஜு சர்ப்பம் (கயிற்றரவு) போல மித்தையாக விருக்கின்றது, அந்த மித்தை அதிஷ்டான ஞானத்தினாற்றான் விநாசமியாதல் கூடும், கருமம் அல்லது தியானத்தால் நிவிர்த்தியாகாது. ரஜ்ஜுவில் சர்ப்பம் எந்தக் கிரியையாலும் நிவிர்த்தியாகாமல் கேவலம் ரஜ்ஜு ஞானத்தினால் நிவிர்த்தியாவதுபோல ஆத்மாவின் அஞ்ஞானத்தினாலேற்றம் பந்தமும் அஞ்ஞானமும் ஆத்மாவின் ஞானத்தினாற்றான் நிவிர்த்தியாம். கர்மத்தின் பலன் மோட்சமாயின், மோட்சம் அநித்தியமாம் என்னின், கிருஷியாதி கர்மங்களின் (உழவு முதலிய தொழில்களின்) பலன் அனுதினம், அவை அநித்தியமாம், யஞ்ஞாதி கர்மங்களின் பலனாகிய சுவர்க்காதிகளும் அநித்தியமாமென்பது பிரமாணம். மோட்சமும் கர்ம பலமெனக் கொள்ளின், அநித்தியமாம், ஆதலால் கர்மத்தின் பலன் மோட்சமன்று" என்றுபடக் கூறினமைகளும், ஆதமா போதக் கண்ணாலன்றி மற்றெதனாலும் மறிதற்கரியனன்று மென்பது நன்கு விளங்குவதாம்.

தத்துவமசி யென்பது (சாமவேதத்தின் சாரம்தாகிய உபநிஷத்தினது ஆறாவது பிரபாடகத்தில) சுவேதகேது என்னும் தமது புத்திரனுக்கு உத்தாலக முனிவர் ஒன்பது முறை உபதேசித்த மகா வாக்கியமாம். ஜீவேசுவர பேத நிவிர்த்தி பூர்வகமாகிய ஆத்தங்களை யுணர்த்தும் வாக்கியம் இந்த மகா வாக்கியமாம். தத்துவமசி யென்னும் மகா வாக்கியத்தின் பொருள் அது

நீயாயிருக்கின்றாய் என்பதாம். இங்ஙனமே ஒவ்வொரு வேதத்திலும் தலைமையாக ஒவ்வொரு மகாவாக்கியமுண்டு. ருக்வேதத்தினது ஐதரேய உபநிஷத்தின் மகாவாக்கியம் "பிரஞ்ஞானம் (அறிவே) பிரஹ்மம்" என்பதாம், யசுர் வேதத்தினது பிருகதாரணியக உபநிஷத்தின் மகா வாக்கியம் 'அகம்பிரஹ்மாஸ்மி (யான் பிரஹ்மமா யிருக்கின்றேன்)" என்பதாம், அதர்வண வேதத்தினது மாண்டூக்கிய உபநிஷத்தின் மகாவாக்கியம் 'அயமாத்மா (இந்த ஆத்மா)ப் பிரஹ்மம்" என்பதாம்.

இம்மகாவாக்கிய நான்கனுள், தத்துவமசி யென்பது உபதேச மகா வாக்கியமாம், பிரஞ்ஞானம் பிரஹ்மமென்பது அப்பியாச மகா வாக்கியமாம், அயமாத்மாப் பிரஹ்மம் என்பது சம்மதி மகா வாக்கியமாம், அகம்பிரஹ்மாஸ்மி என்பது அனுபூதி மகா வாக்கியமாம். இவ்வர்த்தம்

"சுயமதுவாந் தத்வமசி யெனனும் வாக்யஞ்
சொல்லுமுப தேசமகா வாக்ய மாகும்
இயலுமகம் பிரமாஸ்மி யென்னும் வாக்ய
மிலகுமநு பூதிமகா வாக்ய மாகும்
மயன்மருவாப் பிரஞ்ஞானம் பிரம வாக்ய
மனனத்தி னப்பியாச வாக்ய மாகும்
அயமான்மாப் பிரமமென வறையும் வாக்ய
மதற்கெல்லாஞ் சம்மதமாம் வாக்ய மாமே."

' அகல ஞ ந தை சி ல க யகதா
நனிட ா ந க ண கத நிந ாணா
சு ஞானமை னூ
ச க ணா வெ
கம பான பி ன ரு
தா க ந சிவெபண தெ தகி
ாாது ாா ாண தகா
தா கக ணா தாகககம
ள ண ந தக க ஐ ா நா து வி தா

தத்துவமசி யெனனும மகா வாககியத்தின பதபபொருள் மூனறையுங கூறல.

(ே ரு

61 நிமல மாமபர மதுவெ னுமபொ ந
ணீயெ னும்பொருள் சீவனே
யமல மான விரணடை ீகசிய
மசிய தபபொருளாவதே.

(தததுவமசி யென்னும மகாவாககியம தத, துவம, அசி யென முனறு பதமுடையதாய அவறறுள்,) தத (அது) எனபதன பொருள மலரகிதமாயுளள பரம

பொருளாம் (ஈசனும்); துவம் (நீ) என்பதன் பொருள் சீவனும்; அசி யென்பதன் பொருள் பரிசுத்தமான இவ்விரு பொருள்களின் ஐக்கியமாம் (என்றனர்.) 61

தத்துவமசியென்னும் மகா வாக்கியத்தினது தத் பதத்தின் வாச்சியார்த்தம் ஈசனும், லட்சியார்த்தம் சுத்தப்பிரஹ்மமும், துவம் பதத்தின் வாச்சியார்த்தம் சீவனும், லட்சியார்த்தம் ஆத்மா அல்லது கூடஸ்தனும் என்பதை உணர்தல் வேண்டும். அங்ஙனமே பிரஞ்ஞானம் பிரஹ்மம் என்னும் மகா வாக்கியத்தினது பிரஞ்ஞான பதத்தின் வாச்சியார்த்தம் சீவனும், லட்சியார்த்தம் ஆத்மா வாம்; பிரஹ்மபதத்தின் வாச்சியார்த்தம் ஈசனும், லட்சியார்த்தம் சுத்தப்பிரஹ்மமாமென்றும், அகம் பிரஹ்மாஸ்மி என்னும் மகா வாக்கியத்தினது அகம்பதத்தின் வாச்சியார்த்தம் சீவனும், லட்சியார்த்தம் ஆத்மாவாம், பிரஹ்மபதத்தின் வாச்சியார்த்தம் ஈசனும், லட்சியார்த்தம் சுத்தப் பிரஹ்மமாமென்றும், அயமாத்மாப் பிரஹ்மமென்னும் மகா வாக்கியத்தினது ஆத்ம பதத்தின் வாச்சியார்த்தம் சீவனும் லட்சியார்த்தம் ஆத்மாவாம், பிரஹ்ம பதத்தின் வாச்சியார்த்தம் ஈசனும், லட்சியார்த்தம் சுத்தப்பிரஹ்மமாமென்றும் கொள்ளுதல் வேண்டும்.

ஐக்கியம் ஆத்மாவிற்கும் பிரஹ்மத்திற்கு மன்றிச் சீவனுக் கும் ஈசுவரனுக்கு மன்று மென்பது வேதாந்த சித்தாந்தமாம். சீவனும் ஈசுவரனும் (1) சீவன் ஈசன் என்னும் பெயராலும்,

(2) பிண்டம் அண்டமென்னு மிடத்தாலும், (3) காரிய காரண வடிவ வுபாதியாலும், (4) வியஷ்டி சமஷ்டியென்னுந் தேகாபிமானத்தாலும், (5) கிஞ்சிஞ்ஞத்துவ சர்வஞ்ஞத்துவ மென்னும் உணர்வாலும் வேற்றுமை யுடையவரா யிருத்தலின், இவர்க்கு ஐக்கியம் சம்பவிப்பதில்லையாம்; பெயர், இடம், உபாதி, தேகம், உணர்வென்னும் இவ்வைந்தையும் விட்டு, அவ்விருவரிடத்தும் அநுசூதமாயுள்ள சேதனத்தை மாத்திரம் விடாதுகொண்டால், அவ்விருவர்க்கும் ஐக்கியஞ் சம்பவிக்குமென்பதாம்; இது கடாகாசம் மேகாகாசம் என்புழி, கடம் மேகமென்னும் உபாதி பேதத்தைவிட்டு, ஆகாசத்தை மாத்திரம் விடாதுகொள்ளும்பட்சத்து அவ்விரண்டற்கும் ஐக்கியஞ் சம்பவிப்பது போலவாம். ஐக்கிய மென்பது ஒன்றாந் தன்மையாம்.

**சசிவன்னனது வினா**

62\. அருமை யாகிய பிரம முன்னிலை
யாது மாருயிர் பின்னிலை
யிருமை யான விரண்டு மிக்கிய
மெய்து மாறெவ னென்னவே.

சசிவன்னன் பரமாநந்த பரமகுருவே! (தற்போதமுள்ள வளவும் காண்பதற்கு) அருமையாயுள்ள பிரஹ்மமானது (பெயர், இடம், உபாதி, தேகம், உணர்வு

என்னு மிவற்றால் சீவனுக்கு) முன்னுள்ளதாக விருக்கின்றது; தேகமுற்றும் வியாபகமாயுள்ள சீவனை (அப்பெயர் முதலியவற்றால் பிரஹ்மத்திற்கு) பின்னுள்ளதாக விருக்கின்றது; இவ்வாறு தம்முள் வேற்றுமை படைத்துள்ள பிரஹ்மம் சீவனென்னு மிரண்டிற்கும் ஐக்கிய முண்டாகுமா றெங்ஙனம்? இவ்விரண்டிற்கும் ஐக்கிய முண்டென்பது என்புத்திக் கெட்டவில்லை; அதனை விளங்க வுணர்த்தியருள வேண்டு மென்று பிரார்த்தித்துக் கேட்டனன். 62

சசிவன்னன், பிரஹ்மமும் சீவனும் பெயரிட முதலியவற்றால் தம்முள் வேற்றுமை யுடையனவா யிருத்தலால், அவற்றிற்கு ஐக்கிய முண்டென்பது எவ்வாறு பொருந்துமென வினவினனென்பதாம்.

பிரஹ்மம் முன்னுள்ளதாக விருக்கின்றதென்பதும், சீவன் பின்னுள்ளதாக விருக்கின்றதென்பதும், பிரஹ்மத்தினது மேன்மையையுஞ் சீவனது கீழ்மையையு முணர்த்தி நின்றன வென்க.

ஒரு பெருநில வேந்தனுக்கும் ஒரு குறுநில மன்னனுக்கும் எந்த வகையாலும் ஐக்கியம் சம்பவியாமை போல, ஆண்டானாகிய பிரஹ்மத்திற் (ஈசனுக்) கும் அடிமையாகிய சீவனுக்கும் எந்த

| | |
|---|---|
| வியாபகன் | பரிச்சின்னன் |
| சுதந்திரன் | கர்மாதீனன் |
| பரோட்சன் | பிரத்தியட்சன் |
| மாயையைச் சுவாதீனத்தில் வைத்திருப்பவன் | அவித்யாமோகிதன் |

என்னுமிததன்மையுள்ள இருவரும் ஒன்றெனக் கூறுவது நெருப்புக் குளிர்ந்திருக்கின்றது என்பதற்குச் சமானமாம். ஆதலால், நற்புத்தியுள்ளவனே! நீ லட்சணையால் லட்சியார்த்தத்தை யறி; வாச்சியார்த்தத்தில் விரோத மிருக்கின்றது" என்று விசார சாகரம் ஆறுவது தரங்கத்திற் கூறுவதிங்குணர்தற் பாலதாம்.

தேகம்: கபம் பித்தம் வாத மென்பனவற்றிற் குறைவிடமாய், மிகவும அருவருக்கத் தக்கதாயிருத்தலின், 'கப முதலியவற்றை யுடைய தேகம்' என்று கூறப்பட்டது. இங்ஙனங் கூறியது தேகத்தில் ஆத்ம புத்தி நீங்குதற் பொருட்டாம்.

"எல்லாப் படியாலு மெண்ணிலு லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை"

என்று ஔவைப்பிராட்டியா ரருளிச்செய்திருப்ப திங்குணர்தற் பாலதாம்.

## காரண வுபாதி.

64. ஈசன் முற்றறி வான்வி யாபி
யேவைக்கு மேது வியம்புமா

காச கன்னிரு பாதி பாவனை
கார ஞாதிக ளாவதே.

(1) சர்வேசுவரன், (2) சர்வஞ்ஞன், (3) சர்வாந்தரியாமி, (4) சர்வகாரணன், (5) சர்வ ஸ்திதி, (6) சர்வ சங்காரன், (7) சர்வ சிருட்டி என்னு மேழும் ஈசனுக்குக் காரண உபாதியாம். 64.

*சர்வேசுவரன் - எல்லாவற்றையும் ஆள்பவன்; சர்வஞ்ஞன் - எல்லாவற்றையும் அறிபவன்; சர்வாந்தரியாமி-எல்லாவற்றுள்ளு மிருப்பவன்; சர்வகாரணன்-சர்வ காரியங்களுக்குங் காரணமா யிருப்பவன்; சர்வ ஸ்திதி-எல்லாவற்யையும் நிலைபெறச் செய்பவன்; சர்வ சங்காரன்-எல்லாவற்றையு மழிப்பவன்; சர்வ சிருஷ்டி-எல்லாவற்றையும் படைப்பவன்.*

*தேகம், இந்திரியம், பிராணன், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் ஏழும் சீவனுக்கு உபாதியாயிருத்தல் போல, சர்வேசுவரத்துவம், சர்வஞ்ஞத்துவம், சர்வாந்தரியாமித்துவம், சர்வ காரணத்துவம், சர்வ ஸ்திதித்துவம், சர்வ சங்காரத்துவம், சர்வ சிருட்டித்துவமென்னு மேழும் ஈசனுக்கு உபாதியா யிருக்கின்றன வென்பதாம்.*

*ஈசனுககு உபாதியாயிருப்பது மாயையாம்;, அதனால், அவனுக்குச் சர்வேசுவரத்துவ முதலியன கற்பிக்கப்பட்டன; சவ*

னுக்கு உபாதியாயிருப்பது அவித்தையாம்; அதனால், அவனுக்குத் தேகம் முதலியன கற்பிக்கப்பட்டன வென்றும், ஈசனுக்கு மாயையை உபாதியாகக் கூறாது சர்வேசுவரத்துவ முதலியவற்றை உபாதியாகவும், சீவனுக்கு அவித்தையை உபாதியாகக் கூறாது தேகமுதலியவற்றை உபாதியாகவும் கூறியது அவர்களது உபாதிகளை ஸ்தூலமாக எளிதிலறிதற்பொருட்டேயென்று மிங்குணர்தற்பாலனவாம்.

சீவவுபாதியென்னும் காரியவுபாதி அபரோட்ச (பிரத்தியட்ச)மாம்; ஈசுவரவுபாதியென்னும் காரணவுபாதி பரோட்சமாம். தத்வாமிர்தக் கட்டளை தத்பத முதலிய பரவுபாதி கூறப்பட்டது,

“ (1) சர்வஞ்ஞனென்பானேனெனின், இந்திரியங்களெல்லாம் ஒன்றறிந்த தொன்றறியாமையாலும், தான் சர்வத்தையும் அறிவதாலும் சர்வஞ்ஞனென்னும் நாமமுண்டாயிற்று; (2) சர்வகாரணனென்பானேனெனின், இந்திரியங்களெல்லாம் அழிந்தும் தானழியாமலிருத்தலினாலே சர்வகாரணனென்னும் நாமமுண்டாயிற்று; (3) சர்வாந்தரியாமியென்பானேனெனின், இந்திரியங்களுக்கெல்லாமுள்ளீடாய்நின்றறிதலாலே சர்வாந்தரியாமியென்னும் நாமமுண்டாயிற்று; (4) சர்வேசுவரனென்பானேனெனின், இந்திரியங்களுக்கெல்லாம் மேலாய் நின்று விளங்குதலாலே சர்வேசுவரனென்னும் நாமமுண்டாயிற்று; (5) சர்வதிருஷ்டி யென்பானேனெனின், இந்திரியங்களெல்லாம் தனக்

தளை தோன்றுதலாமே சர்வ சிருஷ்டி யென்னும் நாமமுண்டா யிற்று; (6) சர்வ ஸ்திதி யென்பானேனெனின், இந்திரியங்களெ லாமெல்லாம் தம்மை ஆரட்சித்தலாமே சர்வ ஸ்திதி யென்னும் நாம முண்டாயிற்று; (7) சர்வ சங்கார மென்பானேனெனின், இந் திரியங்களெல்லாம் தனக்குள் அடங்குதலினாலே சர்வ சங்கார மென்னும் நாமமுண்டாயிற்று" என்று கூறுவது மிங்குணர்தற் பாலது.

### மகா வாக்கியார்த்தத்தின்
### சுத்தாசுத்தங்களைக் கூறல்

65 நீத் யாலிரு பாத் நீக்கிட
நீயெ னச்சொல் பதத்தினு
மாதி யாகிய தத்ப தத்து
மசுத்த சுத்த முரைத்துமே.

பெரியோர் கூறிய முறைமைப்படி காரிய காரண வுபாதிகளை நீக்குதற்பொருட்டு, தத்துவமசி மகா வாக்கியத்தின் துவம் (நீயென்னும்) பதப்பொருளிலும், தத் (அது என்னும்) பதப்பொருளிலுமுள்ள அசுத்தத்தை யும் சுத்தத்தையும் கூறுகின்றோம்; (சசிவன்னா! நீ அவற்றைக் கவனமாய்க் கேட்கக் கடவாய்). 65

துவம்பத வாச்சியார்த்தம் அசுத்தமென்றும் இலக்கியார்த்தம் சுத்தமென்றும், தத்பதவாச்சியார்த்தம் அசுத்தமென்றும் இலக்கியார்த்தம் சுத்தமென்றும், சசிவன்னனுக்கு பாகந்தியாகலக்ஷணை முனிவருணர்த்தத் தொடங்கினுரென்பதாம். இயற்பெயர்ப் பொருள் வாச்சியார்த்தமாம்; ஆகுபெயர்ப் பொருள் இலக்கியார்த்தமாம்.

தத்பத வாச்சியார்த்தமான ஈசன் மாயாசகிதமாயும், துவம்பத வாச்சியார்த்தமான சீவன் அவித்தியா சகிதமாயுமிருத்தலின், அவ்விரண்டும் மாயையையும் அவித்தையையு முன்னிட்டு அசுத்தமென்றும், தத்பத லட்சியார்த்தமான பிரம்மமும், துவம்பத லட்சியார்த்தமான கூடஸ்தன் அல்லது ஆத்மாவும முறையே மாயாரகிதமாயும், அவித்தியா ரகிதமாயு மிருத்தலின், அவ்விரண்டும் சுத்தமென்றும் கூறப்படுகின்றன வென்க.

சித்தொரு நான்கில் பிரமங்கூ டத்தன்
செப்புமா யாரகி தங்கள்
பத்தமி லீச னுயிர்கடா மாயா
சகிதங்கள் வழுத்துமவ் வீசன்
சத்தெனுந் தன்னை மறப்பிலா மையினுற்
றதுகதி தேடிலன் சீவன்
பொய்த்தலில் வீடு தேடுமென் றிசைத்தான்
போரிலா மூறுமா முகனே.

என்று திருப்போரூர்ச் சந்நிதிமுறையில் சிதம்பர சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளி யிருப்பது இங்கு நன்குணர்தற்பாலதாம்.

## துவம் பதார்த்தத்தின் சுத்தாசுத்தங்களைக் கூறல்.

66. ஆக முன்றிக ழேழு நானென
றுவம்ப தத்தி னசுத்தமே
சோக மின்றிய சான்று நானென
றுவம்ப தப்பொருள் சுத்தமே.

ஈவன்: தேகம். இந்திரியம், பிராணன், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் ஏழையும் நானென்று கொள்ளுதல் துவம்பதார்த்தத்தின் அசுத்தமாம்; (தேக முதலிய இவ்வேழும் நானன்று, இவற்றிற்கு)நான் சோகமும் மோகமுமில்லாத சாட்சி (கூடஸ்தனாகிய ஆத்மா) என்று கொள்ளுதல் துவம்பதார்த்தத்தின் சுத்தமாம். 66

தேகமுதல் சித்த மீறாயுள்ளன காரிய வுபாதியாம்; சீவன் அவற்றுள் எதனையாவது நானென்று கொள்ளுதல் துவம்பதார்த்தத்தின் அசுத்தமாம்; இவ்வுபாதியும் இது வருதற்குக் காரணமாயுள்ள அவித்தையும் நானன்று, இவற்றிற்கு நான் சாட்சியா

யிருக்கின்றேனென் றுணர்ந்திருத்தல் துவம் பதார்த்தத்தின் சுத்தமாமென்பது விளக்கியவாறும்.

"நனவிற் றசேந்திரிய நாட்டியங்கள் பார்ப்போம்
கனவின் மனக்கூத்துங் காண்போம்—நினைவில்லாச்
சுழுத்தியிலே யில்லாத சூனியக்கூத் தாடி
விழுப்பமாருளா நாமிருப்போமே."

என்று மெய்ஞ்ஞானோபசாரங் கூறுவதை யெழுதித்து மீராக்குறைவா யின், ஆதலா தேகத்திரய விலட்சணமாட், அவஸ்தாத்திரய சாட்சியா யிருக்கின்ற தென்பது நன்கு செவ்விதா விளங்குவதாம்.

**தத்பதார்த்தத்தின் சுத்தாசுத்தங்களைக் கூறல.**

67. அகில காரண மாதி நானென
றற்ப தத்தி னசுத்தமே
சகல காரண சான்று நானென
றற்ப தப்பொருள் சுத்தமே.

ஈசன்: சர்வேசுவரன், சர்வஞ்ஞன், சர்வாந்தரியாமி, சர்வகாரணன், சர்வஸ்திதி, சர்வசங்காரன், சர்வசிருஷ்டி யென்னுமிவைமையும் நாமென்று கொள்ளுதல் தத்பதார்த்தத்தின் அசுத்தமாம்; சர்வேசுவரன் முதலிய

இவ்வேழும் நானன்று, இவற்றிற்கு நான் சாட்சியென்று
கொள்ளுதல் தத்பதார்த்தத்தின் சுத்தமாம். 67

சர்வேசுவரன் முதல் சர்வசிருஷ்டி யீறாயுள்ளன ஈசனுடைய உபாதியாம்; இவ்வுபாதியை ஈசன் நானென்று கொள்ளுதல் தத்பதார்த்தத்தின் அசுத்தமாம்; யான் இதற்குச் சாட்சியா யிருக்கின்றேனென்றிருத்தல் தத்பதார்த்தத்தின் சுத்தமாமெனப் பகுதியின் கியவாறாம்.

ஈசன் சத்தெனுந் தன்னை யெப்போதும் மறவாதவனாயிருப்பினும், உலகைப் படைத்தல் காத்தல் முதலிய தொழில்களைச் செய்யும்போது தனக்குஉபாதியாயுள்ளமாயையையும் யானென்று கொண்டிருத்தலின், அது தத் பதார்த்தத்தின் அசுத்தமென்றும், அவன் தனக்கு உபாதியாயுள்ள மாயைக்கும் அதனாற் கற்பிக்கப் பட்டுள்ள சர்வேசுரத்துவம், சர்வஞ்ஞத்துவம், சர்வாந்தரியாமித்துவம், சர்வகாரணத்துவம், சர்வஸ்திதித்துவம், சர்வசங்காரத்துவம், சர்வசிருஷ்டித்துவ மென்னும் தர்மத்திற்கும் எப்போதும் நான் சாட்சியா யிருக்கின்றே னென்று கொண்டிருத்தலின், அது தத்பதார்த்தத்தின் சுத்தமென்றும் கூறப்பட்டன வென்க.

" அசுத்தனுஞ் சுத்த னானவா றேதெனில்
வர்ணச் சிரமமும் வகுத்ததர் மங்களும்
அவைதரு நரகசொர்க் காதிய பலன்களுந்
சேடமா மசர்த்த கோடிஜன் மங்களுந்

## தத்துவம் பதங்களின் அசுத்தப் பொருள்களிவை, சுத்தப் பொருள்களிவையெனக் கூறல்.

69. அசுத்த மாகிய திருப தததினு
முக்கி யப்பொரு ளாவதே
விசுத்த மான திலக்கி யப்பொரு
ளென்று சொல்லுவர் விமலரே.

தத் துவ மென்னு மிரண்டு பதங்களின் முக்கியப் பொருள்கள் அசுத்தமாம்; அப்பதங்களின் இலக்கியப் பொருள்கள் சுத்தமாமென்று பெரியோர் கூறுகின்றனர். (சசிவன்ன! நீ இவற்றைக் கவனிக்கக் கடவாய்.) 69

தத் துவம் பதங்களின் முக்கியப் பொருள்கள் வாச்சியார்த்த மாம்; இலக்கியப் பொருள்கள் இலட்சியார்த்தமாம்; தத் துவம் பதங்களின் முக்கியப் பொருள்களான ஈசனும் சீவனும் (முறையே காரணோபாதி காரியோபாதி யென்னும்) உபாதி சகிதமாயிருத்தலின், அவர்கள் அசுத்தமெனப் படுகின்றனர்; அப்பதங்களின் இலக்கியப் பொருளான பிரஹ்மமும் கூடஸ்தன் அல்லது ஆத்மாவும் உபாதி ரகிதமாயிருத்தலின், அவை சுத்தமெனப் படுகின்றன வென்பதாம்.

முக்கியப் பொருள் அல்லது முக்கியார்த்தம், வாச்சியார்த்தம், அபிதார்த்தம், சக்கியார்த்தம், போத்தியார்த்தம், விதேயார்த்தமென்பன ஒரு பொருட்கிளவிகளாம்.

தத்வாமிர்தக் கட்டளை சீவவுபாதியில் "இந்தச் சைதன்னிய அறிவு காரிய வுபாதியுடனே கூடி நின்றபோது முக்கியமென்றும், உபாதியைவிட்டு நீங்கியபோது லட்சியமென்றும், உபாதியை நாமென்றபோது அசுத்தமென்றும், உபாதியைவிட்டு நீங்கியபோது சுத்தமென்றும் சொல்லப்பட்டது" என்றும், பரவுபாதியில் "இந்த ஸ்வரூபம் (அறிவு) (காரண) உபாதியுடனே சம்பந்தித்து நின்றபோது முக்கியமென்றும், உபாதியை விட்டுப் பிரிந்தபோது இலட்சியமென்றும், உபாதியை நாமென்றபோது அசுத்தமென்றும், உபாதிக்குச் சாட்சியானபோது சுத்தமென்றும் சொல்லப்பட்டது" என்றும் கூறுவது இங்குக் கவனித்துணர்தற்பாலதாம்.

## அம் முக்கியப் பொருள்களிவை, இலக்கியப் பொருள்களிவை யெனக் கூறல்.

70. முரண்ட சீவ பரங்க டம்முடன்
முக்கி யப்பொரு ளாவதே
யிரண்டில் வேறய சிற்சொ ரூப
மிலக்கி யப்பொரு ளாவதே.

(பெயராலும், இடத்தாலும், உபாதியாலும், உடலாலும், உணர்வாலும் தம்முள்) மாறுபட்டுள்ள சீவேசுவரர்களது காரியோபாதியும் காரணோபாதியும் தத்துவம் பதங்களின் முக்கியப் பொருள்களாம்; இவ்விரண்டு உபாதிகளிலும் வேற்றுமையில்லாது விளங்கும் நிர்விசேஷ சின்மாத்திரப் பொருள் (அஃதாவது ஆத்மாவும் பிரஹ்மமும்) அப்பதங்களின் இலக்கியார்த்தமாம்.

ஈசனுக் குபாதியாயுள்ள மாயையும் அதனால் கற்பிக்கப்பட்ட சர்வேசுவரத்துவமுதல் சர்வசிருட்டித்துவமீறாயுள்ளனவும் ஈசுவரசேதனத்தோடு தத்பதத்தின் வாச்சியார்த்தமாம்; அவ்வுபாதியோடுள்ளசேதனமாத்திரம் அப்பதத்தின் இலக்கியார்த்தமாம்; சீவனுக் குபாதியாயுள்ள அவித்தையும் அது காரணமாக வருகின்ற தேகமுதல் சித்தமீறா யுள்ளனவும் சீவ சேதனத்தோடு துவம்பதத்தின் வாச்சியார்த்தமாம்; அவ்வுபாதியோடுள்ள சேதனமாத்திரம் அப்பதத்தின் இலக்கியார்த்தமா மென்பது விளக்கியவாறாம்.

## உபாதிகளை விலக்கியவிடத்துச் சிற்சொரூபத்தின் ஏகத்துவம் விளங்குமெனக் கூறல்.

71. ஊக்கி யப்பர சீவர் தங்க
ளுடம்பி ரண்டு மிலக்கணை

வாக்கி யப்படி நீக்கி ஞலொரு
வத்து வேபர வத்துவே.

அப் பர சீவர்களது உபாதியிரண்டனையும் இலக்கண வாக்கியப்படி (தத் துவம் பதங்களின் இலட்சணை விருத்தியால்) ஆராய்ந்து நீக்கி நோக்கினல், பரவஸ்து (சீவன் ஈசனென்னும் பேதமற்று) ஒருபொருளாகவே விளங்குவதாம். 71

காரிய காரணவுபாதிகளால் சீவனென்றும் ஈசனென்றும் விளங்குகின்ற சேதனத்தை அவ்வுபாதிகளை மாகாவாக்கியத்தின் தத் துவம் பதங்களின் இலட்சணைவிருத்தியா லாராய்ந்து நீக்கி நோக்குமிடத்து, அது பேதமென்பது சிறிதுமில்லாது ஏக மாகவே விளங்கு மென்பதாம்.

காரியோபாதியிலும்காரணோபாதியிலுமுள்ள சேதனத்தைத் தத்துவமசி மாகாவாக்கிய விசாரத்தால் அவ்வுபாதிகளை விட்டு நோக்குமிடத்து ஏகமாமெனக்கூறல், கடமுதலிய வுபாதிகளைக் கழித்து ஆகாயமொன்றே யென்பதுபோலும், ராமச்சந்திரனை மநுஷ்யத்துவத்தை விடுத்து நீயே விஷ்ணு என்பது போலு மாம்.

## இலட்சணை இத்தனையா மெனக்கூறல்.

72. ஒரில் விட்டதும் விட்டி டாதது
முபய மும்மென வுணர்வுளோர்
தேரி லக்கணை திரிவி தத்தி
லிசைப்பர் மற்ற தியம்புவாம்.

இலக்கண நூலுணர்வும தருக்க நூலுணர்வு முடைய அறிஞர் இலட்சணையானது ஆராயுமிடத்துவிட்ட லட்சணை, விடாத லட்சணை, விட்டுவிடாத லட்சணை யென மூன்று விதமாக விருக்கின்றதென்று கூறுகின்றனர். அவ்விலட்சணையி னியல்பினைக் கூறுகின்றோம் (சசிவன்னு! அதனை நீ கவனித்துக் கேட்பாயாக.) 72

இலக்கண நாலுணர்வும் தருக்கநாலுணர்வுமுடைய அறிஞர் சுருதி ஸ்மிருதி முதலியவற்றுள் தாமெடுத்துக்கூறும் வாசகப்பொருள்(சொற்பொருள்) பொருந்தாதுபோமாயின், லட்சணையால் தாம்கூறும் வாசகப்பொருள் பொருந்தும் வண்ணம் அவ்வாசகத்திற்குப் பொருள் கொள்ளுகின்றனர்; அது விட்டலட்சணை, விடாதலட்சணை, விட்டுவிடாத லட்சணையென மூன்று வகையதாக விருக்கின்றது என்பதாம்.

'வடநூல்வல் லவர்கள் சொல்லும் வாசகப் பொருள்சேரா மல், இடாகிற் பொருளாம் வண்ண மிலக்கணை யுரையாற்

கொள்வார்,திடமான வதுவு மூன்றுச் செப்புவார விட்ட தென் றும், விடலிலா தென்றும் விட்டு விடாதமென் றும்பே ராமே" என்று கைவல்லிய நவநீதங்கூறுவது இங்குணர்தற்பாலதாம்.

விட்டலட்சணை ஜகல்லட்சணை யென்றும், விடாத லட்சணை அஜகல் லட்சணையென்றும், விட்டுவிடாத லட்சணை ஜகதஜகல் லட்சணை அல்லது பாகத்தியாக லட்சணை யென்றும் சொல்லப்படும். இலட்சணை யென்றது இங்கு இலட்சணாவிருத்தியை.

வாக்கியத்தில் தாற்பரியாநுபபத்தி (தாத்பரிய வுணர்வு நிகழாமை)யே இலட்சணைக்குப் பீஜ (காரண)மாம்; சக்கிய சம்பந்தம் இலட்சணையாம்.

கங்கையி லிடைச்சேரி யென்னுமிடத்துக் கங்கையென்னும் பதத்தின் சக்கியம் (முக்கியப்பொருள்) தேவநதிப் பிரவாகமாம்; அதற்கு அதன் கரையோடுள்ள சம்பந்தம் இலட்சணையாம். சத்தத்(பதத்)திற்குத் தனது அர்த்தத்தோடுள்ள சம்பந்தம் விருத்தியெனப்படும்; அது சக்திவிருத்தி, இலட்சணாவிருத்தியென இருவகைத்தாம். சதத்திற்கு அர்த்தத்தோடுள்ள சாட்சாத் (நேர்) சம்பந்தம் சத்தத்தின் சக்தி விருத்தியாம்; சக்திவிருத்தியினு லறியப்பட்ட அர்த்தத்தின் வாயிலாகச் சதத்திற்கு மற்றோரருத்தத் தோடுள்ள பரைம்பரைச் சம்பந்தம் சத்தத்தின் இலட்சணா விருத்தியாம். சக்திவிருத்தியால் அறியப்பட்ட அர்த்தம் சக்கியார்த்தமாம்; இலட்சணா விருத்தியா லறியப்பட்ட அர்த்

ம் இலட்சியார்த்தமாம். எங்கே வாச்சியார்த்தம் (சொற்பொருள்) பொருந்தவில்லையோ அங்கே லட்சணை அஃதாவது இலட்சணா விருத்தி கொள்ளப்படுகின்ற தென்பதிங் குணர்தல் வேண்டும்.

### விட்ட லட்சணை.

73\. மஞ்சு கூப்பிடு தென்றல் போலவும்
வடப கீரதி யுள்ளதே
விஞ்சு கோஷம தென்றல் போலவும்
விட்ட லக்கணை யாவதே.

'மஞ்சு கூப்பிடுகின்றது' என்று கூறுதல் போல்வதும், 'கங்கையி லிடைச்சேரி யிருக்கின்றது' என்று கூறுதல் போல்வதும் விட்ட லட்சணைக்கு உதாரணங்களாம்.

தத்வாமிர்தக் கட்டளை சிவவுபாதியில் "மஞ்சங் கூப்பிட்ட தென்றும், கங்கைக்க ணிடைச்சேரி யுள்ளதென்றும் சொல்லுமிடத்து, மஞ்சமானது மரம், மரமானது கூப்பிடுமா? மஞ்சத்திலொரு புருஷனிருந்து கூப்பிட்டானென்றுகொள்ளல்வேண்டியதாயிற்று; கங்கையானது ஜலம், ஜலத்திலே இடைச்சேரி யிருக்கமாட்டாது; கங்கைக் கரையிலே இடைச்சேரி யிருக்கின்றதென்று கொள்ளல் வேண்டியதாயிற்று" என்று கூறுவது இங் குணர்தற்பாலதாம். மஞ்சு—கட்டில்.

எங்கே வாச்சியார்த்தத்தை (சொற்பொருளை) விட்டு, அதன் (அப்பொருளின்) சம்பந்தியை யுணர்த்துவது சம்பவிக்கின்றதோ அங்கே விட்ட லட்சணையாம்.

(1) மஞ்சு கூப்பிடுகின்ற தென்னுமிடத்து மஞ்சென்னும் பதம் தனது வாச்சியார்த்தமாகிய மஞ்சினைவிட்டு, அதன் சம்பந்தியாகிய புருஷனை யுணர்த்துதலின், இது விட்டலட்சணைக்கு உதாரணமாயிற்று. இங்கு மஞ்சு பதத்தின் வாச்சியார்த்தத்திற்கு (கட்டிலுக்கு) அதன் (கட்டிலின்) சம்பந்தியாகிய புருஷனோ டுள்ள சையோக சம்பந்தம் (விட்ட) லட்சணா விருத்தியாம்; அதனாலறியப்படும் புருஷன் லட்சியார்த்தமாம் மஞ்சு கூப்பிடுதல் சம்பவியாதாகலின், அது விடப்பட்டது.

(2) கங்கையி லிடைச்சேரி யிருக்கின்றது என்னுமிடத்துக் கங்கையென்னும் பதம் தனது வாச்சியார்த்தமாகிய தேவநதிப் பிரவாகத்தை விட்டு, அதன் சம்பந்தியாகிய கரையை யுணர்த்துதலின், இதுவும் விட்டலட்சணைக் குதாரணமாம். இங்குக் கங்கா பதத்தின் வாச்சியார்த்தத்திற்கு (தேவநதிப் பிரவாகத்திற்கு) அதன் (தேவநதிப் பிரவாகத்தின்) சம்பந்தியாகிய கரையோடுள்ள சையோக சம்பந்தம் (விட்ட) லட்சணா விருத்தியாம்; அதனாலறியப்படும் கரை லட்சியார்த்தமாம். தேவநதிப் பிரவாகத்தில் இடைச்சேரி யிருப்பது சம்பவியாதாகலின், அது விடப்பட்டது.

சம்பந்தி-சம்பந்தமுடையது; சையோகம்-இரண்டு பொருள்களின் கூட்டம்.

## விடாத லட்சணை.

74. சிவலை நின்றது வெள்ளை போயின
தென்று செப்புதல் போலவே
கவலை யின்றி விடாத லக்கணை
யென்று நீகோள் கருத்திலே.

'சிவலை நின்றது, வெள்ளை போயது' என்று கூறு தல் போல்வது விடாத லட்சணைக்கு உதாரணமாம். சசிவன்னு! நீ இதனை யுன்கருத்திலே கவலையின்றிக் கொள்வாயாக. 74

தத்வாமிர்தக் கட்டளை பரவுபாதியில் "ஒரு சிகப்புக் குதிரையையும் வெள்ளைப் பசுவையுங் கண்டாயோ வென் பார்க்குச் சிகப்பு நிற்கின்றது, வெள்ளை போகின்ற தென்னு மிடத்துச் சிகப்பு வர்ணம் தனியே நில்லாது, வெள்ளை வர்ணம் தனியே போகாது; ஆகையால், சிகப்புக் குதிரை நிற்கின்றதென் றும், வெள்ளைப்பசு போகின்றதென்றும் கொள்ளல் வேண்டிய தாயிற்று" என்று கூறுவது இங்குணர்தற்பாலதாம்

எங்கே வாச்சியார்த்தத்தை விடாது அதன் சம்பந்தியையு முணர்த்துவது சம்பவிக்கின்றதோ அங்கே விடாத லட்சணை யாம்.

(1) 'சிவலை நின்றது' என்னுமிடத்துச் சிவலையென்னும் பதர் தனது வாச்சியார்த்தமாகிய செந்நிறத்தை விடாது, அதன் (செந்நிறத்தின்) சம்பந்தியாகிய குதிரையையு முணர்த்துதலின், இது விடாத லட்சணைக்கு உதாரணமாயிற்று. இங்குச் சிவலை என்னும் பததகின் வாச்சியார்த்தமாகிய செந்நிறமென்னும் குணத திற்கு அதன் (செந்நிறத்தின்) குணியாகிய குதிரையோடுள்ள தாதாத்மிய (கற்பித பேத வாஸ்தவ அபேத) சம்பந்தம் (விடாத) லட்சணை விருத்தியாம்; அதனாலறியப்படுங் குணி (குதிரை) இலட்சியார்த்தமாம். சிவலையென்னுங் குணத்திற்கு நிற்றலென் னுந் தொழில் சம்பவியாமையின், அதனோடு குணியுங் கொள் ளப்பட்டது.

(2) 'வெள்ளை போயது' என்னுமிடத்து வெள்ளை யென் னும்பதர் தனது வாச்சியார்த்தமாகிய வெண்ணிறத்தை விடாது, அதன் (வெண்ணிறத்தின்) சம்பந்தியாகிய பசுவையு முணர்த்து தலின், இதுவும் விடாத லட்சணைக் குதாரணமாம். இங்கு வெள் ளையென்னும் பதத்தின் வாச்சியார்த்தமாகிய வெண்ணிறமென் னுங் குணத்திற்கு அதன் (வெண்ணிறத்தின்) குணியாகிய பசு வோடுள்ள தாதாத்மிய சம்பந்தம் (விடாத) லட்சணை விருத்தியாம்; அதனாலறியப்படுங் குணி (பசு) இலட்சியார்த்தமாம். வெள்ளை யென்னுங் குணத்திற்குப் போதலென்னுந் தொழில் சம்பவியா மையின், அதனோடு குணியுங் கொள்ளப்பட்டது. குணி-குணத் கிரியுடையது.

## விட்டுவிடாத லட்சணை.

75. மேவும் விட்டு விடாத லக்கணை
மெய்ம்மை யாதெனி னந்தவித்
தேவ தத்த னெனும்போ ருட்படி
சிந்தை செய்திடு தீரவே.

விட்டுவிடாத லட்சணையின் உண்மைப்பொருள் யாதெனின், அதனைக் கூறுகின்றோம், கேட்கக்கடவாய். ‘சோயந் தேவதத்தன்’ என்று கூறுதல் போல்வது விட்டுவிடாத லட்சணைக்கு உதாரணமாம். சசிவன்னா! இவ்வுதாரணத்தின் பொருட்படி தத்துவமசி மகாவாக்கியத்தின் பொருளை முடிவாகச் சிந்தித்துணரக் கடவாய். 75

சோயந் தேவதத்தனென்பதன் பொருள் அந்த இத்தேவதத்தனென்பதாம்; அஃதாவது அந்தத் தேவதத்தனே இந்தத் தேவதத்தனென்பதாம். சோயந்தேவதத்தனென்பது ஸ:(அந்த)—அயம் (இந்த)— தேவதத்தனெனப் பிரிபடுவதாம்.

தத்வாமிர்தக் கட்டளை அசிபதங் கூறுமிடத்து “அகண்ட வாக்கியமாவது சோயந் தேவதத்தனென்பது. ஒரு தேவதத்தனெனிய புருஷனுடனே நாம் சிறிதுநாள் கூடவிருந்தோம்; இவன்

சிறிது நாளுக்குப் பிறகு பிரிந்து போயினன். அநேக நாளுக்குப் பின்பு சதுரங்க பரிவாரத்துடனே யிவனை மதுரையிலே அந்திக் காலத்திலே ராஜாவா யிருக்கக் கண்டோம் ; அங்கே அவனுடன் சிறிதுநாள் கூடியிருந்தோம்; பின்பு நம்மை அவன் பிரிந்துபோயி னன். சிறிது நாளுக்குப் பின்பு தண்டகமண்டலத்துடனே அவ னைச் சிதம்பரத்திலே விடியற்காலத்திலே சந்நியாசியா யிருக்கக் கண்டோம்;அப்பொழுதுஇவன் அந்தத் தேவதத்தனோ அல்லனோ வென்று சந்தேகிக்கையில், இவனடியிலும் மார்பிலும் முடியிலும் முன்னே மறுவுண்டே! அந்த அடையாளம் இவனிடத்திலே யிருந்தால், அந்தத் தேவதத்தனே இவனுவனென்று பார்க்குமி டத்து அந்த அடையாளம் இவனிடத்திலே இருக்கையால், அந் தத் தேவதத்தனே இந்தத் தேவதத்தன் ஆவானென்று சொல் லப்படுவதாம். அப்போது அவனைவிட்டன அந்த இரண்டிட மும் இரண்டு காலமுமாம் ; அவை விட்டுப் போக, விடாமல் நின் றவன் ஒரு தேவதத்தன் மாத்திரமேயாம்.'' என்று கூறுவது இங்குணர்தற்பாலதாம்.

எங்கே வாச்சியார்த்தத்தின் விரோதமுடைய ஒரு பகுதியை விட்டு விரோதமில்லாத மற்றொரு பகுதியை விடாதுணர்த்துவது சம்பவிக்கின்றதோ அங்கே விட்டு விடாத லட்சணையாம். சோயந் (அந்த இத்) தேவதத்தனென்னுமிடத்து இறந்த காலமும் தூர தேசத்துள்ள தேவதத்தனது உடம்பும் அவனென்னும் பதத்தின்

ாச்சியார்த்தமாம்; நிகழ்காலமும் சமீப தேசத்துள்ள தேவதத்த ாது உடம்பும் இவனென்னும் பதத்தின் வாச்சியார்த்தமாம். ங்கு இறந்த காலத்திற்கும் நிகழ் காலத்திற்கும், தூர தேசத்திற் நம் சமீப தேசத்திற்கும் ஒருமை யுணர்ச்சியில் விரோதமிருத்த பின், அவற்றை விட்டு, ஒருமை யுணர்ச்சியில் விரோதமில்லாத தேவதத்தனது உடம்பை விடாது அபேதமாகச்சோயந்தேவதத்த னென்னும் வாக்கிய முணர்த்துதலின்,இது விட்டுவிடாத லட்ச ணைக்கு உதாரணமாயிற்று. இங்கு வாச்சியார்த்தத்தின் அவிரோத பாகமாகிய சரீரத்திற்கு லட்சியார்த்தமாகியசரீரத்தோடுள்ள தாதாத் மிய சம்பந்தமும், வாச்சியார்த்தத்தின் விரோத பாகமாகிய தேச காலங்களுக்கு லட்சியார்த்தமாகிய சரீரத்தோடுள்ள சையோக சம் பந்தமும் (விட்டு விடாத) லட்சணை விருத்தியாம்; அதனாலறியப் படும் லட்சியார்த்தம் தேவதத்த சரீரமாம். சோயந் தேவதத்த னென்னும் வாக்கியம் தேசம் கால மென்னும் விரோத பாகத்தை விட்டு அவிரோதமான தேவதத்த சரீரத்தை விடாதுணர்த்து தலின், தேவதத்தனொருவனே யென்பது பெறப்படுவதாம்.

விட்டுவிடாத லட்சணையில் வாச்சியார்த்தத்தின் ஏகதேச பாகம் இலட்சியார்த்தமாம். அஃதிங்குத் தேவதத்தனது உடம்பு மாத்திரமாம்.

**தத்துவமசி மகா வாக்கியத்தின் உண்மைப் பொருள் விட்டுவிடாத லட்சணையாலன்றி ஏனைய லட்சணைகளால் விளங்காதெனல்.**

76. விட்ட லக்கணை தனையும் விட்டு
விடாத லக்கணை தனையுநீ
விட்டு விட்டு விடாத லக்கணை
யால் விளங்கும் விளங்கவே.

*சசிவன்ன ! நீ விட்ட லட்சணையையும்விட்டு, விடாத லட்சணையையும் விட்டு, விட்டுவிடாத லட்சணை யால் தத்துவமசி மகா வாக்கியத்தின் பொருளைக் கொள் ளுவாயாயின், உனக்கு அப்பொருள் செவ்வையாக விளங்குவதாம்.* 76

*தத்துவமசி மகா வாக்கியத்தி னுண்மைப் பொருள் விட்டு விடாத லட்சணையினாலேயே விளங்குமென்பது கூறியவாறாம்.*

*தத்துவமசி மகா வாக்கியத்தில் விட்ட லட்சணையைக் கொண்டால், தத்துவம்பதங்களின் வாச்சியார்த்தத்திலுள்ள (காரண காரிய வடிவ வுபாதி பாகமே யன்றிச்) சேதனபாகமும் விடுபட்டுப் போதலின், அது பொருந்தாது ; விடாத லட்சணை யைக் கொண்டால் தத்துவம் பதங்களின் வாச்சியார்த்தத்தின்*

ஒரு பாகமும் விடப்படுவதன்று யிருத்தலின், அதுவும் பொருந்தாது விட்ட லட்சணையில் சேதனத்தை விடுதலும், விடாத லட்சணையில் சேதனத்தோடு ஜடத்தையுங் கொள்ளுதலும் சமபவித்தலின், இவ்விரண்டாலும் ஜீவப்பிரஹ்ம ஐக்கியம் மகா வாக்கியத்தில் பெறப்படுவதாகாது ; ஆகவே, விட்டுவிடாத லட்சணையே கொள்ளுதற் குரியதாம். மகா வாக்கியத்தில் விட்ட லட்சணையைக் கொண்டால் சேதனபாகமும் விடுபட்டுப் போதலின், மோட்சமடைதற் குரியவனே யில்லாமற் போவன்;விடாத லட்சணையைக் கொண்டால் காரணோபாதியும் காரியோபாதியும் விடப்படுவனவன்று யிருத்தலின், பந்த நீக்கமே பெறப்படுவதில்லையாம். ஜீவப்பிரஹ்ம ஐக்கியம மகா வாக்கியத்தில் விட்ட லட்சணையாலும விடாத லட்சணையாலும் பெறப்படுவதன்றாகலின், விட்டுவிடாத லட்சணையாலேயே அது பெறப்படு மென்பதாம் .

"விட்டவிலக் கணையாலு மைக்கியந் தோன்று விடாதவிலக கணையாலு மைக்கியந் தோன்று, திட்டமதா முபயவிலக் கணை யொன் றாலே யிலங்குபர சீவைக்கிய மிலங்கும்" என்று ரிபுகீதை கூறுவது இங்குக் கவனித்துணர்தற்பாலதாம்.

யான் பிரஹ்மமென்னும் தத்துவ ஞானம் தத்துவமசி மகா வாக்கியத்தில் விட்டுவிடாத லட்சணையைக் கொண்டால் உண்டாவதாக விருத்தலின், அம்மகா வாக்கியத்தில் விட்டுவிடாத

லட்சணையையே கொள்ளல் வேண்டும்; கொள்ளாவிட்டால், சமை யலுக்கு நெருப்புப்போல மோட்சத்திற்குச் சாட்சாத் (நேர்) சாதனமாயுள்ள தத்துவஞான முண்டாகாது; உண்டாகாததாகவே, தத்துவமசி மகா வாக்கிய வுபதேசம் புருஷார்த்த (மோட்ச) சாதனமாகாது அநர்த்த(துக்க) சாதனமாகவே முடியுமென்பதாம்.

வேத வாக்கியம்: விதி வாக்கியம், நிஷேத வாக்கியம், சித்தார்த்த போதக வாக்கியமென மூவகைத்தாம்; அவற்றுள், விதி வாக்கியம் சத்தியத்தைப் பேசு, தர்மத்தைச் செய் என்றற்றொடக்கத்தனவாம்; நிஷேத வாக்கியம் கள்ளுண்ணற்க, கஞ்சா குடியற்க என்றற்றொடக்கத்தனவாம்; சித்தார்த்த போதக வாக்கியம் அவாந்தர வாக்கியம், மகா வாக்கியமென விருவகைத்தாம்.

(1) அவாந்தர வாக்கியம் "அநந்தம் பிரஹ்மம்", "சத்தியம் ஞானம் அநந்தம் பிரஹ்மம்" என்றற்றொடக்கத்தனவாம். (2) மகாவாக்கியம் "தத்துவமசி", "அயமாத்மாப் பிரஹ்மம்" என்றற்றொடக்கத்தனவாம்.

விட்ட லட்சணை, விடாத லட்சணை, விட்டுவிடாத லட்சணையென்னு மூன்றனுள், முன்னைய விரண்டும் அவாந்தர வாக்கியங்களிலும், பின்னையது மகா வாக்கியங்களிலும் பயன்படுவனவாம்.

'அநந்தம் பிரஹ்மம்' என்னும் வாக்கியத்தில் விட்ட லட்சணையையும், 'சத்தியம் ஞானம் அநந்தம் பிரஹ்மம்' என்னும் வாக்கி

யத்தில் விடாத லட்சணையையும் கொள்ளுதல் வேண்டும். 'அநந்தம் பிரஹ்மம்' என்னுமிடத்தில் அநந்த பதம் தனது வாச்சியார்த்தமாகிய உணவைவிட்டு, அதனது (உணவின்) தாதாத்மிய சம்பந்தமுடைய சேதனத்தை யுணர்த்துதலின், அது (விட்ட) லட்சணை விருத்தி யுடையதாம். இங்கு அநந்தபதத்தின் வாச்சியார்த்தத்திற்கு அதன் (அநந்தத்தின்) சம்பந்தியாகிய சேதனத்தோடுள்ள தாதாத்மிய (கற்பிதபேத வாஸ்தவ அபேத) சம்பந்தம் லட்சணை விருத்தியாம்; அதனாலறியப்படும் சேதனம் இலட்சியார்த்தமாம். கற்பிதப் பொருளாகிய அந்நம் யதார்த்தப் பொருளாகிய சேதனமாகாமையின், அது விடப்பட்டது.

'சத்தியம் ஞாநம் அநந்தம் பிரஹ்மம்' என்னுமிடத்துச் சத்திய முதலிய பதங்கள் தமது வாச்சியார்த்தமாகிய உண்மை, அறிவு, முடிவின்மை யென்பவற்றை விடாது, அவற்றின் தாதாத்மிய சம்பந்தமுடைய சேதனத்தையு முணர்த்துதலின், அவை (விடாத) லட்சணை விருத்தி யுடையனவாம. இங்குச் சத்திய முதலிய பதங்களின் வாச்சியார்த்தங்களுக்கு அவற்றின் (உண்மை, அறிவு, முடிவின்மை யென்பவற்றின்) சம்பந்தியாகிய சேதனத்தோடுள்ள தாதாத்மிய சம்பந்தம் லட்சணைவிருத்தியாம்; அதனாலறியப்படும் சேதனம் இலட்சியார்த்தமாம். சத்திய முதலியன பிரஹ்மத்தை விட்டிராமையின், அவற்றோடு சேதனமுங் கொள்ளப்பட்டது.

தத்துவமசி மகா வாக்கியத்தில் தத்பதத்தின் வாச்சியார்த்தம் காரணோபாதி யுடைய சேதனமாம் அஃதாவது ஈசுவரனும், துவம்பதத்தின் வாச்சியார்த்தம் காரியோபாதி யுடைய சேதனமாம், அஃதாவது சீவனும் இங்குக் காரணோபாதிக்கும் காரியோபாதிக்கும் ஒருமை யுணர்ச்சியில் விரோத மிருத்தலின், அவற்றைவிட்டு, ஒருமை யுணர்ச்சியில் விரோதமில்லாத சேதனத்தை விடாது அம்பதமாகத் தத்துவமசி மகா வாக்கிய முணர்த்துவ தறிக

இங்கு வாச்சியார்த்தத்தின் அவிரோத பாகமாகிய சேதனத்திற்கு லட்சியார்த்தமாகிய சேதனத்தோடுள்ள தாதாத்மிய சம்பந்தமும், வாச்சியார்த்தத்தின் விரோத பாகமாகிய காரணோபாதி காரியோபாதிகளுக்கு லட்சியார்த்தமாகிய சேதனத்தோடுள்ள அதிஷ்டானத் தன்மைச் சம்பந்தமும் (விட்டுவிடாத) லட்சணா விருத்தியாம், அதனால் அறியப்படும் சேதனத்தின் ஒருமை லட்சியார்த்தமாம்

தத் பதத்தின் வாச்சியார்த்தம் காரண வுபாதியுள்ள சேதனமாம், அதுவே ஈசனும், லட்சியார்த்தம் சேதன மாத்திரமாம், அதுவே பிரஹ்மமாம்; துவம் பதத்தின் வாச்சியார்த்தம் காரிய வுபாதியுள்ள சேதனமாம், அதுவே சீவனும், லட்சியார்த்தம் சேதன மாத்திரமாம், அதுவே கூடஸ்தன் அல்லது ஆத்மாவாம் என்றும், லட்சியார்த்தத்திற்கு அபேதங் கூறப்படு

கின்றதன்றி வாச்சியார்த்தத்திற்கு அபேதம் கூறப்படுவதின்றென்றும், இங்குணர்தல் வேண்டும்.

காரணோபாதி - சர்வேசுவரத்துவ முதலிய தர்மமுடைய மாயையாம்; காரியோபாதி—தேகமுதல் சித்த மீருயுள்ளனவும். அவை வருவதற்கேதுவாயுள்ள அவித்தையுமாம்.

குமார தேவர் சுத்த சாதகத்தில்

"சீவன துபாதி யீசன துபாதி தீர்ந்துசித் திரண்டது மொன்றே, ஆவது விட்டு விடாதலக் கணையென் றறைந்திடு முபாதியோ ரிரண்டும், மேவலை நீங்கல் விட்டலக் கணையாம் விளங்குஞ்சித் திரண்டது மொன்றே, ஆவது விடாத லக்கணையாகும்" என்று கூறுவது இங்கு நன்குணர்தற்பாலதாம்.

சசிவன்னனது வினா.

77. போது மேவிய தேசம் விட்டோரு
புருடனைக்கோளு மாறுபோ
லோது மீருடல் கண்டு விட்டத
னுண்மை காண வுரைத்திடே.

சற்குரு மூர்த்தி! சோயந் தேவதத்தன் என்னும் வாக்கியத்துள் (விட்டுவிடாத லட்சணையால் விரோதமுடைய) (இறந்த காலம் நிகழ் காலம் என்னும்) காலத்

தையும், (தூரதேசம் சமீபதேச மென்னும்) தேசத்தை யும் அறிந்து விட்டு (விரோதமில்லாத) ஒரே தேவதத் தனை (அவனே இத்தேவதத்தன், இவனே அத்தேவ தத்தனென்று) பொருளாகக் கொள்ளுவது போல, தத் துவமசி மகா வாக்கியத்துள் (விட்டுவிடாத லட்சணை பால் விரோத முடைய) (காரணோபாதி காரியோபா தியென்னும்) இரண்டுடம்பையும் அறிந்து விட்டு, (விரோதமில்லாத) ஒரே சேதனத்தை (அதுவே இது, இதுவே அது வென்று) பொருளாகக் கொண்டு, அவ் வாக்கியத்தின் உண்மைப் பொருளைக் காண அடியே னுக்கு விளங்க உணர்த்தியருளல் வேண்டும். 77

சோயந் தேவதத்தன் என்னும் வாக்கியத்துள் விரோத முடைய காலத்தையும் தேசத்தையும் விட்டு, விரோதமில்லாத தேவதத்தனது உடம்பை மாத்திரங் கொண்டு, அவனே இத் தேவதத்தனென் றுணர்வதுபோல, தத்துவமசி மகா வாக்கியத் துள் விரோதமுடைய காரணோ பாதியையும் காரியோபாதியை யும் விட்டு, விரோதமில்லாத சேதனத்தை மாத்திரங் கொண்டு, அந்தப் பிரஹ்மமே இந்த ஆத்மா வென்றுணரும் விதத்தை யடி யேனுக்குத் தேவரீர் திருவாய்மலர்ந் தருளல் வேண்டுமென்று சசி வன்னன் வினவினு னென்பதாம்.

அவனே இந்த தேவதத்த னென்னும் வாக்கியத்துள் கால தேசங்களை விட்டு நோக்கியபோது தேவதத்த னொருவனே யென்பது விளங்குவது போல, தத்துவமசி மகா வாக்கியத்துள் காரண காரிய வடிவ உபாதிகளை விட்டு நோக்கியபோது சேதன மொன்றே யென்பது விளங்கு மென்பதாம்.

"பன்னிய சோய மென்னும் பதங்களின் வாச்சி யார்த்தம்
அன்னிய தேசங் காலம் பவனிவ னென்ப வெல்லாம்
சொன்னவில் விரோதம் விட்டுத் தொடரிலக் கியம்வி டாமல்
உன்னிடிற் றேவ தத்த னொருவனை வெளியாகக் காட்டும்"

"தத்துவ மென்னும் பதங்கள் பிரமமாம் பசு சாட்சி யான
வத்துவை விடாமற் பேத வாச்சியார்த்த தன்மை விட்டு
நித்தமு மதுநீ யாகு நீயது வாகு மென்னும்
அத்தமு மகண்ட மென்றே யசிபத வைக்கியங் காட்டும்"

என்று கைவல்லிய நவநீதங் கூறுவது இங்குக் கவனித்துணர்தற் பாலதாம்.

## மாகந்தி பராயண முனிவரது விடை

### வேறு.

78. பிரியாவுயிர் காரிய மாமுடலும்
பிரமத்துறு காரண மாமுடலும்
கரியாகிய வாதனை யுங்கழியக்
காட்டும்படி கண்டுகோள் கண்ணுறவே.

சீவனுக்குரிய காரியோபாதியும், ஈசனுக்குரிய காரணோபாதியும, இவற்றிற்கு யான் சாட்சியா யிருக்கின்றே னென்னும வாசனையும் கழியுமாறு சேதனத்தின் ஒருமையைக் காட்டுகின்றேமே; சசிவன்ன! யாம் காண்பிக்கும பிரகாரம் நீ அதனை அபரோட்சமாக அறியக்கடவாய். 78

தேகம்-இந்திரியம-பிராணன்-மனம் - புத்தி - அகங்காரம - சித்தம் எனனும காரிய உபாதியும், சர்வேசுவரத்துவம-சர்வஞ்ஞத்துவம - சர்வாந்தரியாமித்துவம - சர்வ காரணத்துவம - சர்வ ஸ்திதித்துவம - சர்வ சங்காரத்துவம - சர்வ சிருட்டித்துவ மென்னும் காரணவுபாதியும, இவை நிகழுவதற கேதுவாயுள்ள அவித்தையும மாயையும, இவற்றிற்கு நான சாட்சியா யிருக்கின்றே னென்னும வாசனையம நீங்கும வகையைக் கூறுகினறேன், சசிவன்ன! இவற்றை நீ குறிக்கொண் டுணரக்கடவா யென்று மாணந்தி பராயண முனிவர் கூறினா ரென்பதாம.

காரிய வுபாதிக்கும காரண வுபாதிக்கும யான் சாட்சியா யிருக்கின்றே னென்றுணர்ந்தவன், அவ்வளவோடு நின்று விடுவானாயின், அதுவும் பந்தத்திற் கேதுவாம; ஆகலின், யான் சர்வசாட்சியா யிருக்கின்றே னென்னும் வாசனையும நீங்கினவனே பிறவி யில்லாதவ னவனென்பதிங் குணர்தல் வேண்டும். எவ்

வகைத்தாய சங்கற்பமுமின்றிச் சின்மாத்திரமாக அஃதாவது தானே தானாக விளங்குகின்றவனே சர்வதுக்கநிவிர்த்தி பரமானந் தப்பிராப்திவடிவ மோட்சமடைவானென்பது வேதாந்தசாஸ்திரத் தின் சித்தாந்தமாம்.

பிணஞ்சுடுவதற்குத் தடி காரணமாயிருத்தல்போல நான் கர்த் தா-நான் போக்தா என்றற் றொடக்கத்து வாசனை நீங்குவதற்குச் சாட்சிவாசனை காரணமாயிருக்கின்றது; தடி முடிவில் வெந்தொழி தல் போலச் சாட்சிவாசனையும் முடிவில் நீங்கி யொழிகின்றது; அஃதுள்ளவளவும் நான் கர்த்தா, நான் போக்தா என்றற் றொடக் கத்து வாசனை பொருவகையா யிருக்கும்; அஃதிருக்கு மளவும் பிறவி வாராதிருத்தல் சம்பவியாதென்பதாம். "பிணஞ்சுடு தடி யென்ன வென்னைக் கொண்டே பெரும்பற்றை யெல்லா மறச்சாடி, அனைத்தவென் னையுமப் படியீறில் போதத்தில் விட்டனு போகத் திருந்தானே" என்று பாடுதுறை கூறுவது இங்குணர்தற்பாலதாம்.

"சாட்சியாய் நிறைந்த தன்மையே தென்னில், ஆதித்த சந்நி தா னத்தினி லகில, சகலேந் தியவிவ காரமுஞ் சமைதல்போல், தானே தானுஞ் சைதன்யமாத்திரம், பிரவிர்த்திநிவிர்த்திபேதவியா பாரம், இயற்று தொன்று வியற்றிடா திருக்கவும், விளக்கல்மாத் திரம்விவ கார நடத்தலின், தானுவா மதனாற் சாட்சியென் றுணர் வாய்" என்று சொரூப லட்சண விருத்தியில் ஸ்ரீ சங்காசாரிய

சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியிருப்பது கவனிக்கப் படுமாயின், சாட்சி மாத்திரமாய் விளங்கும் நிலை இத்தன்மையதா மென்பது நன்கு விளங்குவதாம்.

காமம் வெகுளி முதலிய விருத்திக ளுண்டாவதற் கேது வான சித்தத்தின் சூட்சுமாவஸ்தையாகிய சம்ஸ்காரம் வாசனை யாம். இது சுத்தம், அசுத்தமென விருவகைத்தாம்.

(1) காமம் வெகுளி முதலிய விருத்திக ளுண்டாவதற் கேதுவான வாசனை அசுத்த வாசனையாம்; இவ்வசுத்த வாசனை லோக வாசனை, சாஸ்திர வாசனை, தேக வாசனை யெனப் பலவித மாம். (2) அன்பு அருள் முதலிய விருத்திக ளுண்டாவதற் கேது வான வாசனை சுத்த வாசனையாம்; இதுவும் மைத்திரியாதி வாசனை, சின்மாத்திரவாசனை யெனப் பலவிதமாம்.

இங்குக் கூறியுள்ள சாட்சி வாசனை சின்மாத்திர வாசனை யாம். இச்சின்மாத்திரவாசனை திரிபுடி ஸ்மரண பூர்வகமாகிய சின்மாத்திர வாசனை, கேவல சின்மாத்திரவாசனை யென விரு வகைத்தாம்.

(1) நான் சர்வப் பிரபஞ்சத்தையும் எனது மனததினுற் சின்மாத்திர வடிவமாகவேஅறிகின்றேனென்னும்பாவனை திரிபுடி ஸ்மரண பூர்வகமாகிய சின்மாத்திர வாசனையாம். திரிபுடியாவது மூன்று புறமுடையதாம்; அவை ஞாதரு (காண்பான்), ஞானம் (காட்சி), ஞேயம் (காணப்படும் பொருள்) என்பனவாம்.

(2) கர்த்தா, கருமம், கரணம் என்னும் திரிபுடியின் ஸ்மரணையின்றிய சின்மாத்திரன் நான் என்னும் பாவனை கேவல சின்மாத்திர வாசனையாம்.

இவ்வாசனைகளி னியல்புகளை விரிவாகத் தத்துவாநுசந்தானம் நான்காவது பரிச்சேதத்திற் காணலாம். எந்த வாசனையும் இல்லாது தான்மாத்திரமாகவே விளங்கல் வேண்டும்; அதுவே பெறத்தக்க நிலையா மென்பது சாஸ்திரார்த்தமாம். தாயுமானவர் "உன்தனையோ டொன்றப் பண்ணப்பாம்பு மாயமொரு, போதனைத் தையா புலப்படுத்த வேண்டாவோ" என்றருளி யிருப்பது இங்கு நன்கு கவனித்துணர்தற் குரியதாம்.

**அவ்வுண்மைப் பொருளைச் சகல கேவல மற்ற விடத்தன்றி, அவற்றுள் யாதாவ தொன்றுள்ள விடத்து அறிதல் முடியாதெனல்.**

79. காரணத்திர ணிற்பினு மப்பொருளைக்
காணக்கிடை யாதவை கையறவே
மாணப்படி னும்மது கண்டுகொளும்
வழியில்லை யெனும்படி நீமதியே.

அவ்வுண்மைப் பொருளைக் காரணக் கூட்டங்கள் தத்தம் வியாபாரங்களைச் செய்துகொண் டிருக்குமளவு

வும் காணுதல் முடியாது ; அக்கரணக் கூட்டங்கள் தத்தம் வியாபாரங்க ளொழிய (தமது காரணமாகிய அஞ் ஞானத்தில்) லயமடைந்தாலும் காணுதல் முடியாது; (கரணக் கூட்டங்கள் லயமடைந்துள்ள சுழுத்தி யவஸ்தையில்) அதனைக் காணுதற்கு மார்க்கமே யில்லையாம். இம்முறையைச் சசிவன்ன ! நீ ஆராய்ந்தறியக் கடவாயாக. 79

அவ்வுண்மைப் பொருளென்றது ஆத்ம சொரூப சிவ அல்லது சிவ சொரூப ஆத்மாவை. கரணக் கூட்டங்கள்—அந்தக்கரண சதுஷ்டயம், ஞானேந்திரிய பஞ்சகம், கன்மேந்திரிய பஞ்சகம என்பனவாம். இக்கரணங்களுள்ள காலம் சகலாவஸ்தையாம்; இவை லயமாயுள்ள காலம் கேவலாவஸ்தையாம். சகலாவஸ்தை — சாக்கிர, சொப்பனமாம்; கேவலாவஸ்தை-சுழுத்தியாம். அந்தக்கரண சதுஷ்டயம், ஞானேந்திரிய பஞ்சகம், கர்மேந்திரிய பஞ்சகமென்னும் கரணக் கூட்டங்கள் தத்தம் வியாபாரங்களைச் செய்யுங் காலம் சாக்கிர வஸ்தையாமென்றும், சாக்கிராவஸ்தையின் வாசனையால் தோன்றிய விஷயங்களோடு கூடி அந்தக்கரணங்கள் தத்தம் வியாபாரங்களைச் செய்யுங்காலம் சொப்பனாவஸ்தையா மென்றும் இங்குணர்தற்பாலனவாம்.

கேவலாவஸ்தையில பரமபொருளைக காணுதறகு மாாககமே யிலலையாமென்பது "சுழுததியிற பிராண யததிற் ரேறறமாஞ் சகங்கள மாண்டுட, அழுததிய பவமபோய முததி யடைநதவ ரொருவ ருணடோ" எனறு கைவலலிய நவநீதங கூறுவதால நன்கு விளஙகுவதாம்.

பரமபொருளைக கரணக கூட்டஙகள தததம வியாபாரங களைச செயயுமபோதும அவை தமகாரணததில ஒடுஙகியுளள போதும அறிதல் முடியாதென்பதாம்.

## அவஸ்தாத்திரய விலக்கணங் கூறல்.

80 எநதக்கர ணங்களு மேவனறு
விதன்வாதனை யால்விட யஙகளோடே
யநதககர ணங்கள பொருநதல்கனு
வவைமாய்தல சுழுததி யவத்தையதே.

(அநதக்கரண சதுஷ்டயம், ஞானேநதிரிய பஞ்சகம், கர்மேநதிரிய பஞசகமென்னும்) கரணக் கூட்டமனைத தும ,தத்தமது வியாபாரஙகளைச் செய்தற்குரிய காலம சாக்கிராவஸ்தையாம்; இச் சாககிராவஸ்தையின் வாச னையால் தோன்றிய விஷயஙகளோடு அநதக்கரணங்கள் கூடித் தத்தம் வியாபாரங்களைச் செய்தற்குரிய காலம்

சொபபனாவஸ்தையாம ; அககூடடமனைத்தும லயமா யுளள காலம சுழுததி யவஸதையாம 80

(1) அநதககரண சதுஷடய மனம, புததி, அகஙகாரம, சிததம எனபனவாம, அவறறின வியாபாரம முறையே நினைத தல, நிசசயிததல, அபிமானிததல, சிநதிததல எனபனவாம

(2) ஞாநேநதிரிய பஞசகம சுரோததிரம (காது), துவககு (தோல), சடசு (கண), சிஙகுவை (நாககு), கிராணம (மூககு), எனபனவாம , அவறறின வியாபாரம முறையே கேடடல, பரி சிததல, காணடல, சுவைததல,மணஙகொளளல எனபனவாம

(3) காமேநதிரிய பஞசகம வாககு, பாதம, பாணி, பாயுரு, உபஸதம எனபனவாம , அவறறின வியாபாரம முறையே வச னிததல, நடததல, இடுதலேறறல, மலததை நீககல, ஆநநதித தல எனபனவாம இககரணக கூடடஙகளுள அநதககரண சதுஷடயம அகககரணமெனறும, ஏனையவை புறககரணமென றும சொலலபபடும

ஸதூல சரீரததில சாககிரா வஸதையும, சூககும சரீரததில (அஃதாவது மனததில) சொபபனாவஸதையும, காரண சரீரத தில (அஃதாவது நிரவஸ்தையாயுளள அஞ்ஞானததில) சுழுபதி யவஸதையும நிகழுவனவாமெனபதிங குணாதல் வேண்டும

(1) சுரோத்திர முதலிய இந்திரியங்களால் சப்த முதலிய விஷயங்களை யறியுங்காலம் சாக்கிராவஸ்தையாம், அஃதாவது நனவாம்.

(2) சாக்கிராவஸ்தையின் வாசனையால் நித்திரா காலத்தில் அந்த விஷயங்கள் தோன்றுகின்றபோது அது சொப்பனாவஸ்தையாம், அஃதாவது கனவாம்.

(3) யாதொன்று மறியப்படாமல், தன்னை யென்றுணராது யழுந்தப்பட்டதனையும் மறந்தடங்கியவாய் அடங்குங்காலம் சுழுத்தியவஸ்தையாம், அஃதாவது உறக்கமாம்.

சாக்கிரமுதலிய அவஸ்தைகளின் வியாபாரங்களை யெல்லாம் ஆத்ம தரிசன முண்டாகா தென்பது உணர்த்தற் பொருட்டு அவற்றி னியல்பு கூறப்பட்டது.

**கனவிற் சுழுத்தியின் உண்மைப் பொருளின் விளக்க முண்டாமெனல்.**

வேறு

81 நனவிற் பதத்தையறி வுறாதற
கவத்தைபுலன் வினைமாறியே
நனவிற் சுழுத்திநிலை வரினப்
பொருட்டிகழ் நலமாகவே

உண்மைப் பொருளை ஐயந்திரிபின்றி யறிதற்குபாயம் அவஸ்தைகளும் காரண கூட்டங்களின் வியாபார

களுமே மாறுதலாம்; அவை மாறி நிற்க நனவிற் சுழுத்தி நிலை வருமாயின், சிவஞானி! உனக்கு அப்பொருள் செவ்வையாக விளங்குவதாம். 1

கரணக் கூட்டங்கள் தத்தம் காரணமான அஞ்ஞானத்தில் லயமடையாது தத்தம் வியாபாரங்களைச் செய்யாது முள்ள காலம் நனவிற் சுழுத்தியாம்; அந்நிலை சுத்தநிலையென்றும், தூங்காமற் றூங்குதலென்றும், நின்மலமென்றும் சொல்லப்படும். "அறிபொருளை விட்டகன்று வழிபுகு சித்தம் அந்நிலை வியாபாரமற்றது மல்லாத, செறிநனவிற் சுழுத்தியாம்" என்று ஞானவாசிட்டங் கூறுவது இங்கு கவனித்துணர்தற்பாலதாம்.

கரணக்கூட்டங்கள் தத்தம் வியாபாரங்களைச் செய்தற்குரிய காலம் சகலாவஸ்தையாயும், அவை தம் காரணத்தில் லயமாயுள்ள காலம் கேவலாவஸ்தையாயு மிருத்தலின், நனவிற் சுழுத்தி இவ்விரண்டு மாகாதாம்; ஆகவே, அஃது அவ்விரண்டினும் வேறு மென்க.

நாமரூபங்களை யறியாது முறங்காது முள்ள நனவிற் சுழுத்தி நிலை வருமாயின், பரம்பொருள் விளக்கம் செவ்வையாக வுண்டாகு மெனக் கூறியவாறாம்.

" தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப் பாமல்
பஞ்சமே சமுங் கடந்து பாழையுந் தன்னி லுன்னில

கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடத்தன் பிரம மென்னும்
நெஞ்சமு நழுவி யொன்றாய் நின்றபூ ரணத்தைக் கண்
[டான்.'

"அனுபவா நந்த வெள்ளத் தழுந்தியே யகண்ட மாகித்
தனுகர ணங்க ளாதி சகலமு மிறந்து சித்தாய்
மனதுபூ ரணமாய்த் தேக மானசற் குருவுங் கான
னவினிற் சுழுத்தி யாகி நன்மகன் சுபாவ மானான்."

என்று கைவல்லிய நவநீதம் கூறுவது கவனித்து நோககப்படுமா யின், னவிற்சுழுத்திநிலை பெறுங் கிரமம நன்கு விளங்குவதாம்.

## துவம் பதத்தின் இலக்கியப் பொருள் இது, தத்பதத்தி னிலக்கியப் பொருள் இது என வுணர்த்துதல்.

௮௨. திவிதத் தவத்தைகளை யறிவுற்ற
வத்துரிய நிலைசீவனே
யிவிதத்தி லப்புருட னனவுற்ற
வத்துரிய நிலையீசனே.

சீவனுக்குரிய சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி யென்னும் அவஸ்தை மூன்றனையும் சாட்சி மாத்திரமாக நின் றறிகின்ற அந்தத் துரியப் பொருளே துவம்பதத்தின்

இலக்கியார்த்தமான ஆத்மாவாம்; அதுவே ஜீவசாட்சியாம்; இவ்விதமாக ஈசுவரனுக்குரிய விராட்டு, இரணிய கர்ப்பம், அவ்வியாகிருதமென்னும் மூன்று சரீரங்களையுடைய சாட்சி மாத்திரமாக நின்றறிகின்ற அந்தத் துரியமாயிருந்த தத்பதத்தின் இலக்கியார்த்தமான பிரமமாம்; அதுவே சர்வசாட்சியாம். 82

ஈசுவர விராட்டு —ஸ்தூல பஞ்சபூதமும் ஸ்தூலசரீர சமஷ்டியும், இரணிய கருப்பம் — சூக்கும பஞ்ச பூதமும் சூக்கும சரீர சமஷ்டியும், அவ்வியாகிருதம் — மாயையுமாம். ஸ்தூல பூதங்களும் அவற்றின் காரியங்களும் விராட்டாம், சூக்கும பூதங்களும் அவற்றின் காரியங்களும் இரணிய கருப்பமாம்; இவற்றிற்குக் காரணமாயுள்ள மாயை அவ்வியாகிருதமாம். அந்த மாயை ஆவரண விட்சேப சக்திகளையுடைய அநாதிபாவ ரூபமாம். ஸ்தூல பூதங்களின் காரியங்கள் சூரியன் சந்திரன் முதலியனவாம், சூக்கும பூதங்களின் காரியங்கள் அந்தக்கரணம், இந்திரியம், பிராணன், ஸ்தூலபூதம் என்பனவாம்.

ஆவரணத்தை (மறைப்பை)ச் செய்யுஞ் சக்தி ஆவரண சக்தியாம்; விட்சேபத்தை (தோற்றத்தை)ச் செய்யுஞ் சக்தி விட்சேப சக்தியாம். பூதங்கள்—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாய மென்பனவாம்.

துரியப் பொருளென்பது நான்காவதாக விருக்கும் பொருளாம். ஆத்மா சாக்கிர முதலிய அவஸ்தை மூன்றற்கும் அப்பாற்பட்டதாக விருத்தலின், அது துரியப் பொருளாம; பிரஹ்மம் விராட்டு முதலிய சரீரம் மூன்றற்கும் அப்பாற்பட்டதாக விருத்தலின், அது துரியப்பொருளா மென்பதிங்குணர்தல் வேண்டும். மரமென்றாற் போல்வது வியஷ்டியாம்; தோப்பென்றாற் போல்வது சமஷ்டியாம்.

வியஷ்டி—தனிமை; சமஷ்டி—பொதுமை. ஈசனது ஸ்தூல சரீரமாகிய விராட்டில் சீவனது ஸ்தூல சரீரம் அந்தர்க்கதமாம்; ஈசனது சூக்கும சரீரமாகிய இரணிய கர்ப்பத்தில் சீவனது சூக்கும சரீரம் அந்தர்க்கதமாம்; ஈசனது காரண சரீரமாகிய மாயையில் சீவனது காரண சரீரம் அந்தர்க்கதமாம்; ஈசுவரனில் சீவன் அந்தர்க்கதமாம்; ஈசுவர சாட்சியில் சீவ சாட்சி அந்தர்க்கதமாம் என்பன விளங்குமாயின், சீவனது சாக்கிர முதலிய அவஸ்தை மூன்றும் ஈசனது சரீரத்தில் அந்தர்க்கதமா மென்பது விளங்குவதாம்.

சாக்கிர முதலிய அவஸ்தை மூன்றற்கும் சாட்சியா யிருப்பது துவம்பத இலக்கியார்த்தமான ஆத்மாவாம்; விராட்டு முதலிய சரீர மூன்றற்கும் சாட்சியா யிருப்பது தத்பத இலக்கியார்த்தமான பிரஹ்மமாமென்பது இதனால் விளங்கியவா றறிக.

## தத்துவமசி மகாவாக்கியத்தின் முடிபொருளைக் கூறல்.

83. அகிலக் கரிப்பரம துரியப்
பொருட்டுரிய மதுவாகையே
புகலுற்ற தத்வமசி யெனுமுப்
பதத்தின்முடி பொருளாவதே

சமஷ்டி வியஷ்டியெனப் பல்வேறு திறத்தனவாபுள்ள மாயாப் பிரபஞ்ச மனைத்திற்குஞ் சாட்சி மாத்திரமாக விளங்குகின்ற பிரஹ்மமென்னுந் துரியப்பொருள், அவஸ்தை மூன்றற்குஞ் சாட்சி மாத்திரமாக விளங்குகின்ற ஆத்மாவென்னுந் துரியப்பொருளாக விருக்கின்றதென்பதே தத்துவமசி யென்னுள்ள மூன்று பதத்திற்கும் முடிவான பொருளாம். 83.

தத்துவமசி மகா வாக்கியத்தினது தத்பதத்தின் முடிவான பொருள் சாவசாட்சியாயுள்ள பிரஹ்மமாம்; துவம்பதத்தின் முடிவான பொருள் அவஸ்தாத்திரய சாட்சியாயுள்ள ஆத்மாவாம்; அசி பதத்தின் முடிவான பொருள் அவ்விரண்டும் ஒன்றென்பது இதனால் விளங்கியவாறறிக.

ச சாரியாயுள்ளசீவ [illegible] , அசரீரியாயுள்ள சத்து [illegible] வேறாக அறிகிற தில்லை, அவற்றிற்குச் சாட்சியாயுள்ள ஆத்மாவு [illegible] பிரா [illegible] றுகின்றதெனபது [illegible]

( [illegible] )

[illegible]
[illegible]
மிவென்ன [illegible] ததசிவனப் மிசைந்து பாககி லிருக்கிற
பிறந்திறந்த திவ்வின [illegible]
னவனே [illegible] சிப கந்தா [illegible]
போதத்தைய [illegible]
திவனவனென திரண்டுபொரு [illegible]
யிருந்த [illegible] யெங்கும்னையப புவாமிய''

பதப்பொருள் [illegible] பதப் [illegible]
பதிவாத [illegible]
பதப்பரிசு வாக்கியத்தின் பொருளைப் பார்த்துப்
பாகத்தை விட்டுப்பா கத்தைச் சோகத்து
மிதப்பொருடான வாக்கியத்தான் மன்னித் தோற்றி
மெய்டதாரு மாயையினை விரையப் போக்கி
யுதித்தபொரு ளொன்றென்றே யுணர்ந்து விட்டா
லொருவாக்கும் விரோதமொன்றே யில்லைகாணே''

என்று கூறுவது இங்குணர்தற் பாலதாம்

**சசிவன்னன் தத்துவமசி மகா வாக்கி யோபதேசத்தால் சிவப்பிரஹ்ம ஐக்கியத்தைப் பெறுதல் மிக அருமையாமென வியந்துகூறல்.**

84. நிமலப் பொருடசு ந்தி நேறிய
பெறக்கருணை நிதிகூறவே
யமலப் பொருட்பெறுதலருமைத்
தேனக்கழறி யடிவீழவே.

கருணைநிதியாகிய மாநந்திபராயண முனிவர் இவ்வாறு சிவப்பிரஹ்ம ஐக்கியத்தைச் சுருதிமார்க்கமாகப் பெறும்படி சசிவன்னனுக்குக் கூறியருளினார்; (அதனைக் கேட்ட சசிவன்னன் மாநந்திபராயண முனிவரைப் பய பக்தியோடு நோக்கித் தேசிக மூர்த்தியே!) அச்சிவப் பிரஹ்மைக்கியத்தைப் பெருந்தவமுடையாரன்றி மற்றவர் பெறுதல் மிகவருமையானதா மென்றுகூறி அவர் திருவடியின்கண் வீழ்ந்து வணங்கினான். 84

சசிவன்னன் சிவப்பிரஹ்ம ஐக்கியத்தைப் பெறுதல் மி அருமையானதாம்; அது பெருந்தவமுடையார்க்கே சித்திப்பதா மென்று அதனை வியந்து கூறினனென்பதாம்.

சசிவன்னன் சற்குருசேவையால் பெருந்தவ முடையவனு யிருந்தான்; அதனாலவன் சற்குரு கூறிய தத்துவமசி மகாவாக்கியத் தின் முடிவான பொருளை நன்குணர்ந்து, அதனைப் பெறுதல் மிக்கவருமையானதா மென்று வியந்து கூறினனென்பதிங் குணர்தற்பாலதாம்.

**மாகந்திபராயண முனிவர் சசிவன்னனுக்குப் பிரஹ்மோபதேசஞ் செய்தல்.**

**பாதோதகத்தால் அபிஷேகஞ் செய்வித்தல்.**

85. தமரக் கலைக்களவ தெரிவற்ற
தற்பொருள தனையீதுவா
னமரர்க் களப்பரிய பதநற்
புனற்கொடுசெய் தபிடேகமே.

மாகந்தி பராயண முனிவர் ஒளி வடிவமாக வுள்ள வேதத்திற்கும் அளவு தெரிதற்கரிய ஆத்மப் பொருளைச் சசிவன்னனுக்கு அபரோட்சமாகத் தெரிவித்தற் பொருட்டுத் தேவர்களுக்கும் அளவு செய்தற் கரிய மகிமையுடைய தமது பாததீர்த்தத்தால் அவனை மங்கல ஸ்நானம் செய்வித்து, 85

தத்பத துவம் பதங்களின் முடிவான பொருளாகிய ஆத்மா பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களுக்கு விஷயமாகாமல், அவற்றை விளங்கச் செய்வதாக விருத்தலின், அது பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களுக்கே யன்றி வேத வடிவச் சப்தப்பிரமாணத்திற்கும் அளவு தெரிதற் கரியதா யிருக்கின்றதென்பதாம். இது பிரமகீதை-கேனோபநிஷத தாற்பரிய முரைக்கும் அத்தியாயத்தில் "வாக்குமன முங்கண்ணு மற்றுளவிந் தியங்களுமே, நோக்கரிய பரஞ்சுடரை நோக்கியிவை செலமாட்டா" என்று கூறுவதாலும் விளங்குவதாம். சற்குருபாத தீர்த்த ஸ்நானம் மகா மகிமை யுடையதென்பது "குலவுசற் குருவின் பாதக் குளிர்புனல் தலைமேற் கொண்டார், உலகினில் தீர்த்த மெல்லா முற்றபே றடைவார் போல" என்று கைவல்லியநவநீதங் கூறுவதாலும் நன்கு விளங்குவதாம்.

## விபூதிப் பிரசாத மளித்தல்.

86\. பவளத்தில் வைத்தவயிர் தினின்மிச்சி
லிட்டினிய பரிவோடுமோ
தவளப் பொடிக்கவச மேனவிட்
டூடற்பகைக டலைசாயவே.

பின் உடற்பகைகள் கெடும்படி விபூதியை அவனுடம்பிற் கவசமிட்டாற் போலத் தரித்து, தாம் திரு

வாயில் வைத்துண்டருளிய உணவின் சேஷத்தை உண்ணு மாறு அவனுக்கு மிக அன்போடு கொடுத்தருளி, ௮௬

விபூதி உடற் பகைகளைக் கெடுக்கவல்ல தென்பது மாணிக்க வாசக சுவாமிகள் திருக்கோவையாரில் "வினைவளங்காத்து" என்னும் செய்யுளில் "வினைவளர் நீறெழ நீறணி யம்பலவன்" என்றருளி யிருப்பதாலும் நன்கு விளங்குவதாம்.

உடற் பகைகள்—தன்னை (உடம்பை)ப் பற்றிவருந் துன்பங்களும், பிற வுயிர்களைப்பற்றி வருந் துன்பங்களும், தெய்வத்தைப் பற்றி வரும் துன்பங்களுமா

**உடல் பொருளாவி மூன்றனையுமேற்றுக் கொண்டு முடிமீதடி சூட்டல்.**

87. உதகத் துடற்பொருளோ டுயிரனைத்துங்கொ
ண்டுச்சிமிசை யொருபோதோடே
பதகத் தலத்தையிட விருகைத்
தலத்தோடிரு பதமேவியே.

சசிவன்னன் தனது உடல் பொருள் ஆவி மூன்றனையும் உதக சகிதமாகத் தத்தஞ்செய்ய, அவற்றை யேற்றுக்கொண்டு, அவனது முடியின்மீது தமது திருவடி யிரண்டையும் வைத்தருளினார். அவ்வடி

பிரண்டையும் சசிவன்னன் தனதிரண்டு கரங்களாலும் ஒரு புஷ்பசகிதமாகப் பிடித்துக்கொண்டு, அன்பு மயமாக விருந்தான். 87

(1) உடலைத் தத்தஞ் செய்தலாவது—உடலைத் தானென் றபிமானஞ் செய்யாமையாம்.

(2) பொருளைத் தத்தஞ் செய்தலாவது—விட்டபொருள் களின் மீது பற்றுத லில்லாமையாம்.

(3) உயிரைத் தத்தஞ் செய்தலாவது—சிவமன்றிப் பிறி தொன்றையுஞ் சுட்டுத லில்லாமையாம்.

"உயர்ந்தமெய்ஞ் ஞான நிட்டையா லனைத்து
முணர்ந்தமே லோர்க்குள மகிழ,
வியந்துட லாவி பொருளையுட் சமர்ப்பித்
திளைப்பிலா பிரமவா நந்தர்,
தயங்கிஞே ருடலபி மானத்தை நீக்கித்
தனத்தின்மேற் பற்றுத லின்றிச்,
சுயம்பிர காச சிவமல தொன்றைச்
சுட்டிடா ரவர்பதந் துதிப்பாம்"

என்று பெரியாரருளி யிருப்பது இங்குணர்தற் பாலதாம்.

வாசுதேவ மநநம்—மகாவாக்கிய நிரூபகத்தில் "(சற்குரு மூர்த்தி) தம்மை வந்தடுத்த சீடனது பக்குவத்தைத் தினேதினே

வசத்தி லுண்மன நின்றுசின் மாத்திர
வடிவமா யிடின்மைந்தா,
சத்த தேகத்தி லிருந்திடு மாநந்தக
கடல்வடி வாவாயே"

என்று கைவல்லிய நவநீதநூல் கூறுவதும் ஈங்குக் கவனித் துணரற் பாலதாம்.

உள்விழிப் பார்வையுண்டாகுங் கிரமமும், அதன்பயனும், (குமாரதேவர் அருளிச்செய்துள்ள) உபதேச சித்தாந்தக் கட்டளை தெளிவாக வெழுதப்பட்டிருக்கின்றன.

### சசிவன்னன் தனதனுபவங் கூறல்.

89. நனவைத் துவக்கிமுடி துரியத்தை
முற்றவிறை நவின்றியே
மனவர்க்க மற்றவநு பவமுற்ற
சிற்கனவின் வலியோதுமே.

சாந்தி பராயண முனிவர் சசிவன்னா! நீ (தத்துவமசி மகா வாக்கியத்திலுள்ள) முப்பதப் பொருளையும் (உனதனுபவத்தில் விளங்கியவாறு) விளக்கமாகக் கூறக்கடவா யென்றருளிச் செய்த வொழுங்கின்படியே, சசிவன்னன் சீவசாக்கிர முதல் சிவதுரியமீறாயுள்ள அவஸ்தை முற்றும் மனவர்க்க மற்ற தனதனுபவத்

திற்கு வந்தமையின், அவ்வாறமைவ வருத தனது ஞான சொப்பனத்தின் மகத்துவத்தைக் கூறுவானாயினன். 89

சசிவன்னான் சீவசாக்கிரம் - சீவசொப்பனம் - சீவசுழுத்தி- சீவதுரியம் பரசாக்கிரம் - பரசொப்பனம் - பரசுழுத்தி - பரதுரியம், சிவசாக்கிரம் - சிவசொப்பனம் சிவசுழுத்தி சிவதுரியமென் னும் பன்னிரண்டு வகைப்பட்டு வருவதனை யென்று கூறுவா னையினை யென்பதாம்.

ஐவகை யென்றது மனம், புத்தி, சித்தம், அகங்கார மென்பவற்றை. பானென்றது அபிமானரூப விருத்தி யுள்ள வை. ஞானசொப்பன முண்டாகாதென்று, ஞான சொப்பன முண்டாயவிடத்துச் சீவசாக்கிர முதலியவற்றின் அநுபவ முண்டாகின்றிலதென்று கருணாதர பாலனவாம்.

ஞானசொப்பனமாவது தத்துவ ஞானிகருத கிருசியமனைத் தும் (சொப்பனப் பொருள் போல) மித்தையாகத் தோன்றுத லாம்.

திரிசிய மார்பவஞ்சம் தேய்ந்துசொப் பனம்போற்றோன்ற
உரியவெம் பால்விழித்தோ னொருவனே சீவன்முத்தன்."
என்று சூதசங்கிதை கூறுகின்றது.

தத்துவமசி யென்னும் மகாவாக்கியத்தினது முப்பதத்தின் முடிபொருளாகிய என்னிடத்துச் சீவசாக்கிர முதலியன நிகழ்

கின்றன வென்று தனதனுபவத்தைச் சசிவன்னன் கூறுவா ரையினு மென்பதிங் குணர்தல் வேண்டும்.

" தன்னையுந் தனக்கா தாரத் தலைவனை யுங்கண் டானேல
பின்னையத் தலைவன் றானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத்தீர்வன்"

என்று கைவல்லிய நவநீதங்கூறுவது கவனிக்கப்படுமாயின், சீவன்-பரன்-சிவமென்பன நன்கு விளங்குவனவாம். தன்னை யென்பது சீவனாம்; தனக்காதாரத்தலைவ னென்பது ஆத்மா அல்லது கூடஸ்தனாம்; பிரம மென்பது சிவமாம். சீவனுக்கும் ஆத்மாவிற்குமுள்ள ஐக்கியம் பிரதிபிம்ப முகத்திற்கும் பிம்ப முகத்திற்குமுள்ள ஐக்கியம் போல்வதாம்; ஆத்மாவிற்கும் பிரஹ்மத்திற்குமுள்ள ஐக்கியம் கடாகாசத்திற்கும் மகாகாசத்திற்குமுள்ள ஐக்கியம்போல்வதா மென்பதிங் குணர்தற் பாலதாம்.

"தொம்பதந் தற்பதந் தோன்று மசிபதம்,
நாமிய சீவன் பரன்சிவ மாய்நிற்கும "

என்று திருமந்திரங் கூறுவதும் இங்குணர்தற் பாலதாம்.

## 1. சிவசாக்கிரம்

வேறு.

90. புரண மாகவே புறம்புள
புலன்களு மந்தக்
**கரண மியாவையும் வழங்கிடம்.**
**நனவெனக் கண்டேன்.**

புறக் கரணங்களும் அகக்கரணங்களுமாகிய வெல்லாக் கரணங்களும் செவ்வையாகத் தத்தம் வியாபாரங்களைச் செய்யுங் காலத்தைச் சீவசாக்கிரமென்று நான் கண்டனன். 90

புறக்கரணங்கள்—ஞானேந்திரிய பஞ்சகமும், கர்மேந்திரிய பஞ்சகமுமாம்; அகக்கரணங்கள்—அந்தக்கரண சதுஷ்டயமாம்.

இக்கரணமனைத்தும் தத்தம் வியாபாரங்களைச் செய்யுங் காலம் சீவசாக்கிரமாமென்க. ஸ்தூல சரீரத்தில் சீவன் வனிதாதி விஷய போக மனைத்தையும் எல்லாக் கரணங்களினாலும் அனுபவிக்குங்காலம் சீவசாக்கிரமாம்.

## 2. சீவ சொப்பனம்.

91. புரண மாகவே புறம்புள
புலன்கெட வந்தக்
கரண மியாவையும் வழங்கிடங்
கனவெனக் கண்டேன்.

புறக்கரணங்கள் தத்தம் வியாபாரங்களைச் செய்வது முற்றுங்கெட, அந்தக்கரண நான்கும் செவ்வையாகத் தத்தம் வியாபாரங்களைச் செய்யுங்காலத்தைச் சீவசொப்பனமென்று நான் கண்டனன். 91

புறக்கரணங்களின் வியாபாரம் முற்றுங் கெடாநிற்க, அந்தக்கரணங்கள் தத்தம் வியாபாரங்களைச் செய்யுங்காலம் சிவசொப்பனமாமெனக.

சூக்கும சரீரத்தில் சீவன் சாக்கிரவாசனை விஷயபோகத்தை அந்தக்கரணங்களால் அநுபவிக்குங் காலம் சிவ சொப்பனமாம்.

## 3. சிவசுழுத்தி.

92. மரண மாகிய தசையிது
வெனும்படி மனாதி
கரண மியாவையு மிறந்துள
சுழுத்தியுங் கண்டேன்.

சாக்கிரத்தி லிருப்பவர் இந்த நிலைமை மரண நிலைமைக்கு ஒப்பாமென்று கூறும்படி மன முதலிய எல்லாக் கரணங்களும் (தமது காரணமாகிய அவித்தையில்) மாண்டுள்ள சிவ சுழுத்தியையும் நான் கண்டனன். 92

அந்தக்கரண சதுஷ்டயம், ஞானேந்திரிய பஞ்சகம், கர்மேந்திரிய பஞ்சக மென்னும் கரணக் கூட்ட மனைத்தும் தமது காரணத்தில் லயமாயுள்ள காலம் சிவ சுழுத்தியாமெனக. காரண சரீரத்தில் (அவித்தையில்) சீவன் பிரஹ்மாநந்த விஷய போகத்தை மாயாவிருத்தி யென்னும் சூக்குமகாரணத்தா லனுபவிக்குங்காலம் சிவ சுழுத்தியாம்.

### 4. சிவ துரியம்.

93. எஞ்ச லின்றியேக் காணமு
மிறந்திருண் டிருந்த
துஞ்ச லங்குணர் போதமாங்
துரியமுங் கண்டேன்.

புறக்கரணம் அகக்கரண மென்பனவற்றுள் எந்தக் கரணமும் மிஞ்சாது மாண்டு (போக) இருள்மயமாயிருக்கின்ற சுழுத்தியில், (அவ்விருளை) அறிகின்ற அறிவாகிய துரியத்தையும் (சிவதுரிய மென்று) நான் கண்டனன். 93

துரியமென்பது நான்காவது பொருளாம். சாக்கிரம், சொப்பனம், சுழுத்தியென்னு மவஸ்தை மூன்றனையு மறியுஞ் சேதனம் (அறிவு) அவற்றிற்கு வேறாயிருத்தலின், துரியமாம்; அதனது விளக்கம் சிவதுரியவிளக்கமா மெண்க.

“ அருந்துயர்க் கிடமா யந்த காரமே மூடி யொன்றும்
தெரிந்திடற் கின்றி நின்றே திகழுமா யைக்கு மேலாய்
விரிந்தநற் போத மாகி விளங்கிடுந் துரிய மெய்யே
தெரிந்திடக் கண்ட போதே திகழுநன் முத்தி யன்றே—”

என்று பெருந்திரட்டு—அனுபூதி விளக்கம் கூறுவது இங்கு நன்குணர்தற் பாலதாம்.

சீவனுக்கு அவன் தேகம் - இந்திரியம் - மனம்-புத்தி-அகங்காரம் - சித்தம் - பிராணன் என்னு முபாதி யேழுடனுங் கூடி விளங்குங் காலம் சாக்கிரமென்றும், தேகம் இந்திரியமென்னு மிரண்டும் நீற்க மனம் - புத்தி - அகங்காரம் - சித்தம் - பிராண னென்னு மைந்துபாதியுடன் கூடி விளங்கும் காலம் சொப்பன மென்றும், இவ்வைந்தனுள் மன முதலிய நான்கு மொழியப் பிராணனுடன் கூடி விளங்குங் காலம் சுழுத்தி யென்றும், இவற்றின் விரி வொடுக்கங்களை யறிந்து சாட்சியாய் விளங்கும் காலம் துரியமென்றும் இங்குணர்தல் வேண்டும்.

## 5. பர சாக்கிரம்.

94. துரிய மாகிய போதமோர்
துளக்கமற் றனைத்தின்
கரிய தாயிருந் திடம்பர
னனவேனக் கண்டேன்.

(சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி யென்னும் அவஸ்தை மூன்றற்குமப்பாற்பட்டு) ஞான வடிவமாக விளங்குகின்ற துரிய வடிவச் சீவனே பரனும்; அவன் ஒரு சலனமு மில்லாமல் சர்வப் பிரபஞ்சத்திற்கும் சாட்சியாக விளங்குங் காலத்தைப் பர சாக்கிரமென்று நான் கண்டனன். 94

சீவன் பரஞ்ஞைய அஃதாவது ஆன்மாவாய்ச் சர்வ சாட்சியாக விளங்கும் காலமே பரசாக்கிரமா மென்க.

ஆன்மாவிற்கு ஈசுவரன் சொரூப நோக்கில் வேறன்றாகலின், அஃது ஈசுவரவுபாதியாகிய சர்வேசுவரத்துவம், சர்வஞ்ஞத்துவம், சர்வாந்தரியாமித்துவம், சர்வகாரணத்துவம், சர்வஸ்திதித்துவம், சர்வசங்காரத்துவம், சர்வசிருட்டித்துவம், (இவை நிகழுவதற்குக் காரணமாயுள்ள மாயை) என்னு மினைத்திற்குஞ் சாட்சியாக விளங்குங் காலம் பர சாக்கிரமா மென்பதிங் குணர்தல் வேண்டும்.

## 6. பர சொப்பனம்.

95. புணர்ந்த விச்சகத் தொழித்துணர
போதமாந் தன்னையே
யுணர்ந்த மற்றது பரன்கண
வெனும்படி யுணர்ந்தேன்.

ஆத்மவடிவச் சீவன் நாமரூப வடிவமாகப் பொருந்தி யுள்ள இப்பிரபஞ்சமனைத்திற்குஞ் சாட்சியாக விளங்குவ தொழித்து, அவற்றிற்குச் சாட்சியாக விளங்கிய ஞான வடிவமாகிய தன்னையே யறிந்துள்ள காலத்தைப் பர சொப்பனமென்று நான் கண்டனன். 95

ஆத்மவடிவச் சீவன் சர்வத்திற்குஞ் சாட்சியாக விளங்கும் நாட்டத்தை யொழித்து, தன்னில (ஆத்மாவில்) நாட்டமாக விளங்குங் காலமே பர சொப்பனமா மென்க.

## 7. பர சுழுத்தி.

96. சான்று சாக்கிய மிறந்திடத்
தானிருந் தமையுந்
தோன்று ரவிடம் பரன்சுழுத்
தியதெனத் துணிந்தேன்.

ஆத்மவடிவச் சிவன் யான் சான்று, இவை சாக்கிய மென்று பாவிக்கும் பாவனை யிறந்து போக, (அவை யிறந்தபோது) தானிருப்பதும்தனக்குத் தோன்றுதுள்ள காலத்தைப் பரசுழுத்தி யென்று நான் துணிவாகக் கண்டனன். 96

ஆத்மவடிவச் சிவன் யான் சான்று, இவை சாக்கியமென்னும் பாவனை யொழிந்து போக, தானிருப்பதும் தனக்கு விளங்காது சுகவடிவமாக விளங்கும் காலமே பர சுழுத்தியா மென்க.

சான்று-சாட்சி. உதாசீனமாய் (சம்பந்தமில்லாது) யாதாவதொன்றை யறிபவன் சாட்சி யெனப்படுவான். ஆத்மா சர்வப் பிரபஞ்சத்தையும் உதாசீனமா யறிவதாக (பிரகாசப்படுத்துவதாக) விருத்தலின், சர்வசாட்சியாம். சாக்கியம் (சாட்சியம்) - சாட்சியா லறியப்படும் பொருளாம்.

## 8. பர துரியம்.

97. மரித்த தென்றுணர்ந் துரைத்தது
மரித்திடத் தனிலே
தெரித்த போதமே ததுபரன்
றுரியமாய்த் தெளிந்தேன்.

மாயாப்பிரபஞ்சம் நசித்ததென் றுணர்ந்துரைத்த தும் அது நசித்தவிடத்துத் தான் நசியாதிருப்பதை யறிந் ததுமாகிய அறிவெதுவோ அதுவாக விளங்குதலே (ஆத்ம வடிவச் சீவனுக்குப்) பர துரியமென்று நான் தெளி வாக வறிந்தனன். 97

சாக்கிர வுலகும் சொப்பன வுலகும் சுழுத்தியி லழிவதை புணர்ந் துரைப்பதும், அவை யழிந்தபோது தான் அழியா திருப் பதை யறிவதுமாகிய சேதனமாக விளங்குவதே ஆத்ம வடிவச் சீவனுக்குப் பர துரிய மாமெண்க.

## 9. சிவ சாக்கிரம்.

98. இறையெ னும்பொருட் டுரியமே
யென்னையாண் டவனே
மறையி னக்தகற் பதப்பொரு
ளனவென மதித்தேன்.

சிவமென்று சொல்லப்படுந் துரியப் பொருளே! என்னை யடிமைகொண் டருளிய பரமகுருவே! (பரன் வடிவமாய் விளங்கிய சீவன்) வேதமுடிவின்கண் உள்ள தற்பதத்தின் இலக்கியார்த்தமாகிய சிவமாக விளங்குதலை (அவனுக்குச்) சிவ சாக்கிரமென்று நான் நிச்சயித்தறிந்தனன். 98

பரனாய் விளங்கிய சீவன் சிவமாய் விளங்குங்காலமே சிவ சாக்கிரமா மென்க.

இது குருசாக்கிரமென்றும் சொல்லப்படும். வேதமுடி வென்றது இங்குச் சாந்தோக்கிய உபநிஷத்தை

## 10. சிவ சொப்பனம்.

99\. பண்டை விச்சுவ வாதனைப்
பழுதுபோய் முழுதுங்
கண்ட கண்ணதே யாகிய
கனவதுங் கண்டேன்.

(முன் பரன்வடிவாய்ப் பின் சிவவடிவாக விளங்குகின்ற சீவன்) அநாதியாகத் தொடர்ந்து வருகின்ற உலக வாசனை யென்னும் பிரதிபந்தமானது நீங்கப்பெற்று, (திருசியம்) எல்லாவற்றையும் அறிகின்ற அறிவேயாகி

விளங்கிய நிலை (அவனுக்குச்) சிவசொப்பனமாமென்பதையும் நானறிந்தனன். 99

முன் பரஞுப்பப் பின் சிவமாய் விளங்கிய சீவன் உலகவாசனை சிறிதுமில்லாது அறிவாய் விளங்குங் காலமே சிவ சொப்பனமாமென்க. இது குரு சொப்பனமென்றும் சொல்லப்படும்.

பிரதிபந்தம்-தடை. உலக வாசனையென்று கூறப்பட்டதாயினும், இனமபற்றித் தேகவாசனை சாஸ்திர வாசனை யென்பனவும் கொள்ளப்படுவனவாம்.

(1) என்னை யொருவரும் நிந்தித்தல் கூடாது, யாவரும் என்னையே துதித்தல் வேண்டும் என்னும் ஆக்கிரகத்தின் திடசம்ஸ்காரம் உலக வாசனையாம்.

(2) ஸ்தூல சூக்கும தேகங்களின் ரோகாதிரூப அல்லது பாவரூப மலங்களை ஔஷத முதலியவற்றாலாவது தீர்த்த யாத்திரையாலாவது முற்றும் நீக்குவேன்; அன்றியும், அவற்றின் கண் புஷ்டி அழகு முதலிய வடிவக் குணங்களை அல்லது புண்ணிய வடிவக் குணங்களைச் சம்பாதிப்பேன் என்னும் ஆக்கிரகத்தின் திட சம்ஸ்காரம் தேக வாசனையாம்.

(3) சகல சாஸ்திரங்களையும் படித்தல் வேண்டும், அவற்றினர்த்தங்களை யெல்லாமறிதல் வேண்டும், அவை கூறும் ஒழுக்கத்தைத் தவறாது மேற்கொள்ளல் வேண்டுமென்னும் ஆக்கிரகத்தின் திடசம்ஸ்காரம் சாஸ்திர வாசனையாம்.

யான் சிவமா யிருக்கின்றேனென் றொருவ ருள்ளவாறு உணர்ந்தாலும்இவ்வாசனைகளுள்ளவளவும் அறிவாக (சிவமாக)வே விளங்குதல் கூடாதென்பதாம்.

## 11. சிவ சுழுத்தி.

100. காட்சி யாவையுங் கண்ணதா
யக்கணுங் கரைந்த
மாட்சி யாகிய வகோசர
முறக்கமாய் மதித்தேன்.

(முன் பாஞய்ப் பின் சிவமாய் விளங்கும் சீவன்)அறி பொருளனைத்தும் அறிவேயாக விளங்க, அவ்வாறு விளங்கும் அறிவும் தானுக விளங்குகின்ற மாட்சியாகிய சுட்டியறிதற்கியலாத நிலையை (அவனுக்குச்) சிவ சுழுத்தியென்று ஞானறிந்தனன். 100

முன் பாஞய்ப் பின் சிவமாய் விளங்குஞ் சீவன் முன் அறி படுபொருளனைத்தும் அறிவாகிய தன்னைத் தவிர வில்லையென்ப துணர்ந்து பின் யான் அறிவாக விருக்கின்றேனென்பதையு மறந்து அறிவாக விளங்குங்காலமே சிவசுழுத்தியாமென்க. இது குரு சுழுத்தியென்றும் சொல்லப்படும்.

''காட்சியை யெல்லாங் கண்ணதாய்க் கரைந்துக் கண்ணொழிக் தொருபொரு ளில்லா, மாட்சியை யளிக்க வல்லவன் குருவாம்'' என்று பிரமகீதை கூறுவதும், ''ஞானங் காரண மறிபொருள் காரிய நாமரூ பப்பேய்கள், ஆன தெப்படி யழிந்ததெப்படியென வாய்குதல் பலனன்றே'' என்று கைவல்லிய நவநீதம் கூறுவதும், இங்குணர்தற் பாலனவாம்.

## 12. சிவ துரியம்.

101. அருந்த வாமறை யந்தமா
மகோசரந் தனினீ
யிருந்த வாறறி வித்தவா
றெங்ஙன மிசைப்பேன்.

அருமையாகிய தவத்தை யுடைய எனது குருமூர்த்தியே! மறை முடிவிற்கு அகோசரமாயுள்ள விடத்தில் தேவரீர் இருக்கின்ற விதத்தையும் அடியேனுக்கு அதனை (சிவப்பிரஹ்ம ஐக்கியத்தை) யறிவித்த விதத்தையும் யான் எவ்வாறு கூறுவேன்? 101

சீவன் முன்பாஞய்ப் பின்சிவமாய்ச் சொல்லிறந்த விடத்து விளங்குவதே சிவதுரியமா மென்க. இது குருதுரிய மென்றும் சொல்லப்படும்.

மறைமுடி யென்றது உபநிடதங்களை. அகோசரம்-அறிதற் கியலாதது.

"ஆத்மா வாக்கினாலாவது மனத்தினாலாவது சட்சு முதலிய விந்திரியங்களாலாவது அடையத் தக்கதன்று" என்று கடோப நிஷத கூறுகின்றது.

" ஈரொன்ன் றிரண்டி லாம னிறைந்தபூ ரணமா யெங்கும்
நாளுகத் தெளிந்த ஞான"

நிலையே சிவ துரியமாமென்பதிங் குணர்தல் வேண்டும்.

தத்துவராய சுவாமிகள், பாடுதுறை - பரிபூரணப் பிரகாச நாயனார் திருப்பள்ளி யெழுச்சியில் இங்குக் கூறியுள்ள அவஸ்தைகளை விரிவாக அருளிச்செய திருக்கின்றார்; விருப்புடையார் ஆண்டுக் காண்க.

## துரியாதீத நிலையைக் கூறல்.

102. எம்பி ரானிடந் தோறுமிடந்
தோறுமது மதுவாய்த்
தம்பி ரானடஞ் செயும்வகை
சாற்றுமா றறியேன்.

எமது குருமூர்த்தியே! (சிவசாக்கிர முதல் சிவ துரிய மீறாயுள்ள அவஸ்தைகளுள்) அவஸ்தை தோறும் அவஸ்தை தோறும், அவ்வவ்வவஸ்தை யாகாரமாய், தம்பிரான் திருநடனஞ் செய்யும் விதத்தைச் சொல்லும் விதம் நானறியா திருக்கின்றேன். 102

சாககிரம, சொப்பனம், சுழுததி, துரியமென்னும நான கிற்கு மபபாறபட்டு விளங்கும நிலை துரியாதீதமாம். இது குரு துரியாதீத மென்றும சொலலப்படும

அவஸ்தை தோறும அவஸதை தோறும என்பது ஒவ்வோ ரவஸதையிலும என்னும பொருளதாம. தமபிரானென்றது தனது யதாாதத வடிவமாக விளங்கும சற்குரு மூாததியை

சசிவனனன சிவசாககிர முதல சிவதுரிய மீறுயுள்ள அவஸதைகளுள அவவவ்வவஸதைக கேறற வடிவமாகி அதுவது வாகாது விளஙகும எனது துரியாதீத நிலையைக குறிப்பிட்டுக கூறல முடியாதென்று கூறினு னென்பதாம.

‘ நனவிடைத துரியா தீதம பூாநதநற றிலைவ ரன்றே
வினையிடைப பிறவி தனனை வேரொடுங் களைந்து போககி
மனவினைக கெட்டா வின்ப வான்பரா வமிழ்தா கின்ற
தனிமிகப் பருகி புயயுந தததுவ வித்தா கின்றா’’

என்று பெருந்திரட்டு—நித்தியாநநத தரிசனம் கூறுவது இஙகு நன்குணாதற பாலதாம

### சசிவன்னன தேவரீர்க்குச் செய்யும் கைமமாறு காணேனெனக் கூறல்.

103. ஆவி யேயடி யேன்செய்கைம்
மாறுனக் கேன்னேனிற்
பாவி யேனது தானுமுன்
னுடையதாம் பண்டே.

எனதுயிராகிய குருமூர்த்தியே! தேவரீர்க்கு அடியேன் செய்யவேண்டிய கைம்மாறு யாதென் றாலோசித்து நோக்கின், யோசித்து நோக்குகின்ற அதுவும் முன்னே தேவரீரது பொருளாக விருக்கின்றது; (அதனால் நான் கைம்மாறு செய்வது இன்னதென்று) எண்ணுதற் குரியவனாகா திருக்கின்றேன். 103

சசிவன்னன் மாநந்திபாராயண முனிவர்க்கு உதகத்தோடு கூட பொருளாய மூன்றனையுந் தத்தஞ் செய்துவிட்டானாதலின், தேவரீருக் கிப்போது கைம்மாறு செய்ய ஒன்றுமில்லாதவனா யிருக்கின்றேனென்று கூறினானென்பதாம். கைம்மாறு பிரதியுபகாரம்.

திருவாசகத்தில் மாணிக்கவாசக சுவாமிகள்

"அன்றே யென்றனாவியு முடலு முடைமை யெல்லாமுங், குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ, இன்றோ ரிடையூ றெனக்குண்டோ வெண்டோண் முக்க ணெம்மானே, நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ விதற்கு நாயகமே" என்றருளியிருப்பது இங்குணர்தற் பாலதாம்.

**சசிவன்னன் எனது பணி தேவரீரது**
**அடியார்க்குச் செய்யும் பணியாம்;**
**வேறுபணி யெனக் கிலையெனக் கூறல்.**

104. ஆவல் செய்தேன தாக்கையுள்
ளளவுநின் னடியார்க்

கேவல் செய்வதே யன்றிமற்
றொன்றுநா னறியேன்.

என அடாப்புளவ வளவும் அன்புகொண்டு தேவரீ
ரது அடியார்க்கு அவரேவிய ஏவற்பணியைச் செய்வதே
யன்றி மற்றொன்றும் நானறியாதவனா யிருக்கின்றேன்.

சசிவன்னன் தேவரீரது அன்பா பணி செய்வதே யான்
தேவரீர்க்குச் செய்யு ம் கைம்மாறுகுமெனக் குறிப்பித்தா னென்ப
தாம்.

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்,
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே" என்று தாயுமான
சுவாமிக ளருளியிருப்பது ஈங்குணர்தற் பாலதாம்.

**சசிவன்னன் தேவரீரது திருப்பணி செய்ய எனக்குப் பிறவி வேண்டுமெனக் கூறல்.**

105. இறவி லேப்பத மும்பெற
வேண்டிலே னென்றும்
பிறவி வேண்டுவே னின்றிருப்
பணிசெயப் பெறினே.

(மகாப் பிரளயம் வருமளவும்) அழிதலில்லாத எத்
தன்மையதாய பதவியையும் பெற யான் விரும்புகின்றே

னில்லை; ஆனால், தேவரீரது திருப்பணியைச செய்யப் பெறுவேனாயின், எப்போதும் இவ்விதப் பிறவியையே விரும்புகின்றேன். 105.

சசிவன்னன் எனக்கு ஒன்றிலும் விருப்பமில்லை; ஆனால், தேவரீரது திருப்பணிசெய்யும பிறப்புக் கிடைக்குமாயின், அதனை யானெப்போதும் விரும்புகின்றேனென்று கூறினானென்பதாம்.

எத்தன்மையதாய பதவியையு மென்றது கைலாய, வைகுண்ட, பிரமலோக மென்பனவற்றை.

"மறமலி யுலக வாழ்க்கையே வேண்டி வந்தநின் னன்பர் தம் பணியாம், அறமது கிடைக்கி னன்றியா ரெந்த வற்புத நிட்டையி ரிம்பத்தம், துறவது வேண்டு மௌனியா யெனக்குத் தூயநல் லருள்தரி னின்னம், பிறவியும் வேண்டும் யானென சிறக்கப் பெற்றவா பெற்றிடும் பேறே" என்று தாயுமான சுவாமிகளருளி செய்திருப்பது இங்குணர்தற் பாலதாம்.

## சசிவன்னனது செய்கையைக் கூறல்.

வேறு

106. என்றுபல கால்விழு மெழுந்தொழு
மழும்புரியு மென்னை யினியா
னின்றுபல வாகவுரை செய்யுமவ
னன்பினொடு நெஞ்சுருகியே.

அச் சசிவன்ன னிவ்வாறு கூறி மாதங்திபராயண முனிவரது பாதத்தில் பலமுறைவிழுந்து வணங்குவான்; எழுந்து நிற்பான்; நின்று கைகூப்பி வணங்குவான்; (தான் பிறந்த நாட்களுள் பல நாள் வீணாய்க் கழிந்தமையை நோக்கி) அழுவான்; (தன்னைக் கிருதார்த்தனாக்கிய மாதங்திபராயண முனிவரது அருட்டிறத்தை வியந்து அவரைத்) துதிசெய்வான்; இனி யான் (செய்வது)யாது (என்பான்); (இந்நிலையில்) நின்று அன்பினால் மனமுருகிப் பலவாறாகத் தன் குருமகிமையைக் கூறிக்கொண்டிருந்தனன். 106

சசிவன்னன் மாதங்திபராயண முனிவரது அருட்டிறத்தை வியந்து கொண்டாடி அவரை வணங்கிக்கொண் டிருந்தனன் என்பதாம்.

## சசிவன்னன் சிவன்முத்த னானானெனல்.

107. ஏட்டிலறி வின்றியிறை தன்னிலறி
வின்றியிவ் வுடம்பி னுடனே
வீட்டி லுறை வானையினி வீடுபெறு
மென்பது விளம்பு கிலமே.

(இவ்வாறெழுமிவந்த) சசிவன்னன் சுருதி விசாரத்தாலுண்டாய ஞானமு மில்லாது சற்குருவி னனுக்கிரகத்தாலுண்டாய ஞானமுமில்லாது இவ்வுடம்பினுடனே (சாவதுக்க நிவிர்த்தி - பரமானந்தப் பிராப்தி வடிவ) மோட்சத்தி லிருப்பானானான்; இங்ஙன முள்ள விவனை யினி (இறந்தபின்) மோட்ச மடைவானென்று கூறுதல் கூடாது. 107

சுருதி விசாரத்தா லுண்டாய ஞானம் அபரவறிவாம், சற்குருவி னனுக்கிரகத்தா லுண்டாய ஞானம் பரவறிவாம். இவ்விரண்டு ஞானமும் சாவதுக்க நிவிர்த்தி - பரமானந்தப் பிராப்தி வடிவ மோட்ச சொரூபமாக விளங்குகின்ற சீவன்முத்தனிடத்து முன்னைத்துத் தோன்றுவ தில்லையா மென்பது ஆங்குணர்தற்பால

பரவறிவாவது மெய்யறிவாம், அஃதாவது அகம் பிரஹ்மாஸ்மி (யான் பிரஹ்மமா யிருக்கின்றேன்) எனனும் ஞானமாம்.

“ இந்த நிச்சய முத்தரு ளனுபவ மிருப்பதெப் படியென்றால், சிந்தை யற்றுபூ மண்டல விராசனுஞ் சிசுவும்போற் சுகமாவா, பந்த முத்திகள் மறந்துபோ முண்டென்று பலர்சொலினலக்கயாவா, அந்த ரத்தையுண் டெழிந்ததோ கொசுகெனுமவாக்களை நகையாரோ” என்று கைவல்லிய நவநீதங் கூறுவது இங்கு நன்குணர்தற் பாலதாம்.

பிராரப்த பிரபஞ்சம் சத்தியமாகத் தோன்றாது மித்தையாகத் தோன்றாத தன்னிலையைப் பிறழா திருப்பவன் சீவன்முத்தனாவன், அவனிறந்தபின் ஒரு பதவியைப் புகமாட்டான், தன் சொரூபமாகவே விளங்கி நின்றான் அதனால், அவனிறந்தபின் மோட்சமடைவானென்று கூறுவது பொருந்தாதென்பது நன்கு விளங்குவதாம்.

"மேலைப் புயாதி போற்றக் கண்டவன் ஒன்றற் போல
உடலெலாம் புயாதி போல வுத்தாரந் சீவன் முத்தா
அடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்தி பதமடைந் திருப்ப னென்றும்"

என்று கைவல்லிய நவநீதங் கூறுவதால், சீவன் முத்தனது பின்னிலைமை யித்தன்மையதா மென்பது நன்கு விளங்குவதாம்.

## சீவன்முத்தனது பிதிர்க்கள் நரகலோகத்தினின்றும் நீங்கிப் புண்ணிய லோகத்தை யடைந்தா ரெனல்.

108. வஞ்சவலி யானரகில் வீழ்பிதிர
ரங்நரகு பாழ்பட விவன்
விஞ்சைவலி யாலடைய வேறினர்
சுராதி பர்கண் மேலுலகமே.

சசிவன்னனது தீவினையின் பெருக்கத்தால் சுவர்க்கத்திலிருந்து நரகத்தில் வீழ்ந்து கிடந்த (இவனது) பிதிர்க்கள் யாவரும் அந்த நரகம் பாழாக இவனடைந்த தத்துவ ஞானத்தின் மகிமையால் தேவர்கள் வாழும் புண்ணிய லோகத்தை யடைந்தார்கள். 108

இவனது பிதிர்க்கள் - இவனது வமிசத்திற் பிறந்திறந்தவர்.

ஒருவன் ஞானியாவானாயின், அதனால் அவனது முன்னோர் யாவரும் நல்லுலகத்தை யடைகின்றன ரென்பது இதனால் விளங்கியவாறறிக.

சசிவன்னன் மாசந்திபராயண முனிவரது அனுக்கிரகத்தினால் சீவன்முத்தனானபோது, அவனது தீவினையின் பெருக்கத்தால் புண்ணிய லோகத்திலிருந்து நரகத்தில் விழுந்து கிடந்த அவனது பிதிர்க்கள் யாவரும் புண்ணிய லோகத்தை யடைந்தனர்; அவனது தாய் தந்தையரும் புண்ணிய லோகத்தை யடைந்தனர்; அவனது உறவினரும் புண்ணிய லோகத்தை யடைந்தனர்; அவனைப் புணர்ந்த மங்கையரும் புண்ணிய லோகத்தை யடைந்தனர்; அவன் வசித்த விடம் யாவரும் வணங்கும் மகிமை யுடைய தாயிற்று என்று இந்நூலுக்கு முன்னூல் கூறுகின்றது.

விருத்தாசல புராணம் (சசிவன்னன்)

பரிசுத்த சேட்டை கொண்டு பத்தத்திறத்திற பூசை செய்தா
னரியனீ நியோகு சாத்தி படியிணை தலைமேல் வைத்துத்
தெரிவுற வமைந்த சித்தான திவ்விய ஞானம் பெற்றுத்
தெரிவுள முத்தி பெற்றான் றந்தையு முத்தி பெற்றான்"

ந்திரகலை, நாமகவிட்டப் பெருந்தேசிக மேலோர்களுஞ் சேர்ந்தார்
பதிரச்சி வண்ணனை காதற் புலைச்சியுங் கதியிற் சேர்ந்தார்"

என்று கூறுகின்றது.

(1) தன்னைப் புகழ்ந்துகொள்ளாமை (2) இடம்பமின்மை, (3) ஜீவஹிம்சை செய்யாமை (4) பிறர் செய்த தீமையைப் பொறுத்துக்கொள்ளல், (5) வஞ்சகமின்மை, (6) சற்குரு சேவை, (7) மனச்சுத்தி, சரீரசுத்தி, (8) சன்மார்க்கத்தி லொழுக விடாது முயற்சி செய்தல் (9) தேக சுவாதீனம், (10) இந்திரிய விஷயங்களில் வெறுப்படைதல், (11) யானென்னு மகங்கார மற்றிருத்தல் (12) பிறப்பு - இறப்பு - மூப்பு நோயென்பவற்றில் துக்கத்தையுந் தோஷத்தையுங் காண்டல், (13) புத்திர - தார க்ருக முதலியவற்றில் பிரியமற் றிருத்தல், (14) புத்திர - தாராதிகளின் சுகதுக்கங்களில் அபிமானமற்றிருத்தல், (15) இஷ்டமுண்டாயபோது மகிழ்ச்சியும் கஷ்டமுண்டாயபோது வாட்டமு மடையாது எப்போதும் ஒருமனமாகவே யிருத்தல், (16) சாவ

மூப ஆத்மசொரூபமா மென்பதுணராது பரமேச்சுவரனிடத்துச் சலனமற்ற பத்தியோ டிருத்தல், (17) சனசஞ்சாரமற்ற சுத்த மான தனியிடத்தில் வசித்தல், (18) அவிவேகிகளின் கூட்டத் தில் பிரியமற்றிருத்தல், (19) ஆத்ம தத்துவ விசாரத்தி லேப் போது மிருத்தல், (20) தத்துவ ஞானத்தினது உத்தம பலனை மோட்சமென றுணர்த லென்னும் சம்பத்தை யுடைய முமுட்சு (மோட்ச விருப்புடையவன்) தன திருபத்தொரு குலத்தைக் கரை யேற்றுகின்றான், பிரம்ம வித்தாக (பிரம்ம ஞானியாக) விரும்ப வன் தனது நூற்றொரு குலத்தைக் கரையேற்றுகின்றா னென் பது உங்குணர்த்தப்பட்டது.

" முற்றவத் தாமல் பூசை முற்றிய பத்தர் மூவேழ்
சுற்றமுஞ் சுவர்க்க மெய்தத் துன்னுதற் கரிதே யாய
அற்புத வுலகந் தன்னைத் தாமடைந் திருப்ப ரன்பாற்
சொற்பணி செய்தோர் தாமுந் துரிசறு நெறியி னோரே"

என்று சிவதருமோத்தரம் கூறுகின்றது; அதன் விசேஷ வுரை யில் " மூவேழ் சுற்றம் என்பது மாதர் வர்க்கம் 7; பிதிர்வர்க் கம் 7; தன் வர்க்கம் 7; ஆகமொத்தம் 21" என் றெழுதப்பட் டிருக்கின்றது.

### சசிவன்னனை வியந்து கூறல்

109 தேவரு மனிதரு மிவனருளெழில
வியந்துரை செயப்படுவதோ
மூவரும வணங்கிமுடி யாலவன
தேவலசெய முந்துறுவரே

(தத்துவஞான படைத்த பொருட்டு) இச்சசிவன்னன் செய்த குரு பணிவிடையின் சிறப்புத் தேவர்களாலும் மனிதர்களாலும் அளவிட்டு வியந்து சொல்லத் தக்கதன்றாம், (பிரஹ்மா விஷ்ணு சிவனென்னும்) மும்மூர்த்திகளும் (இச்சசிவன்னன் செய்த குரு பணிவிடையின் சிறப்பை யளவிட்டு வியந்து சொல்வது முடியாது) சிரசால் வணங்கி அவனது ஏவலை செய்ய (நானு னென்று) முற்பட்டு நிற்பாராயினர் 109

ஞானியின் பெருமையை யளவிட்டுக் கூறமுடியா தென்பதாம்.

"ஞால முண்டவன் றலைமிசை சுமப்பன மெய்ஞ் ஞானி வேண்டுவ வெல்லாம், ஆல முண்டவ னவன்பின்னே திரிகுவ னவனடித் துகட்கன்றே, சில மன்னரு மற்றுள தேவரு திசை

திசை பணிக்தேத்தக, காலி ரண்டையுந் திலைமிசை வைமெனக கழறுவன் கமலத்தோன்"

என்று குறுந்திரட்டுக கூறுவது இங்குணாதற் பாலதாம்.

## ஞானவானது பெருமையைக் கூறல்.

110. ஞானியை நரன்சுர னெனுதொழிக
ஞாலமுய நாத னருளான்
மேனியது கொண்டுதனை நல்கவரு
மென்றறையும் வேத முடிவே.

ஞானியை மனிதனென்றாவது தேவனென்றாவது சொல்லுவது கூடாது. வேத முடிவுகள் பரமேசுவரன் உலகத்தாருய்தற் பொருட்டுத் தன்னுடைய கருணையால் மானுட வடிவங்கொண்டு, அதிகாரி புருஷர்க்குத் தன்னைக் கொடுக்க வருகின்றானென்று கூறுகின்றன. 110

ஞானியைப் பரமேசுவர வடிவமாகக் கொள்ள வேண்டுமேயல்லாமல், மனிதனென்றாவது தேவனென்றாவது கொள்ளுதல் கூடாதென்பதாம்.

வேதமுடிவுகள் - உபநிடதங்கள்; தன்னைக் கொடுத்தல் நானே நீ அல்லது நீயேநா னென்றுபதேசஞ் செய்தல்.

"கனவினிற் காணுங் காட்சிபோற் சகத்தைக் காணுமெய்ஞ் ஞானிக டம்மை, மனுடரே வன்றித் தேவரே யென்று மன னினை விருத்தியை மாற்றி, தனியருமை பரம சிவனுருக் கொண் டிவ் வுலகுய வெழுந்தரு ளினனென், றனையனை நினைப்போ ருத் தம ரல்லோ ராடியை நோக்குமக் தகரே" என்று பெரியாரருளி யிருப்பது இங்கு நன்குணர்தற்பாலதாம்.

தேவி இவ்வாறு சசிவன்னனது சரித்திரத்தைப் பேய் களுக்குக் கூறி முடித்தா ளென்க.

## சசிவன்ன போத வசனம்

முற்றுப்பெற்றது.

**ஸ்ரீசாது-இரத்தினசற்குரு திருவடி வாழ்க.**

ஓம் தத் சத்
பரப்பிரஹ்மணே நம

# சிவஞானபோத

## பதவுரை.

1. (தேவி பேய்களை நோக்கி) அலகை - பேய்களே, உலகில் - இம்மண்ணுலகத்தில், அகவான்களும் - பாவிகளும், அசசரர் - பிறவி யச்சமொழிய, முத்திபெறும் பரிசு - முத்திபெறு மார்க்கத்தை, ஓதுவாம் - கூறுகின்றோம் (என்றாள்).

2. புணர்ந்த - (ஜீவர்களைத் தொன்று தொட்டுத்) தொடர்ந்து வந்த, பாவமெலாம் - பாவமனைத்தும், (அவர்மீது) பரிபூரண முணர்ந்த - (தம்மைப்) பரிபூரண சிவமாக அறிந்த, ஞானி - ஞானிகளது, விழிபட - விழிப்பட்ட மாத்திரத்தில், ஓடும் - கெடும்.

3. எழிலாரும் - அழகு நிறைந்த, ஞானிபுகழ் - ஞானியின் புகழை, கூறல் - சொல்லுதல், என்னை - எங்ஙனமாம்; உயர்வீடு - உயர்வாகிய மோட்சத்தை, இவன் சொல்வழி - இந்த ஞானியினது உபதேசத்தின் வழியே, செய்தொழிலாளர் - சென்றொழுகினோர், சேர்கை - அடைதல் (கூடும்); அது - அதுபற்றி, முன்னையிதிகாச

மொன்று-பழைய இதிகாசமொன்றை, சொல - (யான்)சொல்ல, கேளும்-(நீங்கள்)கேளுங்கள்.

4. தாபமற்ற-பிறவித்துன்ப மொழிந்த, பானேவல் செய்த-தருபானது குற்றேவலைச் செய்த, அவனுற்ற - அந்தச் சிவ்ஷபன் அடைந்த, பேறு ஆது - மோட்ச சரித்திரமாகிய இவ்விதிகாசம், முன் - முற்காலத்தில், செந்தாமரைக் கண் முதல்வற்கு - செந்தாமரைமலர்போலுங் கண்களையுடைய விஷ்ணுவிற்கு, எம்மண்ணல்-எமது சிவபெருமான், திருவாய்மலர்ந்தது-திருவாய்மலர்ந்தருளிய தாம். தம் - தன் - ஐ - சாரியை.

5. (இவ்விதிகாச) தவமற்று - தவஞ் செய்வ தொழிந்து, வெய்யவினையே புரிந்த-கொடிய தீவினைகளையே செய்து வந்த, சசிவன்னன்-, உவமிப்பில்-(தனக்கு) ஒப்பில்லாத, ஞானி-ஞானியினது, விழிபட்டு - கிருபாநோக்கம் பட்டமையால், முனை வினைவிட்டு - பழவினையினின்றும் நீங்கி, முத்தி யுலகில் - மோட்ச உலகத்தின்கண், எய்து கதை - அடைந்த கதையாகும்.

6. எம் புதுவாருள - காவலடைதற் குரியவராயுள்ள, பாதகரா மியாவர்க்குளும் - பாதகர் யாவருள்ளும், மிக்கவனுகு மிவன் - மேம்பாடுடையவனுகிய இச்சசிவன்னன், நாமம் - (தன்) பெயரை, புகல்வார் குலமும் - கூறுவாரது சந்ததியாரும், எரிவாய் நரகம் - தீவாய்ந்த மாபூதி யென்னும் நரகத்தை, புகுமாறு அடையுமாறு, நடந்தனன் - தீவினைகளைச் செய்து வந்தான்.

7. மலமேவிய - (சசிவன்னன்) அறியாமையின் பெருக்கத்தாற் செய்த, தீவினையின் வலியால் - தீவினைகளினது வலிமையினால், மகிழ் - களித்தற்குரிய, உம்பர் பதத்திலிருந்த - சுவர்க்கத்திலிருந்த, இவன் குலமேவிய - இவனது வமிசத்திற் பிறந்த, தென்புலவாணர்களும - பிதிர்க்களும், கொடிதா நரகம் - கொடிதாகிய நரகத்தில், குடி யேறினர் - குடியேறுவாராயினா.

8. மிகமேவிய - (ஒருவன்) மிகுதியாகச் செய்த, புண்ணிய பாவமெனும் வினையின் பயன் - புண்ணிய பாவமென்னும் இருவினைகளின் பயன், மேலொரு கால முறாது - இனியொருகாலத்தில் வாராது, இகமே வரும் - இவ்வுலகத்திலேயே வரும், என்பதனால் - என்று அறநூல் கூறுவதால், உளநோயெல்லாம் - அநுபவித்தற் குரியனவாயுள்ள நோயனைத்தும், இவனை - இச்சசிவன்னனை, செற - வருத்துமாறு, எய்தின அடைந்தன.

9. தவறற்ற - தீவினைகளைச் செய்த, இவன் - இச்சசிவன்னனை, பெறு - பெற்ற, தந்தை - பாகயஞ்ஞனென்னும் தந்தை, தன்புத்திர னேயம் - தன் புத்திரன்மீதுள்ள அன்பு, விடாமையினால் - நீங்காமையால், உளம் துன்புற்று - சித்தத்தின் கண் துன்பமடைந்து, புதல்வன் துயர் தீர்வகை - தன் புத்திரனது துன்பம் நீங்கும் மார்க்கம், இனி என்னை கொலோவென்று - இனி யாதோவென்று, சுழன்றனன் - கலக்கமுற்றிருந்தான்.

10. (சசிவன்னன்)வினைத்துயர் - தீவினையின் பயனாகிய துன்பத்தை, துய்ப்பதலால் - அநுபவிப்பதல்லாமல், ஒன்றாலும் - (மணி-மந்திரம - மருந்தென்பனவற்றுள்) யாதொன்றாலும், ஒழிவிக்குமுபாயம் - ஒழியச் செய்யும் மார்க்கம், உனக்கிலது - உனக்கில்லை, என்றாலும் - என்று கூறினாலும், அறிந்தவன் - அவன் பட்ட துன்பங்களை யறிந்து வருந்தும் பாகயகனான், அன்பு விடாது - அவன்மீதுள்ள அன்பு நீங்காமையால், இவனைக கொடு - இச் சசிவன்னனை யெடுத்துக்கொண்டு, எங்கணும் - எவ்விடத்திலும், உழன்றனன் - அலைந்து சுற்றிவந்தனன்.

11. மற்று - பின், ஒருமாதவன் - தேவபத்த னென்னும் ஒரு முனிவன், இவன் வேதனை கண்டு - இச் சசிவன்னனடைந்துள்ள கொடுந் துன்பத்தைநோக்கி, ஒழிவற்றுள-நீங்குதலற் றிருக்கின்ற ஒன்றை-ஒப்பற்ற பரம்பொருளை, உளத்துணரும்-தம் முள்ளத்தி லறிந்துள்ள,பரமாகியஞானிகள்-மேலாகிய ஞானிகளது, கண்ணுறலே-கிருபா நோக்கமே, பரமௌடத மென்று - (இந்தநோய்க்கு) மேலாகிய மருந்தாமென்று, பகர்ந்தனன் - கூறினான். (பின்)

12. அந்தமிலாத - முடிவில்லாத, தனைத்தான் தருவான் தன்னைத்தான் உபதேசித்தற் பொருட்டு, சத்தீச்சுர மென்னு மிடந்தனில்வாழ் - சத்தீச்சுர மென்னும் திவ்வியக்ஷேத்திரத்தி லெழுந்தருளியிருக்கின்ற, மாகந்திபாராயண னென்பவன்-மாகந்தி பாராயணனென்னும் முனிவரது கிருபாநோக்கமே, நின் மைந்தற்

குறு நோய்க்கு - உன் புத்திரனை யடைந்துள்ள நோயை நீக்குவ தற்கு, மருந்து - மருந்தாகும், என - என்று சொல்ல. (பின்)

13. இவன் - இப்பாலகனுன், இது - இம்முனிவர் கூறிய விது, முடியா வுபதேசமென்று - எல்லையற்ற உபதேசமாகு மென்று கருதி, அம்முனிவன் பதம்பணிந்து - அந்த மாநந்த பராயண னென்னும் முனிவரது பாதங்களை (வணங்கி துதித்து) அடைந்து, தீக்கொடியான் - தீக்கொடியவனான வனது புத்திரன், வெருவாது - அஞ்சாது, குயிற்றிய - செய்த, நோய் - துன்பந்தரும் கொடுந் தொழில் - கொடிய செய்கை, கூறற்கரியது - சொல்லுதற் கரியதாமென்று, மொழிந்தனன் - கூறினன்.

14. ஈங்கு - இவ்விடத்தில், உன்திரு முன் - தேவரீரது சந்நிதானத்தில், இவனியற்றிய - இவன் செய்த, தீவினை யென்னவெலாம் - தீவினையென்று சொல்லப்படு மனைத்தும், பகருபடியோ - சொல்லத் தக்கனவாமோ, (ஆகா; என்றான்.) நின்மலன் - மலரகிதராகிய மாநந்த பராயண முனிவர், நீங்கும் படி - (அவனது பாவகாரியனைத்தும்) ஒழியும்படி, தன்னநுபூதி யின்றல் - ஆத்மாநுபவத்தினால், கமழ மலர்ந்து விளங்குகின்ற விழி - கிருபாநோக்கத்தை, வைத்தனன் - (அவன்மீது) வைத்தனர்.

15. கணியாத - அளவிடற்கரிதாய, பவம் - பிறப்பென்னும் விஷ நோயை நீக்குவதற்கு, கடுவான - விஷ மருந்தா யிருப்ப தான, திருக்கண் - தமது கிருபா நோக்கத்தை, வைத்தலும்—

(அவா சசிவன்னனமீது) வைத்த வமுவில், காது - அவனை வருத்து, கடும்பிணியானவையும் - கொடுமையா யெல்லாம், விட்டன— அவனைவிட்டு நீங்கின, நலல பிதா - அவனது சிறந்த தந்தை (சசிவன்னனை நோக்கி), இறைதாள இம்முனிவரது திருவடிகளை, பேணிப் பணியென்று - அன்புற்று வணங்கி யிருக்கக கடவாயென்று (கூறி), பெயார்ந்தனன - (அவனை விட்டுச்) சென்றனன்.

16. ஆவன்-அச்சசிவன்னன், இடமனை முதலாக-ஸ்தானமே முதலாக (உள்ள குரு பணிவிடைகளை), உவந்து - (செய்ய) விரும்பி, இறையோன் - தனது குருமூர்த்தியாகிய மாதங்கி பாராயண முனிவா, வவுப்பணிசெய்து-கட்டளை யிடுகின்ற பணிவிடைகளைசெய்து, சிலநாள் - சில நாட்களில், உடனே - உத்தபசிஷ்யருடனே, அவனும் - இச்சசிவன்னனும், அத்திருமேனி தனக்கு- அம்முனிவரது திருமேனிக்கு, உரியானென - உரியவனென்று கூறும்படி, உம்பனெடே - அம்முனிவருடனே, உற்றனன் இருந்தனன்.

17. (சசிவன்னன்), நன்று - செவ்வையாக, முனி - அம்முனிவரது, தாள் வழிபாடதனல் - திருவடித்தொண்டைச் செய்து வந்தமையால், நாநா விதமான பிறப்பினை விட்டு - பலவிதமான பிறப்பினின்றும் நீங்க, ஒன்றாகிய வீடு - ஏகவடிவாயுள்ள மோட்சத்தை, உணா உத்தமர்கட்கு-உணர்ந்தடையவிரும்பும் உத்தமர்களுக்கு, உள சாதன நான்கும்-உரியனவாயுள்ள சாதன நான்கும், உதித்தன - அவனுக் குண்டாயின.

கடந்த, ஆழம் - ஆழத்தை, அறிய - அறிவதற்கு, அரியது - அருமையுடையதாக விருப்பது, களவு நெருங்குபாரும் - கள வென்னும் நெருங்கிய தரையையும், மலையும் - மலையையு முடையது-, கலகம் - கலகஞ் செய்தலென்னும், விடங்கள் மலிவும் - விடங்கள் நிறைந்த, கிருமி - புழுக்கள், நெளிவது - நெளிவன வாக விருப்பது.

24. துகளெனும் - குற்றமான செயல்களைச் செய்வதென் னும், ஈனமில்லாத - ஈனமைத் தருவதில்லாத, நுரைகள தருவது - நுரை களைத் தருவது, இன்பமான - இன்பத்தைத் தருவதான, துற வெனும் கரையை - துறவறமென்னுங் கரையை, அகழ்வது - தோண்டி யழித்துக்கொண் டிருப்பது, மகளிரெனும் - பெண் ணாசையென்னும், தவாத - கெடாத, வலிய சுழியது - வலிய சுழல்களை யுடையது, மறலியும் - யமனும், அஞ்சு - அஞ்சுதற் குரிய, கோபவடவை - கோபமென்னும் வடவாமுகாக்கினி, எரிவது - எரிந்துகொண்டிருப்ப விருப்பது.

25. வெருவருகின்ற - அஞ்சத்தக்க, போகமுதலை - போக மென்னும் முதலைகளை, உடையது - உடையதாகவிருப்பது, விவி தம் - பரஸ்பரம் ஒவ்வாதுள்ள, அநந்தமான - பற்பல விதமான, துறையமுடையது - துறைகளையுமுடையது, ஒருவர் - ஒருவரா வது, கடந்துபோக - தன்னைக் கடந்துபோவதற்கு, விரகில் — சாதனமில்லாதிருப்பதாம். எழுபவ உததி - இவ்வெழுவகைப் பிறப்பென்னுங் கடலின் தன்மையை, விளம்ப - சொல்ல, உல கில் - உலகத்தில், யாவர் அறிவர் - எவரறிவர்.

26. அதில் - அப்பிறவிக் கடலில், பொறிவழி - இந்திரியங்களின் வழியே, சென்று மீளும் - விஷயங்களிற் சென்று திரும்பும், அவலங்கொடு - கிலேசபுத்தியைக்கொண்டு, பொரு - வாதமிடுவோர் செய்கின்ற, சமயங்களாறும் - மதவாதிகளறுவரும், மடிவுழி - தலைகீழாக விழுந்துகிடப்பர், அறிவு - தத்துவ விசாரத்தால், அழிவு ஒன்றிலாத பொருள் - அழிவென்பது சிறிது மில்லாதபொருள், இதனை - இதுவென்று(உணர்ந்து), ஊன் - அதனோ டுளதாகிய, அநுபவ வங்கமேறி - சுவாநுபவமென்னும் மரக்கலத்தின் மேலேறியுள்ள, அறிஞர் - விவேகிகள், அகல்வர் - அக்கடலைக் கடப்பர்.

27. நாதன் - அம்முனிவர், புணரி கடந்துபோக - பிறவிக்கடலைக் கடந்துசெல்வதற்கு, விரகு இல் - யாதொரு சாதனமு மில்லை, என மொழி பொழுது - என்று கூறிய போது, புதல்வன்-(அதனைக் கேட்ட) சசிவன்னன், புலம்பி-அழுது, ஆவி யிறு முனம் - மூர்ச்சை யடைவதற்கு முன்னே, உணர்வெனும் வங்கமேறும் - தத்துவஞான மென்னும் மரக்கலத்திலேறிய, அறிஞர் - விவேகிகள், அகல்வரென்று அதனைக் கடப்பரென்ற, உரையை வழங்கி - நல்லுரையைக் கூறி, உவகை தருள - அவனுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்க.

28. அவன் - அச்சசிவன்னன், இறைவனடி - அம்முனிவரது திருவடிகளை, வாழியெனத் தொழுது - தேவரீர்(எப்போதும்) வாழவேண்டுமென வணங்கி, வருபவமாம் ஆழியினை - என்னை

விடாது தொடர்ந்து வருகின்ற பிறவிக் கடலை, அகலு மறிவு-கடப்பதற்குரிய ஞானத்தை, அருளுகவென - உபதேசித்தல் வேண்டுமென்று (பிரார்த்தித்தனன்).

29. (அதற்கம்முனிவர்) நிரவறிவை யறியுமவர் - ஸ்திர வறிவென்னும் பிரஹ்மத்தை யுணர்ந்த ஞானிகள், தெளிவுற - தெளிவாக, (அறிவு), பர அறிவு எனவும் அபர அறிவு எனவும் - பர அறிவென்றும் அபர அறிவென்றும், இரு பரிசாம் - இரு வகைத்தாக விருக்கின்றது, (என்றதனை), மொழிவர் - கூறுகின்றனர்.

30. அபர உணர்வு - அபர அறிவாவது, அருமறைகள் முதலகலை கலையும் - உணர்தற்கரிய வேத முதலிய சகலர்த்தச வித்தைகளின் ஞானமாம், பர உணர்வு - பர அறிவாவது, உபரமதை - அந்தப் பிரஹ்மத்தை, அற - செவ்வையாக, உதவும் - அறிதற்குச் சாதனமாயுள்ள, உணர்வு - ஞானமாம்.

31. புராணம் இதிகாசம் எவையும் - புராணம் இதிகாச முதலிய சாஸ்திரங்களினது, பொருள் அனைத்தின் - பொருள்க ளெல்லாவற்றின், பிராணன்-பிராணனை, அறியாதுளவிடத்து- அறியாதுள்ளவிடத்து, இவை - இவற்றைப் படித்தல், பிதற்று- பிதற்றலாக முடியும்.

32. ஆகம விதங்கள் அறிவார் - சுருதி ஸ்மிருதி முதலிய ஆகமங்களின் பலவிதமான அர்த்தங்களையும் அறிபவர், அபர

றிவார் - அபர அறிவு உடையவராவர், யோகமொ டிறங்குபவர் - யோகநித்திரை செய்பவர், பரமுணர்ந்தார் - பர அறிவு உடையவராவர்.

33. இயலறிவது - இயற்றமிழினியல்பை யறிவது, இசையறிவது - இசைத்தமிழி னியல்பை யறிவது, ஞானமறிவது - ஞானத்திற்கு ஞானமாயுள்ள நாடகத்தமிழி னியல்பை யறிவது, என அறிவு மூன்று வகையதாம், உளது - இருக்கின்றது, அயலறிவதாம் - (அவ்வறிவு) அயலை யறிவதாம், (அதனுடைத்து), அறிவதல - அறிவாகா, அறிவறிந்த அறிவை (ஆத்மாவை) அறியா அறிவே, அறிவு - (உண்மை) அறிவாம்.

34. நவிலும்-வழங்கப்படுகின்ற, கலை அறுபத்து நான்கும் - அறுபத்துநான்கு சாஸ்திரங்களின் பொருள்களையும், அறிவாரும் (தெளிவாக) அறிந்திருப்பவரும், பவம் - உற்பத்தியும், லயம் நாசமும், அறு - அற்றுள்ள, சுத்தபரம - சுத்தப் பிரஹ்மத்தை, அறியார் - அறியமாட்டார். அது - பகுதிப் பொருள் விகுதி.

35. ஆகவறிவாளர் - தேகமே நானென்னும் ஞானமுடையவர், இவையனைத்தும் - இந்தச் சாஸ்திரங்களை யெல்லாம், அறிவார் - அறிதற்குரியவராவர், ஏகவறிவாளர் - ஏகமே (ஒன்றாகிய சிவமே) நானென்னும் ஞானமுடையவர், இவையாவும் - இந்தச் சாஸ்திரங்களையெல்லாம், அறியார் - அறிவொழிந்திருப்பர்.

36. மெய்யறிவிலாதவர்கள்-மெய்யுணர்வில்லாதவர், ஐயறிவறிந்து - ஐந்தாகிய வுணர்களின் னியல்பை யறிந்து, அவை அவ்வுணர்கள், அடங்கினவரேனும் - (தாமடையத்தக்கனவாக) அடங்கப் பெற்றவராக விருப்பாராயினும், வீடுபேறு - மோட்சத்தை யடையமாட்டார்.

37. தமில் வேறு எல்லாம் - தமக்கு வேறாக (இருப்பனவற்றை) எல்லாம், அறிவது-, மெய்ம்மை யறிவல்ல - மெய்யறிவன்றாம், தம்மை - ஆத்மாவை, அறியு அறிவே அறியும் அறிவே, அறிவு - மெய்யறிவாம்.

38. பூசனையும் - பூசை செய்யும் விதத்தையும், அது - அப்பூசை (செய்தற்குரிய), சகல பொருளும் - சகல பொருள்களையும், அறிதமையும் - அறிந்துள்ள தம்மையும், ஈசனையும் - (அப்பூசையை யேற்றுக்கொள்ளுதற்குரிய) பரமேசுவரனையும், வேறது அற - வேற்றுமை யொழிய, அறிவதே அறிவு - அறிவதே யறிவாம், என - என்று கூற. (சிவன்னன்)

39. தானெனும் - (யாவரும்) தானென்று வியவகரித்தற்குரிய, இது உடம்பினைத் தவிர - இவ்வுடம்பினைத் தவிர, வேறு - (இதற்கு) வேறாக, யானெனுமருத்தமுளதோ - யானென்று கூறுவதற்கிசைந்த பொருள் இருக்கின்றதோ, (இருந்தாலதனை), அருளுக - கூறல்வேண்டும், என - என்று வினவ. (முனிவர்பிரான்)

40. (அறிவிலான்) எனதாடை - என்னுடைய ஆடை, பொன் - (என்னுடைய) பொன், பூ (என்னுடைய) பூமி, மகன் - (என்னுடைய) புத்திரன், மையல் - (என்னுடைய) மனைவி, பாய்பரி - (என்னுடைய) தாவிச் செல்லும் குதிரை, இபம் - (என்னுடைய) யானை, (என்று கூறுவது போல), கண் - (என்னுடைய) கண், முகம் - (என்னுடைய) முகம், கால் - (என்னுடைய) கால், கை - (என்னுடைய) கை, மெய் - என்னுடைய) உடம்பு, என்ன - என்று, (அவற்றை), என்றும் - எப்போதும், வகுத்து - வெவ்வேறாகப் பிரித்து, தனதா புரைப்பான் - தன்னுடைய பொருளாகக் கூறுகின்றான், அல்லவா? அதனால்), இந்த யூனை - இந்தத் தேகத்தை, அயர்த்தும் - மறந்தாயினும், தானென்று - ஆத்மாவென்று, சொல்லத்தகாது - சொல்லுதல், அன்று - கூடாது.

41. தாள் - காலிரண்டும், உருளாழியாக - உருண்டு செல்லும் சக்கரங்களாகவும், வெந்நில் - முதுகில் (உள்ள), வீணை தண்டு - வீணைதண்டம், ஆராக - ஐந்துரு ஆணியாகவும். வண்மார்பு - வலியமார்பு, தட்டாக - தட்டாகவும், காளாமலர்ச் சென்னி - அன்றலர்ந்ததாகிய மலர்மாலையைத் தரித்த தலை, மொட்டா - சிகரமாகவும், கூந்தல் - (தலை) மயிர், கொடி - கொடியாகவும்(உடைய), தேர் - (இத்தேகமென்னும்) தேரானது, நாள் நாளும் - ஒவ்வொருநாளும், ஊர்வானின் - தன்னை நடத்தும் புருஷனிலும் (ஆத்மாவிலும்), வேறாகவே - வேறாக

விருப்பதாகவே, நாடு - (அதனை நீ) ஆராய்ந்தறியக் கடவாய் வெருநல வீணைதண்டு முதுகெலும்பு

12 ஒருத்தன் கட்கு குஞ்சரப் பண்ணி ஒருவன் மத பானை யொன்று செய்து உள் நின்று அதனுள்ளே தானி ருந்து (கொண்டு) கை பாதங்களைக் கொண்டு (அதனது) துதிக்கை யையும் கால்களையும் காதுகளையும் வெளிப்பட - வெயபான யானை (தனது) துதிக்கை முதலிய உறுப்பை யியங்கச் செய் வது) போல, இயக்கும் - இயக்கச் செய்கின்றன நடத்த விட்டது - (அவனதனை) இயக்காதம்பாது கிடக்கும் (அப் பொய்யானை உறிமேல்) கிடப்பதாம், (அங்ஙனமே) இவ்வுடம் பும் இந்தவுடம்பும் ஒருத்தன் - ஒருவன் (ஆதமா) நடத்தா விட்டது - (தனனை) இயக்காதம்பாது கிடக்கும் (வறிமேல்) கிடப்பதாம் இயக்குதல் அசைபச் செய்தல்

13 மலஞ்சேர்ந்திடப்பட்ட மலங்கள் கூடிய பிறப்புடைய உடல் உடம்பு இழிக்கும் - (அறிவுடையான்) அருவருத்தற் குரியதாக விருக்கின்றது உண்டாறவனனம - (அவ்வுடம்பு) உண்டு சிரணமான ஆகாரம் (மூன்றுபாகமாகின்றது அம் மூன்றனுள்), ஒருகூறு - ஒருபாகம், மலமாகும் - மலமாயமை கின்றது, ஒருகூறு - மற்றொரு பாகம், உடம்பாம் - உடம்பா யமைகின்றது, ஒருகூறு - இன்னொரு பாகம், மனமாம் - மன மா யமைகின்றது, (இம்மூன்றனுள்), இருகூறும் - உடம்பு மனமுமாகிய இரண்டுபாகமும், நீயாகில் - நீயாயின், ஒரு

கூறும் - (மலமாகிய) மற்றொரு பாகமும், நீயாம் - நீயாதல் வேண்டும்.

14. கிளர் - மிக்க, ஆதரத்துண்ணும் - விருப்பத்துட னுண்ணுதற்குரிய, அன்னம் - அன்னமானது, சுட—, கை - (அதனைக்) கையால், கிட்ட - தொட, பொழுதே - சமிககா மமே, இருந்தார் - இருந்தவர், கிடந்தார் - (நோயால் படுக்கை யிற்) கிடந்து, உறுப்பு - அவயவங்களுள், ஒன்றும்-, தளராது - குறைபடாது (இருக்க), உயிர் போக - உயிர் நீங்க, அன்றே - (உயிர்நீங்கிய) அப்போதே, தருப்பள்ளி மீது - (இடுகாட்டில்) அக்கினி சயனத்தின்மீது, சுகித்து . (அவ்வக்கினியைச்) சகித் துக்கொண்டு, துயின்றார் - நித்திரை செய்கின்றனர்.

15. நிழற்பாவை - (ஒருவனது உடம்பின்) நிழல் வடிவ மும், கண்ணாடியிற் பாவை - கண்ணாடியில் தோன்றும் பிரதி பிம்ப வடிவமும், கைகால்-கையையும் காலையும், நிமிர்க்கும் முடக் கும் - நீட்டும் முடக்கும், எல்லாம் - அத்தொழிலெல்லாம், இவன் செய்யும் - இவன் செய்கின்ற, தொழிற் பாலவாம் - தொழில்களால் நிகழ்வனவாம்; (அதுபோல), இவ்வுடலஞ் செய் தொழிலும் - இவ்வுடம்பு செய்கின்ற தொழில்களும், சுடர் - (மாறாத) விளங்குகின்ற, ஞான வடிவானவன் - ஞான வடிவ மாயுள்ள புருஷன் (ஆத்மா), செய்த தொழிலே - செய்கின்ற தொழில்களால் நிகழ்வனவாம்.

46. அறிகின்ற பொருள் - அறியப்படும் பொருள்கள், என்றும் - எப்போதும், அறிவானில் - (தம்மை) அறிகின்றவனிலும், வேறேயாதலால் - வேறாகவே யிருப்பன வாயின், இவ்வாறுமை - (ஆத்மாவா லறியப்படுவதா யுள்ள) இம்மாமிச வடிவ வுடம்பை, நானென்னலாமோ - நானென்று (ஆத்மாவென்று) கூறுதல் பொருந்துவதாமோ, புள் - பறவைகள், செறிகின்ற கூடு - வசிக்கின்ற கூடுகள், அல்ல - (அப்பறவைகள்) அன்றும், இவ்வகையே - இங்ஙனமே, செடமானவுடல் - வடிவமாயுள்ள வுடம்பும், தின்னில் வேறென்று - உன்னிலும் (ஆத்மாவிலும்) வேறாகவே யிருக்கின்றதென்று, தெளி - தெளிவா யறியக் கடவாய்.

47. ஐம்பூதங்கள - பஞ்சபூதங்களின், உருவம்ஆன - காரியமாயுள்ள, இந்தவுடலம் - இந்த வுடம்பு, சடமாம் - சடவடிவமாயிருப்பதாம், இதில் - இவ்வுடம்பில், வற்றன்றல் (எல்லாம்) - கடினமா யிருக்கும் பகுதியெல்லாம், நிலமாகும - பிருதிவியின் காரியமாம், நெகிழ்கின்றல் (எல்லாம்) - நெகிழ்ச்சியா யிருக்கும் பகுதியெல்லாம், நீராம் - அப்புவின் காரியமாம், ___வெல்லாம் - சுடுந்தொழிலை புடையனவா யிருக்கும் பகுதியெல்லாம், நெருப்பாம் - தேயுவின் காரியமாம், சலனம (எல்லாம்) - சலனமாயுள்ள பகுதியெல்லாம், அநிலம் (ஆம்) - வாயுவின் காரியமாம், புரையான (எல்லாம்) - புரையாயுள்ள பகுதியெல்லாம், வான் (ஆம்) - ஆகாயத்தின் காரியமாம்.

48. விழியை - கண்ணிந்திரியத்தை, புமானென்னில் - புருஷனென்று கூறினால், ரவியாதியாலே - (அது) சூரியன் முதலிய வொளிப்பொருள்களாலே, விளங்கின்றதல்லால் - விளங்குகின்றதல்லாமல், விளங்காமையாலே - (தானே) விளங்கா திருத்தலாலே, (புருஷனன்றாம்), ஒழியப்படும் - கண்ணிந் திரிய மொழிந்த, ஏனைமுதனைக்கும் - காதிந்திரிய முதலிய நான்கையும், உருக்கண்ட - உருவத்தை யறிகின்ற, உன்றன் கண்டன்னே - உனது கண்ணிந்திரியத்திற்கு, ஒப்பாக - சமான மாக, உன் - கருத்துக்கடவாட (புருஷன் - ஆத்மா.)

49. உண்பொருள்களில் - (ஒருவன்) உண்ணுதற்குரிய அன்னபான முதலிய வுணவுகளை, அழல் - உதராக்கினி யால், உண்பவை - சீரணமானவை, முக்கூறு - மூன்று பாக மாம், அதில் - அம்மூன்றுபாகத்தில், முதற்கூறு - முதற்பாகம், அணியென்பு (ஆகும்) - அழகிய வெலும்பாம், நடுக்கூறது - நடுப்பாகம், மச்சைக் கணியாகும் - மச்சைக்கு ஆதாரமாம், எழில்கொண்ட - அழகைக் கொண்ட, கடைக்கூறது - கடைப் பாகம், வாக்கா மெழுமென்று - வாக்கிந்திரியமா யுண்டாகின்ற தென்று, இயல் - (அநாதியாக) நடைபெற்று வருகின்ற, நான் மறையந்தங்கள் - நான்கு வேதங்களின் முடிவாயுள்ள உபநிட தங்கள், இசைக்கின்றன - கூறுகின்றன.

50. உண்ணும்புனல் - (ஒருவன்) குடிக்கின்ற நீர், முக று -(சீரணமாயபோது) மூன்று பாகமாம், அதில் - அம்மூன்று

பாகத்தில், முதற்கூறு - முதற்பாகம் உவாந்திரம் - மூத்திரமாம், நடுவிற் கூறு - நடுப்பாகம், உதிரம் (ஆம்) - இரத்தமாம், கடைக் கூறு - கடைப்பாகம் பிராணன் (ஆம்) - பிராணவாயுவாம் எண்ணுங்கிடில் - எண்ணுதற்குரிய ஆம் மூன்றனுள் இரு கூறவை - இரண்டு பாகங்கள், நீ யாயிடினன்றே - நீயானு லல்லவா, இறுகின்ற - நசித்தற்குரிய, பிராணனனது பிராண வாயுவும், நீயாகுவை - நீயாவாய் இதை (இக்கூறுபாட்டை பர்யாலோசித்துக்) கூறக்கடவாய்

51. துஞ்சில் - (நாம்) உறங்கும்போது, உணர்வின்மை யால் அறிவில்லாமையாலும், உணரும் - (விஷயங்களை) அறி யும் புலன்களொழிவால் - இந்திரியங்களின் சம்பந்தம் நீங்கி யிருப்பதாலும், பிராணனும் - பிராணவாயுவும், அல்ல - ஆத்மா வன்றாம், அஃதுபிராணனென்னின்-(உறங்கும்போது) அந்தப் பிராணவாயுவின் வியாபாரம் இருந்தற்குக் காரணம் யாதெனின் நகரூஉ வலஞ்செய்பொழுது-(அரசனொருவன் தனது)நகரத்தைச் சுற்றி வலஞ்செய்யும் பொழுது, சேனை - (அவனது) சேனை மன்னை - அவ்வரசனை ஒழியாது - விடாது சூழ்ந்திருக்கின்றது (அதுபோல, ஆத்மவரசன் தனது புரத்திரயத்தைச் சுற்றி வலஞ் செய்யும்பொழுது அவனது சேனையாகிய பிராணவாயு அவனை விடாது சூழ்ந்திருக்கின்றதென்பது துணிக)

52. கரணமொடுங்க - சுரோத்திர முதலியன வொடுங்கி நிற்கவும், வாயு - பிராணவாயு, நிகழ்வனகொ லென்னின் -

உச்சுவாச நிச்சுவாசங்களைச் செய்திருத்தற்குக் காரணம் யாதென்று விளைவுவாயாயின், உடல் காவலாகும் - (பிராணவாயு உறங்கு கின்றவனது) உடம்பிற்குக் காவலாக விருக்கின்றது, இலதேல் - (பிராணவாயுவின் காவல்) இலதாயின், (அவ்வுடம்பை), மரண மடைந்ததென்று - மரணமடைந்து விட்டதென்று, தமர் - (அவனது) சுற்றத்தார், சுட்டிடாமுன் - சுடுவதற்கு முன்னே, வளைவாலன் - வளைந்த வாலையுடைய, ஞாளி-நாய், கொளும் (தனக்கு ஆகாரமாகக்) கொண்டுவிடும்.

53. இனமுற - (ஞானேந்திரிய பஞ்சகமுதலிய தத்துவங்களாகிய) இனமாக, எண்ணவுள்ள - எண்ணவிருக்கின்ற, காரணத்தில் - அந்தக்கரண சதுஷ்டயத்துள், ஒன்று - ஒன்றாயிருப்பது, ஆது எனலால் - ஆம்மனமென்று சொல்லப்படுவதாலும், இது என்னதெனலால் - இஃது என்னுடைய மனமென்று சொல்லப்படுவதாலும், முனம் - முன்பு, மனம் - மனமானது, அன்னமென்றவதனாலும் - அன்னத்தின் காரியமாமென்று கூறிய வதனாலும், அல்ல - (மனம் ஆத்மா) அன்றாம், அந்த வகையே - அந்தப்பிரகாரமே, மதி - புத்தியும், அல்ல - (ஆத்மா) அன்றாம்.

54. இடரின்புளதாய் - துக்கத்தையும் சுகத்தையும் தந்து கொண்டிருப்பதாயும், நிலையற்று - நிலைபெறுவதின்றியும், அறிவற்று - அறிவில்லாதும், எண்ணும் - எண்ணுதற்குரிய, காரணங்களில் - அந்தக்கரண சதுஷ்டயத்துள், ஆய் - ஒன்றாயும், எவரும் - யாவர்க்கும், அடரும் பிறவிக்கு அடி (ஆய்) - நெருங்கிய

பிறவி வருவதற்குக் காரணமாயும், (உள்ளது), என்றுணரும் - என்றறியத்தக்க, அகங்காரமும்-, நீயல - நீ (ஆத்மா) அன்றாய், என்றறி - என்றுணரக்கடவாய்.

55. ஓர் பொருள் - யாதாவதொரு பொருளினிடத்து, ஐயப்படல் - (இதுவோ அதுவோ என்று) ஐயமுறுதல், (அதனை), நிச்சயமாயறியப்படல் - நிச்சயமாக வறிதல், யானெனமதென்று மதஞ் செய்யப்படல் - யான் எனமதென்று அபிமானங் கொள்ளுதல், (என்னும் மூன்றினையும்), செய்வது -, சிந்தனையாம் - சித்தமாம், சித்தம் - சித்தமும், அதுவன்றென - அஃதாத்மாவன்றென, நீ தெளி - நீ தெளிவாக வறியக்கடவாய்.

56. நின்மலன் - மலரகிதராய் விளங்கும் முனிவர், உடம்பது முன்னாக - தேகம் முதலாவதாக, சித்தமது - சித்தம், முடிவாக - ஈறாவதாக, மொழிந்த - கூறிய, பொருள்திரள் தான் - விடயக் கூட்டங்கள், நீ யறியும்பொருளாய் நிகழ்கின்றதனால் - நீ யறியும் பொருளாக விளங்குகின்றமையால், நின்னுருவில - உனது யதார்த்த வடிவமாகாவாம், என - என்று கூற, (சசிவன்னன்).

57. உன்னாலறியப்படு மியாவையும் - உன்னாலறியப்படும் பொருளனைத்தும், உன்னுருவன்று - உனது யதார்த்தவடிவமன்றாம், எனவோதினை - என்று கூறினீர், எனக்கு ஒக்கும் - அஃது எனது அநுபவத்திற்கு ஒத்திருக்கின்றது, (ஆனால்,) யானுருவது -

யாமென்பது, என்றுமறியாததாகிய பொருளோ - என்னாலறி யப்படாதொழியும் பொருளோ, என்றனன் - என்று வினவினன். என்றதும் - என்றதனைவம். (முனிவா)

58. அறியாப்பொருள் - சுட்டி யறியப்படாத பொருள், காரணமாயை - (உலகத்திற்குக்) காரணமாயுள்ள மாயையாம், குறிக்கப்படும் பொருள் - சுட்டி யறியப்படும் பொருள், காரியமா மூலகு - காரியமாயுள்ள உலகம், ஒருங்கெறியால் - இம்முறை யால், நிகழ் - விளங்குகின்ற, நான்மறை யந்தமெலாம் - நான்கு வேதங்களின் முடிவாயுள்ள உபநிடதமனைத்தும், நிரந்தரம் - எப்போதும், நீ - நீ (ஆத்மா), அன்றெனை - (இவ்விரண்டும்) அல்லவென்று, ஓதும் - கூறுகின்றன.

59. அறிவாகிய நீயெனு மப்பொருள் தான் - அறிவே வடிவமாகவுள்ள நீ யென்னும் அந்தப் பரம்பொருள், அறியும் பொருளன்று - சுட்டி யறியப்படும் பொருளாகிய வுலகமுமன் றாம், அறியாப் பொருளன்று - சுட்டி யறியப்படாத பொருளா கிய மாயையுமன்றாம், (அந்தப் பரம்பொருள்), பொறியின் வழி நின்று - இந்திரியங்களின் வழியே (மனம்) நின்று, அறியும் பொருளோ - அறியும் பொருளாமோ, (ஆகாதாம், ஆனால்,) போதக்கண் - ஞானக்கண், விழித்து - விழித்துக்கொள்ளுமா யின் (அதனால்), அறியும் பொருள் - அறிதற்குரிய பொரு ளாம்.

60 இது (கூறிய) இது வேதப்பொருள்தான் - [illegible]கத்தின் நிச்சயமான பொருளாம் வேறு சொலும் - ([illegible]) வேறாகச் சொல்லப்படும் வினையாவையும் கருமமனைத்தும் அன்று (அந்தப் பரம்பொருளை யறிவதற்குக் காரணமாகல்) இல்லையாம் ஒரு வேறுமில்லா அந்தப் போதப்பொருள் - ஒரு வேற்றுமையுமில்லாதுள்ள அந்தத்திருக்கூடப்பொருள், மறைக்கு வேதத்திற்கு அணியாம் (சிறந்த) ஆபரணமாக விருப்பதாம் புனிதப் பொருள் சுத்தப் பிரமமாம் தத்வமசிப் பொருள் தத்துவமசியென்னும் மகா வாக்கியத்தின் பொருளாம்

61 (தத்துவமசி மகாவாக்கியத்துள்) அது வென்னும் பொருள் அது (தத்) என்னும் பதத்தின் பொருள், [illegible] பாய மலாங்கிதமாயுள்ள பரம்பொருளாம் (ஈசனாம்), நீ யென்னும் பொருள் நீ (துவம்) என்னும் பதத்தின் பொருள், சீவனை சீவனாம், அசிபதப்பொருள் - அசியென்னும் பதத்தின்பொருள், அமலமான - மலாங்கிதமான, இரண்டையிக்கம் இவ்விருபொருள்களின் ஐக்கியம், ஆவது ஆவதாம் (என, சசிவண்ணன்)

62 அருமையாகிய - (காண்பதற்கு) அருமையாயுள்ள, பிரமம் பிரஹ்மம், (சீவனுக்கு), முன்னிலை யாகும் - முன்னுள்ளதாக விருக்கின்றது, ஆரூபி - வியாபகமாயுள்ள சிவன், (பிரஹ்மத்திற்கு), பின்னிலை (ஆகும்) - பின்னுள்ளதாக விருக்கின்றது, இருமையான - (இவ்வாறு) இரண்டாக

விருக்கின்ற, இரண்டயிக்கியம் - (பிரஹ்மம் சிவ னென்னும்) இரண்டற்கும் ஐக்கியம், எயதுமாறு - உண்டாகும் விதம், எவன் - எங்ஙனமாம், என்னவே - என்று வினவ, (அம்முனி வா).

63. உபாதியில் வரு பேதமே - (காரண காரிய வடிவ) பாதிகளா லேற்பட்ட பேதமே, இவா - (பிரஹ்மம் சிவனென்னும்) இவர்க்கு, பேதம் - பேதமாக விருக்கின்றது, அன்று - (உண்மையில் பேதம்) இல்லை, உற - (இவ்வாறு பேதம்) அடைந்துள்ள, உயிரினின்-சீவனுக்கு, உபாதியா முடல்போல-சுப முதலியவற்றை யுடைய தேசம (உபாதியா யிருப்பது) போல, இறைக்கு - ஈசுவரனுக்கு, காரணாதிகள் - சாவ காரணத்துவ முதலியன, காயம் - உபாதியாய், உள - இருக்கின்றன.

64. ஈசன் - சர்வேசுவரன், முற்றறிவான் - சர்வஞ்ஞன், வியாபி - சாவாந்தரியாமி, எவைக்கு மேது - எல்லாவற்றிற்குய (சர்வ) காரணன், இயம்பும் - (சிறப்பித்துச) சொல்லப்படுகின்ற, பாகாசகன் - சர்வஸ்திதி, நிருபாதி - சாவ சங்காரன், பாவனை சாவ சிருட்டி, (என்பன), காரணாதிகளாவதே - காரணாதிகளாவனவாம். (இவ்வேழும் ஈசனுக்குக் காரண வுபாதியாம்).

65 நீதியால் - (பெரியோர் கூறிய) முறைமைப்படி, இரு உபாதி - (காரிய - காரண மென்னும்) உபாதி யிரண்டினையும், நீக்கிட - நீக்குதற் பொருட்டு, (தத்துவமசி மகாவாக்கியத்தில்),

நீயெனச் சொல் - நீ (துவம்) என்று சொல்லப்படுகின்ற, பதத்திலும் - பதப் பொருளிலும், ஆதியாகிய - (அவ்வாக்கியத்தில்) முதலிலிருப்பதாகிய, தத் பதத்தும் - (அது வென்று சொல்லப் படுகின்ற) தத்பதப் பொருளிலும் (உள்ள), அசுத்த சுத்தம் அசுத்தத்தையும் சுத்தத்தையும், உரைத்தும் - (யாம்) கூறுகின்றோம்.

66. ஆகமுன் - தேக முதலாக, திகழ் - விளங்குகின்ற, ஏழும் - ஏழு பொருள்களையும், நாமெனல் - நாமென்று கொள்ளுதல், துவம் பதத்தின் அசுத்தம் - துவம்பதப் பொருளின் அசுத்தமாம், நான் - (இவற்றிற்கு) நான், சோக மின்றிய - சோகமில்லாத, சான்று - சாட்சி, எனல் - என்று கொள்ளுதல், துவம் பத பொருள் சுத்தம் - துவம்பதப் பொருளின் சுத்தமாம்.

67. அகில காரணமாதி - சாவகாரணதத்துவ முதலிய ஏழு பொருள்களையும், நாமெனல் - நாமென்று கொள்ளுதல், தற்பதத்தின் அசுத்தம் - தற்பதப் பொருளினசுத்தமாம், சகல காரணம் - சாவகாரணத்துவம் (முதலியவற்றிற்கு), நான் சான்றெனல் - நான் சாட்சியென்று கொள்ளுதல், தற்பதப் பொருள் சுத்தம் - தற்பதப்பொருளின் சுத்தமாம்.

68. செறிந்த - (பரஸ்பரம்) நெருங்கியுள்ள, காரண காரியங்கள் - காரண காரிய வுபாதிகள், சிதைந்து - (தத்துவ ஞானத்தால்) கெட, மேலுறு - (அவற்றிற்கு) மேலாகப் பொருந்தியுள்ள, சித்ததாய் - சின்மாத்திரமாகி, அறிந்த (அறிவும்) வாசனைதானும்-

யான சின்மாத்திரமாக விருக்கின்றேன் என்று தன்னை) அறிந்தவறிவு (அதன) வாசனையும், அற்றது - ஒழிந்துள்ள நிலை, அவ்வசிபதப் பொருளாவது அவ்வசிபதத்தின் பொருளாம்.

69 விமலர் - மோகமற்ற பெரியோர், ஆருபதத்தினும் தத்துவ மென்னும் மிரண்டு பதங்களிலும், முக்கியப் பொருளாவது - முக்கியார்த்தமாயிருப்பது, அசுத்தமாகியது - அசுத்தமாயிருப்பதாம், இலக்கியப்பொருள் (ஆவது)-(அப்பதங்களின்) இலக்கியார்த்தமா யிருப்பது, விசுத்தமானது சுத்தமா யிருப்பதாம், என்று சொல்லுவர் என்று கூறுகின்றனர்

70 முரண்ட - (தம்முள்) மாறுபட்டுள்ள, சீவபரங்கள் தம - சீவேசுவரர்களது, உடல - (காரியோபாதி - காரணோபாதி யென்னும்) உடம்பு, முக்கியப் பொருளாவது - (தத்துவம் பதங்களின்) முக்கியார்த்தமா யிருப்பதாம், இரண்டில - இவ்விரண்டு உபாதிகளிலும், வேறு-வேறுமையற்றவிளங்கும், சிற சொரூபம - சின்மாத்திரப் பொருள், இலக்கியப் பொருளாவது - (அப்பதங்களின்) இலக்கியார்த்தமா யிருப்பதாம்

71 அப்பர சீவர் தங்கள் - அந்த பர (ஈச) சீவர்களது, உடம்பிரண்டும் - உடம்பாகிய உபாதியிரண்டையும், இலக்கணை வாக்கியப்படி-இலக்கணை வாக்கியத்தின் கிரமப் பிரகாரம், ஊக்கி-ஆராய்ந்து, நீக்கிலல-நீக்கிநோக்கினால், பரவத்து - பரம்பொருள்,

ஒருவத்துமே - ஒருபொருளே (ஆக விளங்குவதாம்). இலக்கண வாக்கியம் - தத்துவமசி மகா வாக்கியம்.

72. உணர்வுளோர் - நூலுணர்வுடையவர், ஓரில் - ஆராயுமிடத்து, தேர் - தேர்ந்தறிதற்குரிய, இலக்கணை - இலட்சணையானது, விட்டதும் - விட்ட லட்சணையும், விட்டிடாததும் - விடாத லட்சணையும், உபயமும் - விட்டுவிடாத லட்சணையும், என - என்று, திரிவிதத்தில் - மூன்று வகையில், (அடங்குவதாக, அதனை இசைப்பர் - கூறுவர், அது - அவ்விலட்சணையின் இயல்பினை, அறைவாம் - கூறுகின்றோம். மற்று - அசைநிலை.

73. மஞ்சு கூப்பிடுது - மஞ்சு கூப்பிடுகின்றது, என்றல் போலவும் - என்று கூறுதல் போலவும், வடபகீரதி - வடக்கேயுள்ள கங்கையில், விஞ்சுகோஷமது - பெரிய இடைச்சேரி, உள்ளது - இருக்கின்றது, என்றல் போலவும் - என்று கூறுதல் போலவும் (இருப்பது), விட்ட லக்கணையாவது—விட்ட லட்சணைக்கு உதாரணமாவதாம்.

74. சிவலை நின்றது-, வெள்ளை போயினது - வெள்ளை போயது, என்று செப்புதல் போல - என்று கூறுதல் போல (இருப்பது), விடாத லக்கணை யென்று - விடாத லட்சணைக்கு உதாரணமா மென்று, நீ கருத்திலே - நீ உன் மனத்திலே, கவலையின்றி - கலக்க மில்லாது, கொள் - கொள்ளக் கடவாய்.

75. மேவும் பொருந்திய, விட்டுவிடாத லக்கணை விட்டுவிடாத லட்சணையின் மெய்மையை உண்மையைப் பொருளை யாமதனின் றாமென்றனம். அந்த வித்தேவதத்த னென்னும் பொருட்படி சோயந்தேவதத்த னென்னும் (உதாரண வாக்கியத்தின்) பொருளின்படி (தத்துவமசி மகாவாக்கியத்தின்பொருளை), தீர முடிவாக சிந்தைப் படுத்திடு சிந்தித்துணரக் கடவாய்.

76. விட்டலக்கணைதனையும் விட்ட லட்சணையை யும், விட்டு நீக்க விடாதலக்கணைதனையும் விடாதலட்சணையையும், விட்டு நீக்கு விட்டுவிடாத லக்கணையால் விட்டுவிடாத லட்சணையினாலும் தத்துவமசி மகாவாக்கியத்தின் பொருளைக் கொள்ளுவாயாயின் உனக்கு அப்பொருள், விளங்க - செவ்வைபாக விளங்கும் விளங்குவதாம் (என்றனர், என, சசிவன்னன்)

77. (சோயந்தேவதத்தனென்னும் வாக்கியத்துள்) போது காலத்தையும், மேவியதேசம் பொருந்திய தேசத்தையும் விட்டு (அறிந்து) நீக்கி ஒரு புருடனை தேவதத்தனென்னு மொரு புருஷனை, கொளுமாறுபோல கொள்ளும் விதம்போல் (தத்துவமசி மகாவாக்கியத்துள்) ஓதும் முற்கூறிய, ஈருடல உபாதி யிரண்டனையும், கண்டு விட்டு - அறிந்து நீக்கி, அத்துணைமை அம்மகாவாக்கியத்தி னுணையைப்பொருளை, காண - அறிய, உரைத்திடு கூறல்வேண்டும் (என்றனன், என,)

துவம் அசியென்னும் மூன்று பதங்களின், முடிபொருளாவதே - முடிவான பொருளாவதாம். (என்று.)

௮௪. கருணைநிதி - கருணாநிதியாகிய மாநந்தி பாராயண முனிவர். நிலைப்பொருள் - மலரகிதமான ஜீவப்பிரம்ம ஐக்கியத்தை, சுருதிநெறியில - சுருதி மார்க்கமாக, பெற - பெறும்படி, கூறுமே சொல்லவே, (சசிவன்னன்), அந்நிலைப்பொருள் - மலரகிதமான (அந்த) ஜீவப்பிரம்ம ஐக்கியத்தை, பெறுதல - பெறுவது, அருமைத்தெனக் கூறி - அருமையானதாமென்று கூறி, அடி வீழ - (அம்முனிவரது) திருவடியின் கண் விழுந்து வணங்க. (பின் அம்முனிவர)

௮௫. தமரககலைக்கு - ஒலிவடிவமாகவுள்ள வேதத்திற்கு அளவு தெரிவற்ற - அளவு தெரிதற்கரிய, தற்பொருளதனை - ஆத்மப் பொருளை, சருவான் - (சசிவன்னனுக்குத்) தெரிவித்தற் பொருட்டு, அமரர்க்கு - தேவர்க்கும், அளப்பரிய - அளவு செய்தற்கரிய, பதசர்புனர்கொடு - (தமது) சிறந்த பாததீர்த்தத்தால், (அவனை), அபிடேசர் - மங்களஸ்நானம், செய்து - செய்வித்து.

௮௬. உடற்பகைகள் - உடம்பைப்பற்றி வருந்துன்பங்கள், தலைசாய - கெடும்படி, மா - பெருமை பொருந்திய, தவளப் பொடி - வெண்மையான விபூதியை, கவசமென விட்டு - (அவனுடம்பில்) கவசமிட்டாற்போலத் தரித்து, பவளத்தில் - பவ

ளம்போலச் சிவந்துள்ள தமது திருவாயில், வைத்த - (தாப)
வைத்துண்ட, அமிர்தினின் மிச்சில் உணவின் சேஷத்தை,
இனிய பரிவோடு ஒளியையான அன்போடு ஊட்டு - (அவ
னுக்குக்) கொடுத்து

உத்தத்து (சசிவணனன) மோரான் (தந்தை
மெசட்த) உடல் பொருளோயிர் - உடல் பொருள் ஆவி மூன
றையும், கைக்கொடு எறுக்கொண்டு உச்சியினை
(அவனது) முடியினை நீது தத்தலத்தை - (தமது) திருவடி
யிரணையடியர், ஆட வைத்த நா, (சசிவணனன), ஒருபத்ட
அத்திருவடி யிரணையடியர், உருகைத்தலத்தொரு - (தனது)
இரண்டு காரங்களாலும், ஒரு போதொடே ஒரு புஷ்பத்
துடனே, மரவ பிடித்துக்கொண்டு, (அனபு பயரக விருந்
தான், பின் அமுதனிவா சசிவணனனும் ந,)

௨௮ புலக்கண திருசியமாகா ஒழிய - நீங்கவும், உப
நீட்டதப்பொருள் மெதரிய உயர்ந்த பொருளாகிய திருகதவின
தர்சன முண்டாகவும், உள ஞானமா விழியைய உள்விழியாா
வைவை, கொடுத்து - தந்து, முப்பத்த பொருளும் - (தத -
துவம் - அசி யெனனும்) மூன்று பதங்களின் பொருள்களையும்,
வெளியாக - விளக்கமாக, மொழியென - நீ கூறக்கடவா யென்று
கூற (சசிவணனன)

89. இறை - அம்முனிவர், கவில் நீங்கவே - கூறிய ஒழுங்கின்படியே, நனவை - சிவசாக்கிரத்தை, துவக்கி - (முதலாகத்) தொடங்கி, முடி - முடிவாகவுள்ள, துரியத்தை - சிவதுரியத்தை, முற்ற - (அவை) முற்றும், மனவாககமற்ற - மனவாக்கு மொழிந்த, அநுபவம் - (தனது) அநுபவத்திற்கு, (வந்தமையின்), உற்ற - (அவ்வாறவை) வந்த, சிற்கனவின் - (தனது) ஞான சொப்பனத்தின், வலி - வலிமையினால், ஓதும் - கூறுவானாயினன்.

90. புறம்புள புலன்களும் - புறக்கரணங்களும், அந்தக்கரணம் - அகக்கரணமும், (ஆகிய), யாவையும் - எல்லாக்கரணங்களும், புரணமாக - செவ்வையாக, வழங்கிடம் - (தத்தம் வியாபாரங்களைச்) செய்யுங் காலத்தை, நனவென - (சிவ)சாக்கிரமென்று, கண்டேன் - (நான்) கண்டனன். (புறம்புள - வெளியேயுள்ள.)

91. புறம்புள புலன் - புறக்கரணங்கள், கெட - (தத்தம் வியாபாரங்களைச் செய்வது முற்றும்) கெட, அந்தக்கரணமியாவையும் - அந்தக்கரணம் நான்கும், புரணமாக - செவ்வையாக, வழங்கிடம் - (தத்தம் வியாபாரங்களைச்) செய்யுங் காலத்தை, கனவென - (சிவ) சொப்பனமென்று, கண்டேன்—.

92. இது - (சாக்கிரத்திலிருப்பவர்) இந்த நிலைமை, மரண மாகிய தசையெனும்படி - மரண நிலைமைக்கு ஒப்பாமென்று கூறும்படி, மனாதி காரணமியாவையும் - மனமுதலிய வெல்லாக் காரணங்களும், இறந்துள-மாண்டுள்ள, சுழுத்தியும் - (சிவ) சுழுத்தியையும், கண்டேன்—.

93. எக்காரணமும் - எந்தக்காரணமும், எஞ்சலின்றி - மிஞ்சாது, இறந்து - மாண்டு (போக), இருண்டிருந்த - இருள் மயமாயிருக்கின்ற, துஞ்சல் - சுழுத்தியில், உணர் (அவ்விருளை) அறிகின்ற, போதமாந்துரியமும் - அறிவாகிய துரியத்தையும், (சிவதுரியமென்று), கண்டேன்-. அங்கு - அசை நிலை.

94. போதமாகிய துரியம் - ஞான வடிவமாக விளங்குகின்ற துரியவடிவச் சிவனாகிய பரன், ஓர் துளக்கமற்று - ஒருசலனமுமில்லாமல், அனைத்தின் - சர்வப் பிரபஞ்சத்திற்கும், சரியதாயிருந்திடம் - சாட்சியாக விளங்குங் காலத்தை, பரன் கனவென - பரசாக்கிரமென்று, கண்டேன்—.

95. (பரன்) புணர்ந்த - பொருந்தியுள்ள, இச்சகத்து - இப்பிரபஞ்சத்திற்கு, (சாட்சியாக விளங்குவதை), ஒழித்து - நீக்கி, உணர்-(அவற்றிற்குச்) சாட்சியாக விளங்கிய, போதமாந்தனையே-ஞான வடிவமாகிய தன்னையே, உணர்ந்த அது - அறிந்துள்ள அக்காலத்தை, பரன்கன வெனும் படி - பரசொப்பனமென்று

அறிஞர் கூறுகின்றபடி, உணர்ந்தேன் - கண்டனன். மற்று — அசைநிலை

96. (பரன்) சான்று (யான்) சாட்சி, சாக்கியம் - (இவை) சாட்சியம், (என்று பாவிக்கும் பாவனை), இறந்திட - இறந்துபோக, தானிருந்தமையும் - தானிருப்பதும், தோன்றுறுவிடம் - (தனக்குத்) தோன்றுமுள்ள காலத்தை, பரன சுழுத்தியதென பரசுழுத்தி யென்று, துணிந்தேன் - துணிவாகக் கண்டேன.

97. மரித்ததென்று - (மாயாப் பிரபஞ்சம்) நசித்ததென்று, உணர்ந்துரைத்ததும் - அறிந்து சொல்லியதும், மரித்த விடந்தனிலே - (அது) நசித்தவிடத்திலே, (தான் நசியாதிருப்பதை), தெரிந்த(து) அறிந்ததும், (ஆகிய), போதமேது - அறிவேதோவா, அது - அவ்வறிவு, (ஆகவிளங்குதலே), (பரனுக்கு), பரன் துரியமாய் - பரதுரியமாக தெளிந்தேன் - தெளிவாயறிந்தனனே.

98. இறையெனும்-சிவமென்று சொல்லப்படும், பொருட்டுரியமே - துரியப் பொருளே, என்னை யாண்டவனே - என்னை யடிமை கொண்டவனே, (பரன்), மறையினந்தம் - வேத முடிவின்கணுள்ள, நற்பதப்பொருள் - சிறந்த தற்பதத்தின் இலக்கியார்த்தமாகிய சிவம், (ஆகவிளங்குதலே அவனுக்கு) நனவெனு-(சிவ)சாக்கிர மென்று, மதித்தேன் - நிச்சயித்தறிந்தனன்.

99 (சிவமாகிய பரம்பொருளின்) பண்டை — அநாதியாகத் தொடர்ந்து வருகின்ற) விச்சுவ வாதனைப்பழுது — உலக வாசனையென்னும் பிரபஞ்சம் போய் நீங்கப்பெற்ற முழுதும் (திருசியம்) அனைத்தும் கண்டு அறிகின்ற கண்ணமைதயாகிய (நிலை) அறிவுடையதாக விளங்கிய நிலை (அவனுக்குத்) கனவதும் (சிவ சொப்பனா ரென்பதையுங் கண்டேன்—

100 (பாசுபச சிவமாய் விளங்குஞ் சீவன்) காட்சியானை யும் அறிவொருங்கினைத்தும், கண்ணதா அறிவேயாக (விளங்க) அகத்தும் அவ்வாறு விளங்கும் அறிவுமாகாரந்த (தானுக்) விளங்குகின்ற சாட்சியாகிய பேண்மையான, அகோர சுடுஷயறிதாங்கம் தசிலமை (அவனுக்கு) உறக்கமாய (சிவ) சுழுத்தியாக நிதம்தன—

101 அருந்தவா - அருமையாகிய தவத்தை யுடையவரே மறைப்பந்தா - மறை முடிவிற்கு, அகோசாரத்தனில் - அகோசர மாயுள்ள விடத்தில் நீ - தேவரீர், இருந்தவாறு - இருக்கின்ற விதத்தையும் அறிவித்தவாறு - (அதனை) அறிவித்த விதத்தை யும் எங்ஙனம் பிசைப்பேன் - எவ்வாறு கூறுவேன் ஆம் சார்டை

102 எம்பிரான் எமது தருமூர்த்தியே, இடந்தொறு மிடந்தோறும் - (சிவசாகிரமுதலிய) அவஸ்தைதோறும

அவஸ்தை தோறும், அதுவதுவாய் - அவ்வவ்வவஸ்தை யாகார மாய், தம்பிரான்-, நடஞ்செயும் வகை - திருநடனஞ் செய்யும் விதத்தை, சாற்றுமா றறியேன் - சொல்லும் விதம அறியாதிருக கின்றேன்.

103. ஆவியே - எனதுயிராகிய குருமூர்த்தியே, உனக்கு - தேவரீரக்கு, அடியேன் செய் கைம்மாறு - செய்யவேண்டிய பிரதியுபகாரம், என்னெனின-யாதென்று ஆலோசித்து நோக்கின், அதுதானும் - ஆலோசித்து நோக்கின்ற அதுவும, பண்டே - முன்னமே, உன்னுடையதாம - தேவரீரது பொருளாக விருக்கின் றது, பாவியேன் - (அதனால பிரதி யுபகார மின்ன தென்பதை) எண்ணுதற குரியவனுகா திருக்கின்றேன்.

104. என தாக்கையுள்ள வளவும் - என துடம்புள்ள வள வும், ஆவல் செய்து - அன்புகொண்டு, நின்னடியார்க்கு - தேவரீரது அடியார்க்கு, ஏவல் செய்வதே யன்றி- ஏவற்பணியைச் செய் வதையே யல்லாமல், மற்றொன்றும் - வேறொன்றையும், நானறி யேன் - நானறியாதவனு யிருக்கின்றேன்.

105. இறவில் - அழிதலில்லாத, எப்பதமும் - எத்தன்மைய தாய பதவியையும், பெற - (யான்) பெற, வேண்டிலேன் - விரும்புகின்றேனில்லை, (ஆனல்), நின் திருப்பணி செய - தேவரீரது திருப்பணியைச் செய்ய, பெறின் - பெறவேனுயின். என்

று - எப்போதும், பிறவி - (இவ்விதமான) பிறவியையே, வேண்டுவன் - விரும்புகின்றேன்.

106. அவன் - அச்சசிவன்னன், என்று - என்றிவ்வாறு கூறி, பலகால்விழும் - (மாகந்தி பராயணமுனிவாது திருவடிகளில்) பல முறைவிழுந்து வணங்குவான், எழும் - எழுந்து நிற்பான், தொழும் - கைகூப்பி வணங்குவான், அழும் - (வீணாய்க கழிந்த தன்வாழ்நாளைக் குறித்து) அழுவான், புரியும் - (அம்முனிவரைத்) துதிசெய்வான், இனி யான் என்னை - இனியான் (செயவது) யாது (என்பான்), நின்று - இந்நிலையில் நின்று, அன்பினெடு - அன்பினோல், நெஞ்சுருகி - மனமுருகி, பலவாக - பலவாறாக, (தன் குருபக்தியை), உரைசெய்யும் - கூறிக் கொண்டிருந்தனன்.

107. எட்டில் - சுருதி விசாரத்தால், (உண்டாய), அறிவின்றி - ஞானமுமில்லாது, இறைதன்னில் - சற்குருவி னனுக்கிரகத்தால், (உண்டாய), அறிவின்றி - ஞானமு மில்லாது, இவ்வுடமபினுடனே - இம்மானுட தேகத்தோடே, வீட்டினுறைவானை - மோட்சத்திலிருக்குஞ் சசிவன்னனை, இனி வீடுபெறு மென்பது - இறந்தபின் மோட்சமடைவானென்று, விளம்புகிலம் - யாம் கூறமாட்டோம்.

108. வஞ்சவலியால் - (சசிவன்னனது) வலிய தீவினையின் பெருக்கத்தால், நரகில் வீழ்-(சுவர்க்கத்திலிருந்து) நரகத்தில்

வீழ்ந்துகிடந்த, பிதிரர் அடைய - (இவனது) பிதிர்க்கள் யாவ
ரும், அந்நரகு பாழ்பட - அந்தநரகம் பாழாக, இவன் வநசை
வலியால் - இவனடைந்த தத்துவஞானத்தின் மகிமையால், சுரா
திபர்கள் - தேவர்களின் அதிபர்கள் (வாழும்), மேலுலகம் - புண
ணியலோகத்தில், ஏறினா - குடியேறினார்கள்.

109. இவன் தொழில் - இச்சசிவன்னன் செய்த தரு
பணிவிடையின் சிறப்பு, தேவரும் - தேவராலும், மனித
ரும் - மனிதராலும், வியந்து - (அளவிட்டு) வியந்து, உரை
செய்யப்படுவதோ - சொல்லப்படுவதாமோ, (ஆகாதாம்), மூவ
ரும் - மும்மூர்த்திகளும், முடியால் வணங்கி - சிரசால் வணங்கி,
அவனது ஏவல் செய - அவனது ஏவற்பணியைச் செய்ய, முந்து
றுவா - (நானென்று) முற்பட்டு நிற்பாராயினர்.

110. ஞானியை - ஆத்மஞானியை, நரன்சுர னெனாது -
மனிதனென்றும் தேவனென்றும் கூறாது, ஒழிக - விடுக,
வேதமுடிவு - வேத சிரசாகிய உபநிடதங்கள், நாதன் - பர
மேசுவரன், ஞாலமுய - உலகத்தாருய்தற்பொருட்டு, அரு
ளால் - கருணையால், மேனியது கொண்டு - மானுட வடிவங்
கொண்டு, தனைநல்க-(அதிகாரி புருஷர்க்குத்) தன்னைக்கொடுக்க,
வருமென்று - வருகின்றானென்று, அறையும் - கூறுகின்றன.

சசிவன்னபோத பதவுரை

முற்றுப் பெற்றது.

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு திருவடி வாழ்க.

மகாஉ கோபாலாய,

[illegible]

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 13 | 6 | முபாபம | முபாயம் |
| 16 | 7 | மைந்தர்க்குறு | மைந்தற்குறு |
| 21 | 18 | முனிவரத | முனிவரது |
| 50 | 20 | ாதாவதொன் றனை | யாதாவதொன் றனை |
| 52 | 6 | யாவெர | யாரே |
| 59 | 19 | வோவருளு | தோவருளு |
| 63 | 15 | தள்னை | தன்னை |
| 72 | 17 | (இங்ஙனமே, | இங்ஙனமே,) |
| 102 | 21 | அந்தககரணை | அந்தககரணை |
| 117 | 6 | படைந்துள்ள | யடைந்துள்ள |
| 135 | 18 | சதத்திற்கு | சத்தத்திற்கு |
| ,, | 20 | சதத்திற்கு | சத்தத்திற்கு |
| 143 | 13 | விளங்குவதாம். | ய்ளங்குவதாம். (என்றனர்) |
| 156 | 12 | யங்களோடே | யங்களொடே |
| 200 | 12 | விழிப்பட்ட | விழிபட்ட |

மகாமகோபாத்யாய, [illegible]
வே. சாமிநாதையர் நூ[illegible]